வெளியீடு 1-6-2005 Issued 1-6-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


**வியாழக்கிழமை, மார்ச் 10, 2005—தொகுதி 71—எண் 1**

**Thursday, the 10th March, 2005 —Volume 71—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

327/2005

10-3-2005

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xv |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. இரங்கற் குறிப்பு-** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 1-2 |
| **2. அறிக்கைகள் அளித்தல்-** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 2 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 2 |
| **3. வரவு-செலவுத் திட்டம், 2005-2006, பொது விவாதம்**—தொடர்ச்சி | 2-130 |
| திரு. லா. சந்தானம் | 2-9,12-18, 31-36 |
| திரு. கே.வி. முரளிதரன் | 36-54,55 |
| திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 55-60,64-70 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 70-72,74--77, 81-85,87,89-97 |
| திரு. ஜி.கே. மணி | 98-112,115, 117-130 |

பக்கங்கள்

4. **அரசினர் தீர்மானம்** -

விதி 32-ஐத் தளர்த்தல் 131

5. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** - 132



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. **உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

226635

10. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. **போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. **வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, நகராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

\- - -

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. | **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. | **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. | **Minister for Food and Co-operation** | .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:** Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. .. ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. .. தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. .. தொட்டியம்
5. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
6. அய்யாறு வாண்டையார், திரு. கே. .. திருவையாறு
7. அரசன், திரு. ப. .. அறந்தாங்கி
8. அருணாசலம், திரு. அ. .. வரகூர் (செ.வ.)
9. அருள், திரு. பி.எஸ். .. புவனகிரி
10. அழகம்மாள், திருமதி வி. .. தலைவாசல் (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. .. பெரணமல்லூர்
13. அன்பழகன், திரு. கு. .. நிலக்கோட்டை (செ.வ.)
14. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
15. அன்பழகன், திரு. ஜெ. .. தியாகராய நகர்
16. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
17. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
18. அன்வர் ராஜா, திரு. அ. .. இராமநாதபுரம்
19. ஆண்டிவேல், திரு. ப. .. வேடசந்தூர்

| | | |
|---|---|---|
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |
| 21. | ஆறுமுகம், திரு. த. | .. திருவொற்றியூர் |
| 22. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 23. | ஆஸ்டின், திரு. | .. நாகர்கோவில் |
| 24. | இரவிராஜ், திரு. கோ. | .. திருத்தணி |
| 25. | இராசேந்திரன், திரு. சி. | .. திருவோணம் |
| 26. | இராசேந்திரன், திரு. சோ. | .. கோவில்பட்டி |
| 27. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடனை |
| 28. | இராமச்சந்திரன், திரு. எஸ். | .. கலசப்பாக்கம் |
| 29. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 30. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 31. | இராமு, திரு. ந. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 32. | இராம் பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 33. | இராஜசேகர், திரு. மா. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 34. | இராஜரெத்தினம், திரு. ப. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 35. | இராஜா, திரு. டி.கே. | .. திருப்பத்தூர் |
| 36. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. பத்மநாபபுரம் |
| 37. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. ஆலங்குளம் |
| 38. | இலட்சுமணன், திரு. கே.என். | .. மயிலாப்பூர் |
| 39. | இளவழகன், திரு. ப. | .. அரியலூர் |
| 40. | இளையகண்ணு, திரு. கா.தி. | .. ஏற்காடு (ஆவா.) |
| 41. | இன்பத்தமிழன், திரு. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 42. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ) |



| | | |
|---|---|---|
| 43. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. திருவல்லிக்கேணி |
| 44. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 45. | உமாதேவன், திரு. கே.கே. | .. திருப்பத்தூர் |
| 46. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. செய்யாறு |
| 47. | ஏழுமலை, திரு. செ. | .. செஞ்சி |
| 48. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |
| 49. | கணேசன், திரு. ஆர்.டி. | .. தேனி |
| 50. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 51. | கணேசன், திரு. வி. | .. மங்களூர் (செ.வ.) |
| 52. | கண்ணன், திரு. ஏ.எஸ். | .. பொன்னேரி (செ.வ.) |
| 53. | கந்தசாமி, திரு. க.ரா. | .. சத்தியமங்கலம் |
| 54. | கந்தசாமி, திரு. கா. | .. குன்னூர் (செ.வ.) |
| 55. | கருணாகரன், திரு. கே.சி. | .. சிங்காநல்லூர் |
| 56. | கருணாநிதி, திரு. மு. | .. சேப்பாக்கம் |
| 57. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 58. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 59. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | .. குளத்தூர் (செ.வ.) |
| 60. | கலாவதி, திருமதி கு. | .. சேந்தமங்கலம் (ஆவா.) |
| 61. | கனகதாரா, செல்வி சி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 62. | கனிதா சம்பத், திருமதி எஸ். | .. திருப்போரூர் (செ.வ.) |
| 63. | காசாம்பு பூமாலை, திருமதி | .. சங்கராபுரம் |
| 64. | காமராஜ், திரு. மே.ப. | .. தாரமங்கலம் |
| 65. | கார்த்தி, திரு. மு. | .. சேலம்-2 |

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
128. துரைமுருகன், திரு. .. காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
131. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
138. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
154. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

| | |
|---|---|
| 158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | .. ஸ்ரீரங்கம் |
| 159. பாலபாரதி, செல்வி க. | .. திண்டுக்கல் |
| 160. பாலன், திரு. எஸ்.எம். | .. லால்குடி |
| 161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. சேரன்மகாதேவி |
| 162. பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |
| 163. புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 164. பூபதி மாரியப்பன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 166. பெருமாள், திரு. என்.கே. | .. விளாத்திகுளம் |
| 167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 169. பொன்னம்பலம், திரு. டி.பி. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 170. பொன்னையன், திரு. சி. | .. திருச்செங்கோடு |
| 171. போளூர் வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 172. மகாலிங்கம், திரு. எஸ். | .. அவினாசி (செ.வ.) |
| 173. மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 175. மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி.கே. | .. பெண்ணாகரம் |
| 178. மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. கபிலர்மலை |
| 179. மல்லிகா சின்னசாமி, திருமதி | .. முசிறி |
| 180. மாணிக்கராஜ், திரு. எஸ். | .. நாங்குநேரி |



| | |
|---|---|
| 181. மில்லர், திரு. அ. | .. கூடலூர் |
| 182. முரளிதரன், திரு. கே.வி. | .. தளி |
| 183. முருகவேல் ராஜன், திரு. க. | .. வந்தவாசி (செ.வ.) |
| 184. முருகேசன், திரு. ஆகு. | .. ஆத்தூர் |
| 185. முனுசாமி, திரு. கா.பூ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 187. மோகன், திரு. ப. | .. சின்னசேலம் |
| 188. யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 190. ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 192. ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. திருமயம் |
| 193. ராதாரவி, திரு. | .. சைதாப்பேட்டை |
| 194. ராமசாமி, திரு பி.சி. | .. மொடக்குறிச்சி |
| 195. ராமராஜ், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 196. ராம்குமார், திரு. எம். | .. பாபநாசம் |
| 197. ராஜகோபால், திரு. ஆ. | .. சிவகாசி |
| 198. ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 199. ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 200. ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 201. ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 202. ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |
| 203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. பேரூர் |

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-I |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஓரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 26, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 10, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

நம்மால் முடியுமா என்று மனத்தளர்ச்சி அடையாமல், முடியும் என்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் அதுவே பெரிய வலிமையாக அமையும்.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

### 1. இரங்கற் குறிப்பு

#### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான திரு. எம். பழனியாண்டி அவர்கள் 8-3-2005 அன்று மறைவுற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பழனியாண்டி அவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 முதல் 1957 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1957 முதல் 1962 வரை மக்களவை உறுப்பினராகவும் 1986 முதல் 1992 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 256 முதல் 259 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 165 மற்றும் 166 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2005–2006, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய



உளப்பூர்வமான வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவில் பல்வேறு முத்தான திட்டங்களைக் கோர்த்து சிறந்ததொரு முத்து மாலையாக தமிழக மக்களுக்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் சூட்டியிருக்கிறார்கள், அளித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது என்று நான் கருதுகிறேன்.

இங்கு பல்வேறு நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக அரசு ஊழியர்களுக்கு பல்லாண்டுகளாக செய்யப்படாமல் இருந்த அரிய அறிவிப்புகள் எல்லாம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இதை நான் சொல்லவில்லை. இன்றைக்கு அந்தச் சங்கத்தினுடைய, அரசு ஊழியர்களுடைய சங்கத்தினுடைய தலைவராக இருக்கின்றவர் திரு. சூரியமூர்த்தி அவர்கள், அவர் பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியிலே இதைத் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பரிதி, என்ன?

**திரு. லா. சந்தானம்:** இந்த..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, என்ன சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுவதற்கு உங்களிடம் வாய்ப்புக் கேட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது நேற்றே திரு. மு.க. ஸ்டாலினுடைய வாய்ப்பு முடிந்துவிட்டது.

**திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, இல்லை, அப்படி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று பெயர் இருந்தது. நேற்று நீங்கள் போய்விட்டீர்கள். அத்தோடு முடிந்துவிட்டது.

**திரு. பரிதி இளம்வழுதி:** இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே செய்யப்பட்ட முடிவின் அடிப்படையிலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்கள் இன்றைக்குப் பேசி, நாளைக்கு உங்கள் கட்சியின் சார்பாக நீங்கள் திரு. ஸ்டாலினை பேசச் சொன்னாலும் சரி, (குறுக்கீடு) பேராசிரியரைப் பேசச் சொன்னாலும் சரி, யார் பேசினாலும் சரி, இன்றைக்கு அந்த வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) திரு. சந்தானம்.

*முற்பகல் 10-05*

**திரு. லா. சந்தானம்:** இன்றைக்கு யார் பாராட்டினாலும், பாராட்டவில்லையென்று சொன்னாலும், அந்தச் சலுகையைப் பெறுகின்ற அரசு ஊழியர்களினுடைய சங்கத் தலைவர் திரு. சூரியமூர்த்தி அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே கூறியிருப்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பட்ஜெட்டில் 1,010 கோடி ரூபாய்க்கு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு சலுகைகளை அறிவித்துள்ளனர். இந்தியாவில் முதல் மாநிலமாக தமிழகத்தை உருவாக்கப் பாடுபடும் முதலமைச்சருக்கு உறுதுணையாக இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசிடமிருந்து வாதாடி, போராடிப் பல சலுகைகளைப் பெற்றாலும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து மத்திய அரசு வருமான வரி வசூலிக்கிறது. மத்திய அரசின் வரிவிதிப்பு மாத ஊதியம் பெறுவோரை குறிவைத்துத் தாக்குவதுபோல் உள்ளது. மத்திய அரசு அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி இந்த அரசினுடைய திட்டங்கள், அரசு ஊழியர்களுக்காக பல்வேறு சலுகைகளை அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கின்றது.

அதுபோல இன்றைக்கு நாம் அனைவரும் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில், ஏழை எளிய மக்களுக்கு பொது விநியோக முறையிலே வழங்கப்படுகின்றது அரிசி. அந்த அரிசியானது தமிழகத்தில் மட்டும்தான் எல்லோருக்கும் ஒரே விலையிலே மூன்று ரூபாய் ஐம்பது காசுக்கு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற எந்த மாநிலமாக இருந்தாலும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், மேலே உள்ளவர்கள் என்று பாகுபாடு செய்து, பல்வேறு விலைகளிலே அரிசியை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதிலும்கூட, வறுமைக்கோட்டிற்குக் கீழாக உள்ளவர்களுக்கு மிகக் குறைந்த விலையிலே அரிசியை விநியோகம் பண்ணுகின்ற மாநிலங்களில், முதல் மாநிலம் தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை யாரும் மறுத்துவிட முடியாது.



அதுபோல, தமிழகத்திலேயிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பயன் அடைகின்ற வகையில் இலவச மின்சாரம். அது இந்த மாநிலத்தில்தான் நடைமுறையில் இருக்கிறது. இப்பொழுது ஆந்திராவில் வழங்கப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அங்கு வழங்குகிறார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு அனைத்து விவசாயிகளும் பயன்பெறுகின்ற அளவிற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலே தமிழகம் முதல் மாநிலமாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது.

அதுபோல, விவசாயிகள் பிரச்சினையாக இருந்தாலும் சரி, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, எத்தனை நல்ல காரியங்களை விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்திருக்கிறார்கள் என்று எண்ணிப்பார்க்கும்போது, அந்த மக்கள் எல்லாம் நிறைவோடு நன்றிகூறுகின்ற அரசாக இந்த அரசு அமைந்திருக்கின்றது. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே 310 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளினுடைய கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. வறட்சியின் கொடுமையால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நமது காவிரிப் பாசன விவசாயிகளுக்கு எப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டன என்பதை இந்த மன்றம் அறியும். அதுபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு 30 கிலோ அரிசி இனாமாக வழங்கப்பட்டதையும் தமிழக மக்கள் அறிவார்கள். அதுபோல, இன்றைக்கும்கூட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு அவர்களுடைய குறுகிய காலக் கடன்களையெல்லாம் மத்தியக் காலக் கடன்களாக மாற்றி, ஐந்து ஆண்டுகள் தவணை முறையிலே அவர்கள் சிரமமில்லாமல் தங்களுடைய விவசாயக் கடன்களை செலுத்திக்கொள்ளலாம் என்கின்ற ஒரு நிலையை எடுத்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட பல நண்பர்கள் சொல்லலாம், விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்கின்ற கோரிக்கை வைக்கலாம். ஆனால்; இந்த அரசு அதனுடைய சக்திக்கு மீறி அவர்களுக்குச் சலுகை வழங்கியிருக்கிறது. ஆனால், மத்தியிலே இருக்கின்ற அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லவில்லை, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்துக்கொண்டிருக்கின்ற தோழமைக் கட்சியாகயிருக்கின்ற எனது அருமைச் சகோதரர் பழனிசாமி அவர்கள் இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவர், A.I.T.U.C.-யினுடைய தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் குரு[illegible] [illegible]ப்த [illegible] சென்னையிலே லயோலா கல்லூரியிலே ஒரு [illegible]விலே கலந்து[illegible]

பேசுகின்றபோது, "இந்த மத்திய பட்ஜெட், உயர்தர மக்களை மட்டும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய பட்ஜெட் வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் வாடும் ஏழை எளிய மக்களுக்கு ஏற்ற வகையில் இல்லாமல் உயர்தர மக்களுக்கு மட்டுமே பயன்படுகின்ற அளவிற்கு உள்ளது, தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லவில்லை, இன்றைக்கு மத்திய அரசிலே பங்கு பெற்றிருக்கின்ற அருமைச் சகோதரர் குருதாஸ் குப்தா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் இருக்கின்றவர்கள், தமிழகத்திலே இந்த நிதிநிலை அறிக்கை, ஒரு தேர்தல் நிதிநிலை அறிக்கை என்று கூசாமல் சொல்கிறார்கள் என்று சொன்னால், அதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். மக்கள் தெரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள். மக்களை எளிதாக ஏமாற்றிவிட முடியாது என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-10*

இன்றைக்கு இந்தியாவிலே தமிழகத்தில் மட்டுமல்ல, அத்துணை மாநிலங்களிலும் இருக்கின்ற விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையை போராட்டத்தோடுதான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவிலே சென்ற காலங்களிலெல்லாம் பருத்தி விவசாயிகள் எத்தனையோ பேர் தாங்கள் பெற்ற கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டார்கள் என்ற செய்தியெல்லாம் நமக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலே இருக்கின்ற ஒட்டுமொத்த விவசாயிகளும் கவனிக்கப்பட வேண்டும்; அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அதைத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியிருக்கிறது. ஒரு நேரத்திலே மாண்புமிகு திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இந்திய நாட்டிற்குப் பொறுப்பேற்றவுடனே விவசாயிகளுடைய வறுமையையெல்லாம் கருத்தில் கொண்டு இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு, 10 ஆயிரம் ரூபாய் வரை பெற்றிருக்கிற கடன்களைத் தள்ளுபடி செய்தார்களே, அப்படி இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசு தள்ளுபடி செய்வதற்கு, இங்கு தோழமையாக இருக்கின்ற கட்சிகள் ஏன் வலியுறுத்தக் கூடாது? (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் வற்புறுத்தக் கூடாது? தமிழ்நாடு அரசை மட்டும் இடித்துரைக்கின்ற நீங்கள், மத்தியிலே இருக்கின்ற அரசையும் கேட்பதற்குக் கடமைப்பட்டவர்கள். அப்போதுதான் தமிழ்நாட்டு மக்கள் உங்களை ஏற்றுக்கொள்வார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கு இருக்கின்ற கூட்டணிக் கட்சிகள்



ஒருமனதாக, ஒற்றுமையாக கூட்டணியிலே உள்ளசுத்தியோடு பங்கு வகிக்கிறதா என்று சொன்னால், நான் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்வதற்கு விரும்பவில்லை. வள்ளுவர் அவர்கள் குறிப்பிடுவார்கள் (குறுக்கீடு) என்னுடைய கருத்து, அதை யாரும் மறுக்க முடியாது. என்னுடைய கருத்தை நான் கூறுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள், நான் ஏற்கெனவே பார்த்துக்கொண்டே இருக்கிறேன், நீங்கள் உச்சபட்ச குரலில் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் ஒலிபெருக்கியிலே பேசுவதைவிட உங்கள் குரல்தான் இங்கே காதிலே விழுகிறது. கொஞ்சம் sound, volume-ஐக் குறையுங்கள். குறைத்துப் பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்று சொன்னான் வள்ளுவன். அந்த வள்ளுவர் வந்த வழியிலே வந்தவர்கள் அப்படியெல்லாம் இருக்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்கும்போது இன்றைக்குக் கூட்டணிக் கட்சிகளுக்குள்ளே ஏற்பட்டிருக்கின்ற சர்ச்சை, எனக்கு அமெரிக்காவை ஆட்டிப்படைத்த Water Gate ஊழலைத்தான் நினைவு கூறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த அநேகமாக ரீகன் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) நிக்சன். நிக்சன் என்பவர், தேர்தல் நேரங்களிலே எதிர்க்கட்சி முகாமிலே உளவு பார்த்தார், அவர்கள் செய்கின்ற செயல்களையெல்லாம் வேவு பார்த்ததன் மூலமாக அவர் அந்த ஊழலிலே ஆட்பட்டு தன்னுடைய பதவியையே இழக்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது. இது வரலாறு. இன்றைக்கு தமிழகத்திலே என்ன நடந்தது? ஒரு கட்சியினுடைய மாநிலத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கூடிய ஒரு கூட்டம், நான்கு அறைகளுக்குள்ளாக கூட்டப்பட்ட அந்தக் கூட்டம். அதனுடைய செய்தி, அந்தக் கூட்டணிக் கட்சிகளினுடைய தலைமைக்குச் செல்கிறது. அதனுடைய விவரங்களை உடனடியாக ஆய்வு செய்வதற்கு அவர்களுடைய உயர்மட்டக் கூட்டம் கூட்டப்படுகிறது. மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் அவசரமாக அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கூட்டத்திலே நான் மதிக்கின்ற ஒரு தலைவர் சொல்கிறார், நாங்கள் அண்ணாவினுடைய ஆட்சியை அமைப்பதிலே திடமான சிந்தனையோடு இருக்கிறோம்; ஆனால், காங்கிரஸ்காரர்கள் காமராஜர் ஆட்சியை அமைக்க

வேண்டுமென்ற சிந்தனையிலிருந்து மாறுபட்டு கூட்டணி ஆட்சி என்று சொல்கிறார்களே என்று புலம்புகிறார். பதறுகிறார்; அந்தக் கூட்டத்திலே வைத்து, அந்தக் கூட்டணிக் கட்சியையே கண்டிக்கிறார் என்று சொன்னால், அந்த முகாமிலே இருக்கிறவர்கள் எப்படி அந்தச் செய்தியை அங்கு கொடுத்தார்கள்? எப்படி அவர்களுக்குள்ளாக இணக்கம் இருக்கிறது என்பதை நீங்கள்தான் அறிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும். அவர் சொல்கிறார், அண்ணாவின் ஆட்சியை அமைப்பதிலே நாங்கள் திடமாக இருக்கிறோம் என்று சொல்கிறார். நான் கேட்கிறேன், இன்றைக்கு நடந்துகொண்டிருப்பது யாருடைய ஆட்சி? அண்ணாவினுடைய பெயரையே தாங்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்; (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணாவின் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தமிழகத்து மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு உண்மையான அண்ணாவின் ஆட்சி நடந்துக்கொண்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, உங்களுக்கு அண்ணாவின் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற சிந்தனை ஏன் வரவேண்டும்? அதுதான் ஏற்கெனவே நடந்துகொண்டிருக்கிறதே என்பதைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-15*

ஒரு நேரத்தில், இந்திய அரசியலில் மாண்புமிகு திரு. வி.பி. சிங் அவர்கள், பாரதத்தின் பிரதமராகப் பொறுப்பேற்றிருந்தபோது, அன்றைக்கு பாரதிய ஜனதா கட்சி அவர்களுக்கு ஆதரவு அளித்துக்கொண்டிருந்தது. அவ்வாறு ஆதரவை அளித்துக்கொண்டிருந்த பாரதிய ஜனதா, மதச் சார்புடைய ஓர் ஊர்வலத்தை நடத்தியது. அந்த ஊர்வலத்தை, மாண்புமிகு திரு. அத்வானி அவர்கள் தலைமையேற்று நடத்திச் சென்றுகொண்டிருந்தார்கள். அந்த ஊர்வலம் அயோத்தியில் நுழையக்கூடாது என்று அன்றைய பிரதமர், அவர்களுக்கு அறிவுறுத்தினார். ஆனால், அதைக் கேட்காமல் நான் ஊர்வலம் செல்வேன்; அதை நீ தடுத்தால், உன்னுடைய ஆட்சிக்குக் கொடுக்கின்ற ஆதரவை நான் திரும்பப் பெற்றுக்கொள்வேன் என்று அத்வானி மிரட்டியபோதும், அன்றைக்கு மனத் திண்மையோடு, என்னுடைய ஆட்சி போனாலும் பரவாயில்லை; இந்தியாவினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டும்; இந்தியாவினுடைய மதச்சார்பற்றத் தன்மையைக் காக்க வேண்டும்; அதற்காக என்னுடைய கொள்கையிலிருந்து நான் சிறிதளவும்



வழுவமாட்டேன் என்று சொல்லி, ஓர் ஆண்டுகூட நிறைவுபெறாத அந்த ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, அத்வானியினுடைய இரத யாத்திரையை நிறுத்தி கைது செய்தாரே வி.பி. சிங், அப்படித்தான் இன்றைக்கு நாங்கள் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்களையும் நினைக்கிறோம். தெளிந்த சிந்தனையாளர், நேர்மையாளர், கொள்கைக்காக எதையும் செய்யக்கூடியவர் என்கின்ற நிலையில், இன்றைக்கு என்ன துயரங்கள் வந்தாலும்கூட உங்கள் கொள்கைக்கு ஆபத்து வரும்போது, வி.பி. சிங் மாதிரி ஆட்சி போனாலும் பரவாயில்லை, கொள்கையை நிலைநாட்டுவேன் என்கின்ற தன்மையை எடுத்துச் சொல்ல வேண்டும், காங்கிரஸ். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள், இந்த நாட்டு மக்கள் வாழ வேண்டும் என்பதற்காகப் போராடியவர்கள், இந்த நாட்டிற்காக இரத்தத்தைச் சிந்தியவர்கள் என்கின்ற சரித்திரம், காங்கிரசுக்கு உண்டு என்பது உண்மையானால், ஆட்சி பெரிது அல்ல, எங்களுடைய கொள்கைதான் பெரிது, எங்களுடைய இலட்சியம்தான் பெரிது என்கின்ற முழக்கத்தை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்குக்கூட இங்கு ஒரு சம்பவம் நடந்தது. சென்ற முறை கூட இந்தச் சட்டமன்றத்திலே பேசும்போது, என்னுடைய அருமைச் சகோதரர் ஆற்காட்டார் அவர்கள் அவருடைய தலைவரைச் சுட்டிக்காட்டி, மிக தைரியமானவர்; அவர் தைரியத்திற்கு ஈடு இணை இந்தியாவிலேயே கிடையாது; இரயிலை மறித்து — புகை வண்டியை மறித்து — தண்டவாளத்திலே தலையை வைத்தவர் என்றெல்லாம் சொன்னார்கள். *(குறுக்கீடு)*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் ஞாபகம் இருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது, மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், அவருடைய தலைவரின் தைரியத்தைப் பற்றி இங்கே விவரித்து, அதற்கு எடுத்துக்காட்டாக, அவர் இரயில் தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்தார்; ஆகவே, அவர் தைரியமுடையவர் என்றார். அவர் எத்தகைய சூழ்நிலையில் தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்தார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்போதெல்லாம் அந்தத் தண்டவாளத்தில் ஒரு ரயில்தான் போகும். ஒரு நாளைக்கு ஒரு ரயில்தான் போகும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் போக வேண்டிய ரயில் போய் விட்டது. இனிமேல் அந்தத் தண்டவாளத்தில் ரயிலே வராது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டுதான் அவர் தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்தார் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் கேட்கிறேன், அவருடைய தலைவருக்கு உண்மையிலேயே தைரியம்

இருக்குமேயானால் ரயில் வரப்போகின்ற தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுக்கச் சொல்லுங்கள் பார்ப்போம். (கூச்சல்—குழப்பம்)

முற்பகல் 10-20

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்துநின்று பேச முயன்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) திரு. ஆற்காடு வீராசாமி, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், யாராவது ஒருத்தர் பேசுங்கள். ஒருத்தர் பேசுங்கள். உங்கள் கட்சியிலே கட்டுப்பாடே ஒன்றும் கிடையாதா உங்களுக்கு? (குறுக்கீடு) உங்கள் கட்சிக்கு கட்டுப்பாடே கிடையாதா? பேசுங்கள், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

* **திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் நடத்திய போராட்டத்தைப் பற்றி முதலமைச்சர் இங்கே சொன்னார். அந்தப் போராட்டம் நடந்தபோது முதலமைச்சர் பிறந்தாரோ இல்லையோ, எனக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவர் தண்டவாளத்திலே தலையை வைத்த பிறகு ரயிலும் வந்தது. அந்த ரயில் நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு காவல் துறையைச் சார்ந்தவர்கள் கைது செய்தார்கள். இது வரலாறு. ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) திரு. வீராசாமி சொல்லிவிட்டார். இனி என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணதாசன் எழுதிய வனவாசத்தைப் படித்துப் பார்க்கச் சொல்லுங்கள். கருணாநிதியினுடைய நண்பர், கண்ணதாசன் எழுதிய வனவாசத்தைப் படித்துப் பார்க்கச் சொல்லுங்கள் (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** ஏய், என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஏக வசனத்தில் பேசுவது சரியல்ல. துரைமுருகன் ஏக வசனத்தில் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) அவர் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) இப்படி ஏக வசனத்திலே பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) அவர் சொல்லட்டும். சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணதாசன் அவர்கள் எழுதிய வனவாசத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்கள் எப்படி நாடகம் ஆடினார் என்று விலாவாரியாக எழுதியிருக்கிறார். நான் வேண்டுமென்றால் அந்தப் புத்தகத்தை துரைமுருகன் அவர்களுக்குப் பரிசாகக் கொடுக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் ஒரே ஒரு ரயில்தான் உண்டு. அந்த ரயிலும் போய்விட்டது என்று முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். ரயில் நிற்கும்போது — எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன் — ரயில் நிற்கும்போது அவர் தண்டவாளத்திலே தலையை வைத்துப் படுத்தது மட்டுமல்ல. துப்பாக்கிச் சூடும் நடந்து, ரயிலுக்குள்ளே இருந்த ஒருவர்கூட அதிலே இறந்து போயிருக்கிறார். இரண்டு பேர் இறந்தார்கள். அதில் ஒருவர் ரயிலிலேயே இருந்தவர் என்பதை மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு முறை மறியலுக்கு கவிஞர் கண்ணதாசன் அவர்கள் சென்றபோதுதான் அந்தத் துப்பாக்கிச் சூடு நடந்தது. உயர்திரு கருணாநிதி அவர்கள் படுத்தபோது துப்பாக்கிச் சூடு நடக்கவில்லை. கண்ணதாசன் அவர்கள் வனவாசத்தைப் படித்துப் பாருங்கள். கண்ணதாசன் அவர்கள் மறியலுக்குச் சென்றபோது உண்மையிலேயே படுத்து பயங்கர போராட்டம் நடத்தியவர் கண்ணதாசன். அப்போதுதான் துப்பாக்கிச் சூடு நடந்தது.

* **திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லக்குடியிலே தலைவர் அவர்கள், கலைஞர் அவர்கள், தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்தது, ரயில் வந்து நிற்பது, கலைஞர் அதன் முன்னாலே படுத்து இருப்பது எல்லாம் போட்டோ இருக்கிறது. இதை நாங்கள் சொல்வதைவிட மனசாட்சி என்று ஒன்று இருக்குமானால், பேரவைத் தலைவரே உங்களுக்கு உண்மை தெரியும். நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். திரு. சந்தானம் பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எல்லாம் தைரியம் படைத்த முன்னாள் முதல்வர் அவர்கள்

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சாதிய மோதல்களைத் தவிர்க்க முடியாமல், அதை அடக்க முடியாமல், ஒடுக்க முடியாமல் மிகப் பெரிய தலைவர்கள், இந்த நாட்டிற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்கள், அவர்கள் நினைவாக வைக்கப்பட்ட — அவர்கள் சொல்கிறார்களே, அண்ணாவின் ஆட்சி அமைக்கப்போகிறோம் என்று —அந்தத் தலைவர் அண்ணாவின் பெயராலே இருந்த மாவட்டம், பெரியார் பெயராலே இருந்த மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயராலே இருந்த மாவட்டம், பெருந்தலைவர் காமராஜர் பெயரால் இருந்த மாவட்டம் மற்றும் பேருந்துக் கழகங்களிலும் தலைவர்களின் பெயரை எடுத்ததுதான் அவருடைய தைரியம். அந்தக் கலவரத்தை ஒடுக்க முடியவில்லை, அடக்க முடியவில்லை, ஆட்சிக் கட்டிலிலே இருந்துகொண்டு இந்த நாட்டிற்கு நன்மை செய்த அத்தனை தலைவர்களுடைய பெயரையும் எடுத்ததுதான் அவருடைய தைரியம். அதுபோல (குறுக்கீடு) பல கொலை வழக்குகளை. .

*(சில தி.மு.க. உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசினர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், (குறுக்கீடு) திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் (குறுக்கீடு) இல்லை, இல்லை. பேரவை விதிகள் எல்லாம் உங்களுக்கு மறந்துபோய் விட்டதா என்ன என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதி நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர். விதிகள் எல்லாம் மறந்துபோய் விட்டதா என்ன என்று தெரியவில்லை. ஓர் உறுப்பினர் பேசுகிறபோது அமைதி காக்க வேண்டுமே தவிர, நீங்கள் ஏதாவது பேசவேண்டுமென்றால் அனுமதி பெற்றுப் பேசவேண்டுமே தவிர, நீங்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது, கையை நீட்டிப் பேசுவது, இவையெல்லாம் சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பானது. முறையற்ற வகையிலே இப்படி நடப்பது சரியல்ல. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-25*

**திரு. லா. சந்தானம்:** நான் உங்கள் பேச்சுக்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற விதிகளை அனுசரித்து அதை எப்படிக் கடைப்பிடிப்பது என்பதை முதலிலே தெரிந்துகொள்ளுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்).



**திரு. லா. சந்தானம்:** அதேபோல அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கொலைக் குற்றத்திலே வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. தயவுசெய்து உட்காருங்கள். அவர் பேசட்டும்.

**திரு. லா. சந்தானம்:** வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்கள், அவர்கள் எல்லாம், ஒருவர்கூட கைது செய்யப்படாமல், அவர்களை இந்தச் சட்டமன்றத்திலே உட்காரவைத்து . .

**திரு. பரிதி இளம்வழுதி:** எந்த நேரத்திலும் ஓர் உறுப்பினர் point of order எழுப்பலாம் என்பது விதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** point of order என்ன என்று எனக்குத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு) தெரியும், தெரியும்.

**திரு. லா. சந்தானம்:** அழகு பார்த்ததுதான் உங்களுடைய தைரியம். இன்றைக்கு இந்தியா முழுவதும் தெரியக்கூடிய காஞ்சி மடம், ஒரு பாரம்பரியம் மிக்க மடம். அந்த மடத்தினுடைய மடாதிபதி அவர்கள் தவறு செய்துவிட்டார்கள், குற்றம் செய்துவிட்டார்கள் என்பதற்காக இந்திய கண்டமே எதிர்த்தாலும்கூட நான் அவரைக் கைது செய்வேன், சட்டத்தின் முன் அனைவரும் சமம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சில நடவடிக்கைகளை எடுத்து கைது செய்தார்களே, அவர்கள் தைரியசாலிகளா, நீங்கள் தைரியசாலிகளா என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து நீங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள். அதை தமிழ்நாட்டு மக்களும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட ஒரு நிகழ்ச்சி நடந்தது. இங்கு 110-வது விதியின் கீழே முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை வாசித்தார்கள். அதிலே, பதில் சொல்ல வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொண்டீர்கள். நான் தயவுசெய்து உங்களைக் கேட்கிறேன். இதற்கு முன்னால் இருந்த ஆட்சிக் காலங்களிலே 110-வது விதியிலே எத்தனையோ அறிக்கைகள் வாசிக்கப்பட்டிருக்கின்றன, அந்த அறிக்கைகளில் எல்லாம் விவாதம் இருந்து இருக்கிறதா என்று சட்டசபை அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள், உங்களுக்குப் புரியும். அப்படி . . . . (குறுக்கீடுகள்) 110-வது விதியிலே எனக்குத் தெரிந்த அளவிலே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) பேசி முடிக்கட்டும். நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடு) அனுமதி கொடுக்கிறேன். பேசி முடிக்கட்டும்.

**திரு. லா. சந்தானம்:** நானும் பலமுறை இந்த அவையிலே பார்த்திருக்கிறேன். இவ்வாறு அறிக்கைகள் வாசிக்கப்பட்டிருக்கின்றன. அதில் எந்தவிதமான விவாதங்களும் நடத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனாவசியமாக . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அனாவசியமாக நான் எந்தப் பிரச்சினையையும் இந்த அவையிலே எழுப்புவதில்லை என்பது தங்களுக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் பேசும்போது கடந்தகால ஆட்சியில் 110-வது விதியின்கீழ் அறிக்கைகள் வைக்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். எங்கேயாவது கடந்த கால ஆட்சியில் 110-வது விதியின்கீழ் அறிக்கையின்கீழ் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் சொல்வது 110-வது விதியின்கீழ் அறிக்கை வைக்கிறபோது அதிலே விவாதிப்பதற்கு நீங்கள் இடம் அளித்திருக்கிறீர்களா என்றுதான் கேட்கிறார். (குறுக்கீடு) விவாதத்திற்கு நீங்கள் இடம் அளித்திருக்கிறீர்களா? அதுதான் அவருடைய பிரச்சினை. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விதியில் என்ன வைக்க வேண்டும் என்பது, அது நீங்கள் சொல்லக்கூடியதல்ல. திரு. சந்தானம் பேசுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** 110-வது விதியின்கீழ் அறிக்கை வைக்கும்போது அவையில் இருக்கிற எந்த உறுப்பினர்மீதும் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள். அனுமதி வாங்காமல் பேசக்கூடாது. அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் ஒன்றை இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தில்கூட இங்கேயிருக்கின்ற அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லி, சட்டமன்றத்திலே நாங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகக் கேட்கின்றபோது அன்றைக்கு இருந்த அரசு அதை மறுக்கின்ற நிலையில் நாங்கள் எல்லாம் சாலையிலே சென்று, நேற்றுபோல அந்தச் சாலையிலே, எதிரிலே உட்கார்ந்து, சட்டமன்றத்தின் முன்பாக மறியல் செய்துகொண்டிருந்தோம். அந்த மறியல், சட்டமன்றம் முடியும்வரை நடந்தது. மிக அமைதியாக நடந்தது. சட்டமன்றம் முடிந்துவிட்டது, முதலமைச்சர் வீட்டுக்குச் சென்றுவிட்டார் என்ற தகவல் அறிந்த உடனே நாங்கள் எல்லாம் அமைதியாகக் கலைந்து சென்றுவிட்டோம். ஆனால், அன்றைக்கு நாங்கள் எடுத்துக்கொண்ட நிலைப்பாடு என்ன? தமிழகத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், வறுமையிலே ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள், கடன் தொல்லையால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பெற்றிருக்கின்ற விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்கிற மக்கள் கோரிக்கைக்காக நாங்கள் அன்றைக்கு சாலை மறியலில் ஈடுபட்டோம். மறுநாள் சட்டமன்றம் துவங்கியது. யாரும் சத்தம் போட வேண்டாம், அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். அன்றைக்கு மறுநாள் வந்த முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'ஊரிலே ஒரு பழமொழி உண்டு, துஷ்டர்களைக் கண்டால் தூர விலகிச் செல்ல வேண்டும் என்கின்ற பழமொழியுண்டு. எனவே, நீங்கள் நேற்று சாலையிலே, நான் செல்கின்ற வழியிலே இருந்த சாலையிலே மறித்து உட்கார்ந்திருந்தீர்கள். உங்களைக் கண்டு நான் விலகி வேறு வழியே சென்றுவிட்டேன்' என்று குறிப்பிட்டார்கள். நான் சொல்லவில்லை, அது அவைக் குறிப்பிலே இருக்கிறது, எடுத்துப் பார்த்தால் தெரியும். அந்த அளவிற்கு மக்களுடைய பிரச்சினைக்காக சாலை மறியல் செய்த, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைப் பார்த்து துஷ்டர்கள் என்று சொன்னால், துஷ்டர்கள் என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்? மக்களுக்கு தீங்கிழைக்கின்றவர்கள், மக்களுக்கு விரோதமாகச் செயல்படுகின்றவர்கள் என்றுதானே துஷ்டர்கள் என்றால் பொருள்? அப்படி ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் இந்தச் சட்டமன்ற

உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார்களே, அன்றைக்கு இந்த அவையிலே நாமெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம்.

*முற்பகல் 10-30*

நேற்றைக்கு நடந்தது என்ன? அந்த நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு மாண்புமிகு முதலமைச்சர்கூட இங்கு மிக வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித்தான் குறிப்பிட்டு 110-வது விதியிலே அறிக்கை வாசித்தேன். ஆனால், இங்கு இடம் பெற்றிருக்கின்ற காங்கிரஸ்காரர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்களும், கம்யூனிஸ்ட் பேரியக்கத்தைச் சார்ந்தவர்களும் ஏன் சென்று மறியலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது என்னுடைய மனதை வருத்துகிறது; நான் உண்மையிலேயே வருந்துகிறேன், துன்பப்படுகிறேன் என்கின்ற வார்த்தையை இந்தச் சட்டமன்றத்தில் சொன்னார்கள். அப்படியென்றால், அவர்களுடைய தாயுள்ளம் எப்படிப்பட்டது? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களை எப்படி நினைத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதற்கு மேலாக, இந்தப் பேரவைத் தலைவர் என்பவர் மிக மரியாதையாக மதிக்கப்படக்கூடியவர். இந்தப் பேரவையில், நான்கூட நேற்று நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து, பேரவைத் தலைவர் என்றைக்கு மகாத்மா காந்தி ஆனார்கள் என்றுகூட வியந்தேன். காந்தியைப் பற்றிச் சொல்கின்றபோதுதான் சொல்வார்கள்;

“கத்தி ஈட்டி ஒருபுறத்தில் குத்த வேண்டும்,
கோடாரி ஒருபுறத்தைப் பிளக்க வேண்டும்,
இரத்தம் வர நால்புறமும் பலர் உரைத்து இரணம் உண்டாக்க
அத்தனையும் நான் கொடுத்த அகிம்சை காட்ட
இந்த உத்தமதாஸ் காந்தி என்னும் இந்தியத் தாய்
உலகினுக்கே ஈன்ற செல்வம்”

என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட காந்தியாக மாறிவிட்டார்கள் எங்களுடைய பேரவைத் தலைவர் அவர்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான்கூட நினைத்தேன். அது எதற்காக? இந்த மன்றத்தினுடைய இறையாண்மையைக் காக்க வேண்டுமென்பதற்காக. தமிழ்நாட்டு



மக்களுக்காக ஆக்கப்பூர்வமான விவாதங்களைச் சட்டமன்றத்திலே எடுத்து வைக்க வேண்டும். அதன் மூலமாக தமிழக மக்களுக்குப் பல்வேறு நன்மைகள் வந்து சேரவேண்டும். ஏழை எளிய பாதிக்கப்பட்ட மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக இந்த அவையை ஒழுங்காக நடத்த வேண்டுமென்பதற்காகத்தான், அவருடைய நிறத்தைக்கூட மாற்றிக்கொண்டு, அந்த அளவிற்கு பொறுமை சேர்த்தார்கள், அதுதான் நாகரீகம், அரசியல்.

தமிழகத்தை டிசம்பர் 26 ஆம் தேதி ஒரு மிகப் பெரிய ஆழிப் பேரலை தாக்கியதே? 8,018 பேர் உயிரிழந்தார்களே? இன்றைக்கும் பல குடும்பங்கள் எவ்வளவு கஷ்டத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்? மீனவர்கள் எல்லாம் மீன் பிடிக்கச் செல்லவில்லையே? நேற்றைக்கு நீங்கள் இங்கு மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலே ஆர்ப்பாட்டம் நடத்துகிறீர்கள். இந்த தமிழ்நாட்டுக்கு 4,800 கோடி ரூபாய் வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்கூட, சகோதரர் வீராசாமி அவர்கள், இது போதாது நிறையக் கேளுங்கள் என்று சொன்னார்கள். அதை நான் உண்மையிலேயே மகிழ்ச்சியோடு பாராட்டினேன். அப்படிப்பட்டவர்கள், இன்றைக்கு மத்திய சர்க்கார் 612 கோடி ரூபாய்தான் வழங்கியிருக்கிறது, மீதமுள்ள நிதியையும் வழங்கி எங்களது மீனவர்களைக் காப்பாற்றுங்கள். மீனவக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு கொடுங்கள், மீனவர்களுக்குப் படகுகளை நூற்றுக்கு நூறு சதவிகிதம் இலவசமாக வாங்கித் தாருங்கள் என்று போராடியிருந்தால், நாடாளுமன்றத்தின் முன்னாலே ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தால் (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தமிழக மக்கள் பார்த்திருப்பார்கள், பாராட்டி இருப்பார்கள். இப்படியும் நமது தமிழகத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களுடைய பணியை ஆற்றுகிறார்களே என்று மெச்சியிருப்பார்கள். உங்களுக்கு மலர் மாலை சூடியிருப்பார்கள். ஆனால், நடந்தது அதுவல்லவே என்று எண்ணும்போது உண்மையிலேயே நான் வருத்தப்பட வேண்டியவனாக இருக்கிறேன். இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசியதோடு அல்லாமல் சில கோரிக்கைகளை...

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் இன்னுமொரு 5 மணித் துளிகளுக்குள் முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** இதையெல்லாம் சொல்லிவிட்டு, சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்கின்ற முறையில் அவர் எப்படி

மதிக்கப்படுகின்றவர். நாம் எல்லாம், அவர் வருகின்றபோது, முதலமைச்சரிலிருந்து எழுந்து வணக்கம் செலுத்துகிறோம் என்று சொன்னால், அதற்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அந்தப் பாரம்பரியத்தைக் காப்பாற்றீ வேண்டும் என்கின்ற முறையிலேதான் நாம் எல்லாம் நடந்துகொள்கிறோம். நேற்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து வெளியே சென்றவர்கள், மதிப்பிற்குரிய இந்த அவையினுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவராக பொறுப்போடு செயலாற்றுகின்றவர்கள், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், (குறுக்கீடு) துணைத் தலைவர், எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்கள் அங்கே சாலையிலே நடித்துக் காட்டியிருக்கிறார்கள்.

*(உறுப்பினர் ஒரு பத்திரிகையைக் காட்டிப் பேசிக்கொண்டிருந்தார்.)*

பேரவைத் தலைவர் எப்படி வணக்கம் போடுகிறார்கள் என்று சொல்லிக் காட்டியிருக்கிறார்கள். இதுதான் இந்த அவையினுடைய மரபைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சியா, முறையா என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் காட்டிய அந்தப் பத்திரிகையை நானும் காலையிலே பார்த்தேன். நான் துரைமுருகன் அவர்களை கல்லூரி காலத்திலிருந்து அறிவேன். Mimicry பண்ணுவதிலே ரொம்ப கெட்டிக்காரர். அந்தக் கலையிலே ரொம்ப தேர்ச்சி பெற்று வேறு எங்கோ போயிருக்க வேண்டியவர் இங்கு வந்துவிட்டார் என்பதுதான் பிரச்சினை. அவருக்கு உற்சாகம் வருகின்றபோது, யாரை மாதிரி வேண்டுமானாலும் mimicry பண்ணிக் காட்டுவார். அவருடைய கட்சித் தலைவர்களைப்போல mimicry பண்ணிக் காட்டுவார், பார்த்து ரசித்திருக்கிறோம். அவருடைய கட்சித் தலைவரைப் போலவே கூட பேசி, நடந்து, நடித்தெல்லாம் காட்டியிருக்கிறார். அதனால்தான் அந்தக் காலத்தில் கட்சி ஒன்றாக இருக்கும்போது தி.மு.க.வின் தெனாலிராமன் என்றேகூட அவரைக் கூப்பிடுவதுண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இப்போதும்கூட நம்முடைய சட்டசபையினுடைய ஆஸ்தான விதூஷகர் என்றுகூட வைத்துக்கொள்ளலாம். ஆனால், சட்டப் பேரவைத் தலைவரைப் பற்றி அப்படி நடித்துக் காட்டுவது என்பது மரபுக்கு விரோதமானது. அது கண்ணியத்திற்கு விரோதமானது. இன்னும் சொல்லப்போனால், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம் தெரிவிக்கிறார் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். என்னுடைய



தலைவிக்கு நான் வணக்கம் தெரிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், என் உயிரைக் காத்த என் தாய்க்கு நான் வணக்கம் தெரிவிப்பதை எந்த நா கிண்டல் பண்ணினாலும் அதைப்பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் பேசக் கூடாது.

முற்பகல் 10-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் பேசுகின்றபோது தங்கள் பொறுமையைப் பற்றிக் குறிப்பிட்டு அதற்காக உங்களைப் பாராட்டினார். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, பொறுமை காக்க வேண்டிய பொறுமை காப்பது நல்லதுதான். பொறுமை காக்க வேண்டிய விஷயங்களில் காப்பது நல்லதுதான். ஆனால், எந்த நேரத்திலும் எல்லாவற்றிற்கும் பொறுமையாக இருப்பது என்பது சில சமயங்களில் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் விட்டுவிடுவதற்கு இணையாகும். இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்கிறார்கள். இதர எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த அவை மரபுகளை மதித்து, இந்த அவைக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்து, பேரவைத் தலைவருக்குக் காட்ட வேண்டிய மரியாதையைக் காட்டி, முறையாக நடந்துகொள்கிறார்கள். ஆனால், பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மட்டும் யாருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல; எந்த விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல; அவர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் என்ற தோரணையிலேயே, அந்த ரீதியிலேயே நடந்து கொண்டிருக்கிறார்கள். நான் இன்றைக்கு இதைச் சொல்லவில்லை. இன்றைக்கு இதை கவனிக்கவில்லை. இந்தச் சட்டப்பேரவை அமைந்து நான்கு ஆண்டுகளாகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளாக நடப்பவற்றையெல்லாம் பார்த்துவிட்டுத்தான் இன்றைக்குச் சொல்லுகிறேன். எந்த மரபுகளையும் அவர்கள் கடைப்பிடிப்பதில்லை. எல்லா விதிமுறைகளையும் அவர்கள் காற்றிலே பறக்க விட்டுவிட்டார்கள். இந்த அவையையே அவர்கள் கொச்சைப்படுத்துகிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுந்து ஒரு அமைச்சரைப் பார்த்து “ஏய்” என்கிறார். எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், பேசிக்கொண்டிருக்கின்ற உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களைப் பார்த்து ‘ஜால்ரா’ என்று சத்தம் போடுகிறார். அடிக்கடி பரிதி இளம்வழுதி

எழுந்து பேரவைத் தலைவர் அவர்களே என்றுகூட சொல்லாமல், உங்களை கைநீட்டி வாய்க்குவந்தபடி பேசுகிறார். அங்கே பின் வரிசையில் திரு. ரங்கநாதன் அவர்களும், திரு. எ.வ. வேலு அவர்களும், எந்த நேரத்திலும் சத்தம் போட்டுச் சிரிப்பதும், கிண்டலடிப்பதும், கேலி செய்வதும், பேசுகின்ற எல்லா உறுப்பினர்களுக்குமே இடையூறாக இருக்கின்றது. இதைத் தாங்கள் இன்னும் கண்டிக்காமல் இருந்தால், நான் வருத்தத்தோடு சொல்கிறேன், தங்கள் கடமையைச் செய்யத் தாங்கள் தவறிவிட்டதாகத்தான் எண்ண வேண்டிவரும். இந்த அவையின் கௌரவத்தை, கண்ணியத்தைக் காக்கவேண்டியது உங்களது கடமை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யார் ஆள்கிறார்கள் என்பது முக்கியமல்ல; எந்தக் கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறது என்பது முக்கியமல்ல; யார் பேரவைத் தலைவராக இருக்கிறார் என்பது முக்கியமல்ல; யார் முதலமைச்சராக இருக்கிறார் என்பது முக்கியமல்ல. ஆனால், இந்த அவைக்குள் நுழைந்தால் யாராக இருந்தாலும், இந்த அவைக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். பேரவைத் தலைவர் ஆசனத்தில் யார் அமர்ந்திருந்தாலும் அவர்களுக்குக் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டவேண்டும். சட்டமன்ற உறுப்பினர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்குள்ளே வந்துவிட்டால் இந்த அவைக்கு என்று சில மரபுகளும், விதிமுறைகளும் இருக்கின்றன; அவற்றைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும். ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல, தினந்தோறும் இந்த அவையின் விதிமுறைகளை மீறுபவர்களை, இந்த அவையின் கௌரவத்தையே குலைப்பவர்களைத் தாங்கள் இனிமேலும் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல சபை விதிமுறைகளை ஏற்கெனவே அறிந்த உறுப்பினர்கள், தி.மு.க.வின் உறுப்பினர்கள். திரு. பொன்முடி போன்றவர்கள் எல்லாம் முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்கள். திரு. பரிதி இளம்வழுதி சட்டப் பேரவைத் துணைத் தலைவராக இருந்து பணியாற்றியவர். விதிமுறைகள் தெரியும். ஓர் உறுப்பினர் பேசுகிறபோது நீங்கள் அமைதி காக்க வேண்டும். உங்களுக்கு ஏதாவது பேச விருப்பமிருந்தால் எழுந்து அனுமதி கேட்க வேண்டும். அனுமதித்தால் நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லலாம். அது வேறு. ஆனால், அந்த உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறபோதே கையை நீட்டிப் பேசுவது, அவர்களைக் கிண்டல் பண்ணுவது, 'ஏய்' என்று அழைப்பது இவைகள் எல்லாம் சபை விதிகளுக்கு மாறுபட்டவை; கண்ணியத்திற்கு



மாறுபட்டவை; மரபுக்கு மாறுபட்டவை; தயவுசெய்து இனிமேல் அப்படி நீங்கள் நடந்துகொண்டால் நான் கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும் என்கிற எச்சரிக்கையை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஓர் அறிவுரைபோல் ஒரு கருத்தைச் சொன்னார். நான் ஒன்றை ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரை நான் 'ஏய்' என்று சொல்லியிருக்கக்கூடாது. வருத்தப்படுகிறேன். காரணம், இந்த தமிழ்நாட்டிலே நான்கு முறை முதலமைச்சராக இருந்தவர், இந்த மன்றத்திலே உறுப்பினர். அவரை மிக சர்வசாதாரணமாக பெயரைச் சொல்லி அழைக்கிறபொழுது — சாதாரணமாக ஒரு மன்றத்து உறுப்பினரை இன்னொரு மன்ற உறுப்பினர் விளிக்கிறபொழுதுகூட மாண்புமிகு உறுப்பினர் என்று சொல்லலாம். மாண்புமிகு என்று இல்லாவிட்டாலும் முதலமைச்சர் பேசுகிறபோதுகூட கலைஞருடைய பெயருக்கு முன்னால் திரு. என்று போட்டுத்தான் சொல்கிறார். மற்ற அமைச்சர்களும் சொல்கிறார்கள். ஆனால் — அந்த ஒரு அமைச்சராக இருக்கிறவருக்கு, முன்னாள் அமைச்சராக இருந்த ஒருவருக்கு இந்த அவையின் உறுப்பினரைப் பார்த்து பெயரைச் சொல்லுகிறபொழுது எப்படி விளிக்க வேண்டும், எப்படி அதைச் சொல்லவேண்டுமென்ற அடிப்படைகூட தெரியாமல் சொன்னாரே, அவரை முதலமைச்சர் கண்டித்திருந்தால் முதலமைச்சர் நேர்மையாக இருந்திருக்கிறார் என்று பொருள். நான் அவர்களை 'ஏய்' என்று உணர்ச்சிவசப்பட்டு சொன்னேன். அதில் மாறுபட்ட கருத்து இல்லை. அப்படிச் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. துரைமுருகன் அப்படியே ஒரு அமைச்சர் சொன்னாலும் அல்லது வேறு உறுப்பினர்கள் சொன்னாலும் எழுந்துநின்று திரு. என்கிற அடைமொழியைச் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று பலமுறை இந்த அவையிலே நீங்களும் பேசியிருக்கிறீர்கள். நானும் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நான் எங்களுடைய தலைவரைச் சொன்னபோது கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டேன். ஆனால் முதலமைச்சர் அதையும் கண்டித்து, என் பக்கத்தில் இருக்கிற அமைச்சர்களுக்கும் நான் அறிவுரை சொல்கிறேன். இனிமேல் நீங்கள் உறுபபினர்களை, பெரியவர்களைச் சொல்கிறபடி சொல்லுங்கள் என்று சொல்லியிருந்தால் நான் அதைப் பாராட்டியிருப்பேன். ஆனால் நான் சொல்கிறேன், திட்டமிட்டு ஏதோ

[திரு. துரைமுருகன்] [2005 மார்ச் 10

இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் கட்டுக்கோப்பை மீறிவிட்டார்கள் என்று சொல்வது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதுதான் உண்மை. முதலமைச்சர் சொன்னதுதான் உண்மை (குறுக்கீடு) அதுதான் உண்மை. உங்களுடைய (குறுக்கீடு) நான் துரைமுருகனை இப்போது கேட்கிறேன். உங்கள் உறுப்பினர்கள் உங்களுக்குக் கட்டுப்படுகிறார்களா? கட்டுப்படுகிறார்களா? நேற்று கட்டுப்பட்டுத்தான் நடந்துகொண்டார்களா? உங்களுக்கும் திரு. ஆற்காடு வீராசாமிக்கும் கட்டுப்பட்டுத்தான் நடந்துகொண்டார்களா? (குறுக்கீடு) நீங்கள் நிற்கிறீர்கள். திரு. பொன்முடி இங்கே வந்து விவகாரம் பண்ணுகிறார். ஒரு முன்னாள் அமைச்சராக இருந்தவர். பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசுகிறார். ஒருமையிலே பேசுகிறார். இவ்வளவெல்லாம் நடந்தது. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நீங்கள் எதிர்க் கட்சியாக இருந்திருக்கிறீர்கள். எதிர்க் கட்சியாக வருகிற ஒருவர் கேள்வி என்ற வாள் ஏந்தி வரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இப்போது சொல்கிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இதுவரைக்கும் அவர்களைப் பற்றி எந்த விமர்சனம் வந்தாலும் இங்கே வந்து என்னிடத்திலே தகராறு செய்திருக்கிறார்களா? என்னிடத்திலே மோதியிருக்கிறார்களா? பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், அவர்களைப் பற்றி ஆயிரம் விமர்சனங்கள் சொல்லப்பட்டாலும் அவர்கள் ஒட்டுமொத்தமாக இங்கே வந்து விவகாரம் பண்ணியிருக்கிறார்களா? (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நான் நேரடியாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இங்கே ஓடி வந்திருக்கிறார்களா? (குறுக்கீடுகள்) என்ன, உங்களுக்கு மட்டும் கொம்பு முளைத்திருக்கிறதா? நீங்கள் மட்டும் என்ன 13 மாதங்களிலே பிறந்தவர்களா? (குறுக்கீடுகள்) என்ன உங்களுக்கு? எதற்காக? (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நீங்கள், எங்களை மட்டும் — நான் உங்களை நேரடியாகக் குறை சொல்லக்கூடாது. இந்த இடத்திலே உட்கார்ந்திருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் அந்த இடத்திலே உட்கார்ந்திருக்கிற காரணத்தால் இதைச் சொல்லியிருக்கிறீர்கள்.



2005 மார்ச் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. காங்கிரஸ் கட்சியைப் பற்றி எவ்வளவோ விமர்சனம் வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. சிதம்பரத்தைப் பற்றி விமர்சனம் வந்தது.

**திரு. துரைமுருகன்:** இப்போதுகூட என்னைக்கூட நீங்கள் சொல்கிறபோது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிதம்பரத்தைப் பற்றி விமர்சனம் வந்தது. திரு. குமாரதாஸ் பேசினார். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. எழுந்து பதில் சொல்லவில்லையா?

**திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். காரணம், நாங்கள் பேரவைத் தலைவர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களை, திரு. மணி அவர்களை, மற்றவர்களைவிட உங்களுக்கு மட்டும் என்ன தனிச் சலுகை? (குறுக்கீடுகள்) உங்களுக்கு மட்டும் என்ன தனிச் சலுகை?

**திரு. துரைமுருகன்:** காரணம், நீங்களும் நானும் இந்த திராவிட இயக்கத்திலே ஒருசாலை மாணவர்கள். 1965-லே நாங்கள் இங்கே வருகிறபோது சட்டத்தை எரித்துவிட்டு D.I.R.-லே உள்ளே போனவர்கள் நீங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழைய வரலாறு எல்லாம் இப்போது பேசத் தேவையில்லை. இன்றைக்கு நீங்கள் பேரவைத் தலைவராக இருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் இந்த அவை உறுப்பினர்களுக்கு அறிவுரை சொல்லும்போது எழுந்து நின்று உடனடியாக கூடவே running commentary போல திரு. துரைமுருகன் அவர்கள் பேசுவது முறையல்ல, தாங்கள் அனுமதிக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகனுக்கு நான் சொல்கிற சுருக்கமான அறிவுரை (குறுக்கீடு) தயவுசெய்து திரு. துரைமுருகன் அவர்களுக்கு நான் சொல்கிற சுருக்கமான அறிவுரை; உங்களுடைய தோழமைக் கட்சிகளைப் போல, காங்கிரஸ் கட்சியைப் போல, பாட்டாளி மக்கள் கட்சியைப் போல, கம்யூனிஸ்ட் கட்சிகளைப் போல பி.ஜே.பி. கட்சியைப் போல நடந்து கொள்ளக்கூடிய பயிற்சியை, பக்குவத்தை பெறுங்கள். இல்லாவிட்டால் அவர்களிடத்திலே பாடம் கேட்டாவது சட்டசபையை எப்படி மதிக்க வேண்டுமென்று கற்றுக்கொள்ளுங்கள். வேறு ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...(குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** தாங்கள் எங்களிடத்திலே — திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாற்றாந்தாய் மனப் போக்கிலே நீங்கள் நடந்துகொள்கிறீர்கள் என்ற காரணத்தால்தான் எங்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கு நாங்கள் போராட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை வரும்பொழுது... (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி நின்றுகொண்டு பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோலப் பேசுவது முறையற்றது. மீண்டும் இதுபோல நீங்கள் குறுக்கிட்டுப் பேசினால் நடவடிக்கை எடுக்க வேண்டியது இருக்கும். அவையை விட்டு வெளியேற்ற வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தொடர்ந்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் நடந்துகொள்கின்ற காரணத்தால், அவரை அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். எழுந்து குறுக்கே பேசுவது, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பது, வேண்டுமென்றே தகராறு செய்வது இந்த முயற்சியிலே திரு. பரிதி இளம்வழுதி ஈடுபடுகிற காரணத்தால் அவைக் காவலர்கள் அவரை அவையை விட்டு அகற்ற வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) திரு. சுந்தரம், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சுந்தரம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏதோ திட்டமிட்ட சதி நடக்கிறதா.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை வரும்போது மாண்புமிகு தலைவர் அவர்கள், நீங்கள்



எழுந்து நின்றால் அங்கே எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் அமர வேண்டும். நீங்கள் பல முறை எழுந்து நிற்கிறீர்கள். ஆனால், நீங்கள் எழுந்து நிற்கும்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஒருவர்கூட உட்காருவது இல்லை. அதுவே உங்களை அவமதிப்பதாக அர்த்தம். அதேபோல தலைவர் அவர்கள் ஒரு முறை உட்காரச் சொல்வீர்கள். இரண்டாவது முறை உட்காரச் சொல்வீர்கள். மூன்றாவது முறை உட்காரச் சொல்வீர்கள். மூன்று முறை சொல்லியும் அவர்கள் உட்காரவில்லையென்றால் வெளியேறுவார்கள். இதுதான் மரபு. நீங்கள் ஒவ்வொரு முறையும் எழுந்து நிற்கும்போது யாராக இருந்தாலும் உட்கார வேண்டும். ஆனால், துரைமுருகன் ஒருசில சமயங்களில் அவர் மட்டும் ஏதோ விதியை மதித்து ஒரு சில சமயங்களில் மட்டும் உட்காருகிறார். மற்றவர்கள் யாருமே நீங்கள் நிற்கும்போது அமருவதே இல்லை. அதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது அவர் சொன்னார். அதைத்தான் நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் தெரிவித்ததைப்போல, நீங்கள் தனிப்பட்ட காளிமுத்துவுக்குத் தரக்கூடிய மரியாதை அல்ல, சட்டப் பேரவைத் தலைவர் என்கிற வகையிலே கொடுக்கக்கூடிய மரியாதை அது. அந்த மரியாதையை நீங்கள் கடைப்பிடித்தால்தான் அவை நிகழ்ச்சிகளை நடத்த முடியும்; அவை நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடத்த முடியும். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அறிவுரையைச் சொன்னார்கள். இப்போது மட்டுமல்ல. தொடர்ந்து நடக்கிறது. தொடர்ந்து நானும் பல முறை இங்கே வருகிற தி.மு.க. உறுப்பினர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன்; கொஞ்சம் அமைதியாக இருக்கச் சொல்லுங்கள், அமைதியாக இருக்கச் சொல்லுங்கள் என்று பல முறை சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து நீங்கள் கடைப்பிடிப்பதே இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, உங்களைப் போலவே மற்றக் கட்சி உறுப்பினர்கள் அப்படி நடந்துகொள்வது இல்லையே? அதுதானே பிரச்சினை. ஆகவே, தயவுசெய்து அவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்களோ, அதேபோல நீங்களும் நடந்துகொள்ளுங்கள். அதுதான்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் வேகமான ஒரு முடிவை பரிதி மீது, பரிதி குறித்து அறிவித்துவிட்டீர்கள்.

ஆகையினால் இதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் எங்களுடைய அதிருப்தியை அதற்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் ஒன்று. இந்த அவையில் எங்களைப் பேசவிடாமல் செய்வதற்கு ஆளுங்கட்சி போடுகிற வலைக்கு தாங்களும் இரையாகிறீர்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எது எப்படியிருந்தாலும் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கிற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*முற்பகல் 10-50*

* **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையை நடத்த விடாமல், தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்தான் சதித் திட்டம் போட்டு பேச வேண்டிய வாய்ப்புக்கூட உறுப்பினர்களுக்குக் கிட்டாத நிலையை உருவாக்கி வருகிறார்கள் என்பதைப் பதிவு செய்ய வேண்டுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சிகள் எல்லாம் அவை நடவடிக்கைகளைப் புறக்கணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று இன்று மீண்டும் பரிதி இளம்வழுதியை நீங்கள் வெளியேற்றியிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்திருக்கிறது. இந்த நிலை நல்லதல்ல. இன்றும், நாளையும் நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடைபெறுகிறது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தொடர்ந்து கலந்துகொள்கின்ற வகையில் பரிதி இளம்வழுதி மீது நீங்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்னவென்றால், அந்த முறை, ஒன்றும் (குறுக்கீடு) - எழுந்து பேசினார். நீங்கள் அமரச் சொல்லியிருக்கலாம். அவர் பேசியது கொஞ்சம் அதிகமாகக்கூட இருக்கலாம். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் உடனே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, இன்று, நேற்று நடக்கிற நிகழ்ச்சி அல்ல. இன்றைக்கு மட்டுமல்ல; தொடர்ந்து இதேதான் நடக்கிறது. தொடர்ந்து எந்த உறுப்பினர், ஆளும்கட்சி உறுப்பினரோ அல்லது மற்ற தோழமைக் கட்சி உறுப்பினர்களோ பேசிக்கொண்டிருக்கிறபோது அவர்கள் தொடர்ந்து கையை காலை நீட்டுகிறார்கள். வாய் கூசுகின்ற வார்த்தைகளைப் பேசுகிறார்கள். நேற்றையதினம் நீங்கள் இங்கே இல்லை. முன்னாள் அமைச்சர் பொன்முடி அவர்கள் இங்கே வந்து என்னிடத்தில் வந்து



என்னென்ன வார்த்தைகள் பேசினார் என்பதைத் தாங்கள் கேட்டிருந்தால் தாங்களே இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டீர்கள். அதையெல்லாம் பார்த்துத்தான் சந்தானம் அவர்கள் மகாத்மா காந்தியாகி விட்டாரோ பேரவைத் தலைவர் என்று சொல்கிறார்.

இன்னும் சொல்லப்போனால் சந்தானம் அவர்களுக்குத் தெரியும். நான் சந்தானம் அவர்களுடைய தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரிடத்திலே பயிற்சி பெற்று வந்தவன். ஆகவேதான், நான் எவ்வளவு அமைதியை கடைப்பிடிக்க வேண்டுமோ எந்த அளவுக்கு அவர்களை மன்னிக்க வேண்டுமோ, நான் மன்னிக்கிறேன். இதற்குமேல் எப்படி மன்னிப்பது? நான் கேட்கிறேன். உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்களா? அல்லது பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் இப்படித்தான் நடந்துகொள்கிறார்களா? கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் யாராவது இப்படி நடந்துகொள்கிறார்களா? கண்டனத்தைத் தெரிவிப்பதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. எத்தனையோ முறைகள் இருக்கின்றன. ஆக, இப்படி நடந்துகொள்வது என்பது இப்போது நடைபெற்ற நிகழ்ச்சி மட்டுமல்ல; தொடர்ந்து பரிதி இளம்வழுதி இதேமாதிரிதான் நடக்கிறார். பரிதி இளம்வழுதி தொடர்ந்து இதேமாதிரிதான் நடக்கிறார். என்னிடத்தில் வந்து காலையிலேயே சொல்லி விட்டார். இன்றைக்கு எப்படியாவது அவர்கள் வெளியேறுவார்கள் என்று எனக்குத் தெரியும். அந்த முடிவிலேதான் இருந்துகொண்டு ஏதாவது தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் அவர்களைத்தான் அறிவுரை கூறித் திருத்த வேண்டுமே தவிர, பேரவையை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அவர்களிடத்திலே பேசுகிறேன். அதிலே ஒன்றும் குறையில்லை. ஆனால், இது அதிகபட்சம் என்று நான் கருதுகிறேன். இன்றையதினம் தொடர்ந்து அவர்களும் கலந்துகொள்ள வேண்டும், மற்றவர்களும் கலந்துகொள்ள வேண்டும். விவாதம் 2 நாளைக்கு நடைபெற்றாக வேண்டும். எனவே, அவர்களைத் திருப்பி அழைக்க வேண்டும் என்று உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நடவடிக்கையைக் கைவிடும்படி நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. காரர் பரிதி இளம்வழுதி மட்டும்தான் வெளியேற்றப்பட்டார். மற்றவர்கள் அவர்களாகவே சென்று விட்டார்கள். அவர்களாகவேதான் உள்ளே வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதாவது, ஏற்கெனவே அவர் வெளியேற்றப்பட்டவர். நேற்றும் வெளியேற்றப்பட்டவர். ஒரே கூட்டத்தொடரில் 2-வது முறையாக அவ்வாறு வெளியேறுமாறு பணிக்கப்பட்டால் அக்கூட்டத்தொடர் காலத்திற்கு மேற்படாதவாறு அக்கூட்டத்தொடரின் நடக்கவிருக்கும் கூட்டங்களுக்கு வராமல் இருக்குமாறு பேரவைத் தலைவர் கட்டளையிடலாம் என்று விதியிலே இருக்கிறது. நான் இன்றைக்கு மட்டும்தான் வெளியேற்றியிருக்கிறேன். நாளைக்கு கலந்துகொள்ளச் சொல்லுங்கள். உரிய அறிவுரையைச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்கள் ஒரு நீண்ட அறிவுரையை, நல்ல ஆலோசனைகளை எல்லோருக்கும் வழங்கியிருக்கிறீர்கள். நம்முடைய மாமன்றம் தொடர்ந்து அமைதியாக நடைபெறுவதற்கு, ஒரு நல்ல சூழல் உருவாவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிற வகையில், இது இறுதி எச்சரிக்கையாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுத்ததைத் திரும்பப் பெற்று அவர் தொடர்ந்து அவைக்குள் வருவதற்கு நீங்கள் அனுமதிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த நிகழ்ச்சியோடு எங்களையும் இணைத்து இங்கே விவாதம் வந்திருக்கிற காரணத்தினால்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை இணைத்து ஒன்றும் சொல்லவில்லை. தவறாக ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை. தவறாக நினைத்துச் சொன்னதாக நான் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்றால், இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள் மக்களுக்காக வேண்டியுள்ள பிரச்சினைகளைப் பேசுகிற நேரத்திலே, கொஞ்சம் கோபதாபங்கள் வருவது என்பது இயல்பு. நான் திராவிட முன்னேற்றக் கழக சக உறுப்பினர்கள் எல்லோரும் நடந்து கொண்ட முறை சரி என்று வாதாடவில்லை. அதைப்பற்றி அவர்களிடம் பேசியிருக்கிறோம். ஆனால், இன்று நடந்த நிகழ்ச்சிகளானாலும் சரி,



நேற்றைக்கு நடந்த நிகழ்ச்சிகளானாலும் சரி, அதாவது திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி உறுப்பினர்களை provoke பண்ணி ஏதோ ஒரு நிலையை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்களோ என்ற நியாயமான சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது.

நான் ஒன்றைச் சொல்கிறேன். நான் விவாதத்திற்கு உள்ளே வரவில்லை. அதாவது 110-வது விதி சம்பந்தமாக உள்ள விவாதத்திற்கு நான் வரவில்லை. ஆனால், அதிலெல்லாம் சில உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகர் அவர்களுக்கு உண்டு என்பதை மட்டும்தான் நாங்கள் நேற்றைக்கு உணர்த்தியது. ஆனால், துரதிருஷ்டவசமாக விரும்பத்தகாத சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அரசியல் விவாதம் என்பது சில சமயங்களில் சபையில் வருவது என்பது இயல்பு. ஆனால், தேவையற்ற விவாதங்களும், தேவையற்ற provoke பண்ணக்கூடிய முறையிலே உள்ள நிகழ்ச்சிகளும் இங்கே நடந்துகொண்டிருக்கின்றன. அவை தவிர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது...

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அதாவது விவாதங்கள் நடைபெறுவது என்பது வேறு. எல்லா நேரங்களிலும் காங்கிரஸ் கட்சியைப் பற்றிய விமர்சனங்கள் வருகின்றன. பாட்டாளி மக்கள் கட்சியைப் பற்றிய விமர்சனங்கள் வருகின்றன. உங்கள் கட்சியைப் பற்றிய விமர்சனங்கள் வருகின்றன. வருகிறபோது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களுடைய கட்சித் தலைவர் எழுந்து, பேசுவதற்கு அனுமதி கேட்கிறீர்கள். அந்த அனுமதி கிடைக்காவிட்டால், நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டுப் போகிறீர்கள். ஆனால், அவர்கள் நடந்துகொள்கிற முறை அப்படியில்லையே! அவர்கள் இங்கே அல்லவா வந்து தகராறு பண்ணுகிறார்கள். நேற்று முழுவதும், நேற்று முன்னாள் அமைச்சர் பொன்முடி, அத்தனை பேரும் இங்கே வந்து மொய்த்துக்கொண்டு, அத்தனை தி.மு.க. உறுப்பினர்களும் இங்கே வந்து மொய்த்துக் கொண்டிருந்தார்கள். ஆற்காடு வீராசாமியும், துரைமுருகனும் அனுமதி கேட்டு எழுந்து நிற்கிறார்கள். ஆக, இந்த முறையைக் கடைப்பிடித்தால் எப்படி அவை நிகழ்ச்சிகளை நடத்த முடியும்? ஒருவர்

எழுந்து பேசுவதற்கு அனுமதி கேட்பது என்பது சரியானது. துரைமுருகன் பல முறை அனுமதி கேட்கிறார். பல முறை நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். இப்போதும்கூட கேட்டார். முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பதில் சொல்வதற்கு அனுமதி கேட்டார், அனுமதி கொடுத்தேன். ஆற்காடு வீராசாமி அனுமதி கேட்டார், அனுமதி கொடுத்தேன். அவர்கள் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலே இருக்கின்றன. ஆக, அனுமதியை எழுந்து கேட்கிறபோது, பேரவைத் தலைவர் அனுமதிக்கிறபோது, அந்த அனுமதியைப் பெற்றவர்கள் பேசுவது என்பது வேறு. அந்த முறையைத்தான் இங்கே எல்லாக் கட்சிகளும் கடைப்பிடிக்கின்றன. அவர்கள் மட்டும் அதைக் கடைப்பிடிப்பது இல்லை. அதுதான் பிரச்சினை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விவாதத்தை இங்கே தொடங்கி வைத்து நிறைவு செய்திருக்கிறார்கள். அது வரவேற்க வேண்டியதுதான். இந்தச் சபையில், தமிழ்நாட்டு மக்களைப் பற்றி விவாதிக்கப்பட வேண்டிய சபையில், தேவையற்ற விவாதங்களில் குறுக்கிட்டு சபையையே நடத்த முடியாமல் காலங்கடந்து போய்விட்டதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியது. இதிலே இரண்டு நிமிடங்கள் கூடப் போய்விட்டது என்று நினைக்காதீர்கள். ஆனால், ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும், சார்ந்திருக்கிற அந்தப் பொருள் குறித்த பதில் வந்தால் பரவாயில்லை. தேவையற்ற விவாதத்தில், தேவையற்ற பொருட்கள் குறித்து விவாதிக்கிறபோதுதான் சபையில் பதற்றங்களே ஏற்படுகின்றன. அது இல்லாத வகையில், அது எதிர்க் கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும், கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இருக்கின்ற கட்டாயம். கடந்த காலத்தில் இந்தச் சட்டமன்றக் கூட்டங்களில், நீங்களே அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். பல தடவை இந்தச் சட்டமன்றத்திலே பல்வேறு விவாதங்கள், சூடான விவாதங்களும், சுவையான விவாதங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. நாங்கள் அறிவுரை கூறுவதற்காக அல்ல. ஆனாலும் இந்த நிதிநிலை கூட்டத் தொடரின் தொடக்கத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஆளும் கட்சிக்கும் சொல்லியிருக்கிறார்கள்.



ஆளும் கட்சிக்கும் சொல்ல வேண்டும், எதிர்க்கட்சிகளுக்கும் சொல்ல வேண்டும். அந்த முறையிலே சபையை நடத்த வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி என்பது அம்மா அவர்களுடைய தலைமையிலே கட்டுக்கோப்பாக இருக்கிறது, இயங்குகிறது. ஆத்திரமூட்டக்கூடிய வார்த்தைகளைப் பேசினால்கூட, யாராவது எழுந்து வந்தால்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரும்பிப் பார்த்தால் போய் உட்கார்ந்துவிடுகிறார்கள். ஆளும் கட்சியைப் பொறுத்த அளவிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. அதேமாதிரி மற்ற கட்சிகளைப் பொறுத்த அளவிலும் எந்தப் பிரச்சினையும் இல்லை; எனக்கு எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால், தி.மு.க. உறுப்பினர்கள் நடந்துகொள்ளக்கூடிய முறை உங்களுக்கு ஏற்புடையதுதானா என்பதை தயவுசெய்து நீங்கள் இதயசுத்தியோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சந்தானம் அவர்கள் பேசி, உரையை முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப் பொறுத்த அளவிலே மிக முக்கியமான சில கோரிக்கைகளை வைப்பதற்கு விழைகிறேன். எங்களது மதுரை மாவட்டத்திலே அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை கடந்த 6 மாதங்களாகச் செயல்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்காக - அரசுத் துறையிலே நடத்தப்படுகின்ற, கூட்டுறவுத் துறையிலே நடத்தப்படுகின்ற சர்க்கரை ஆலை, ஏறக்குறைய தென் மாவட்டங்களிலே இது ஒன்றுதான் நடத்தப்பட்டு வருகிறது. அது பல்வேறு மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையிலே நடத்தப்பட்டு வருகின்ற அந்தச் சர்க்கரை ஆலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள், இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு திரு. துரைமுருகன் அவர்களைப் பதில் சொல்ல அனுமதித்தேன். திரு. வீராசாமி அவர்களைப் பதில் சொல்ல அனுமதித்தேன். அதிலே, திரு. வீராசாமி அவர்கள் கடைசியாகப் பயன்படுத்திய அந்த வாக்கியங்கள் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அவைக் குறிப்பிலேயிருந்து பார்த்தால் தெரிகிறது. அது சட்டமன்றத்தைக் களங்கப்படுத்துவதைப் போல, ** என்று சொல்லியிருக்கிற அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சந்தானம் பேசி, உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 11-00*

**திரு. லா. சந்தானம்:** அந்தச் சர்க்கரை ஆலையை இயக்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே பல்வேறு தொழிலாளர்களும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளும் பல நிலைகளிலே அரசிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை இந்த அரசு தாய்மையுள்ளத்தோடு, கருணையுள்ளத்தோடு பரிசீலித்து, அந்த ஆலையை மீண்டும் இயக்குவதற்குரிய நிலையை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், சர்க்கரைக்கு ஓரளவிற்கு வெளி மார்க்கெட்டிலே மதிப்பு இருக்கின்ற அளவிற்கு, விலை கூடுதலாகக் கிடைக்கின்ற அளவிற்கு வாய்ப்பிருக்கின்ற காரணத்தால், அந்தக் கரும்புப் பயிர் ஒன்றுக்குத்தான் அரசினுடைய விலை நிர்ணயம் இருக்கிறது. அதைப் பயிர் செய்தால்தான் விவசாயிகளுக்கு ஓரளவிற்கு இலாபம் வருகிறது என்கின்ற முறையிலும்,...

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்ட அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையைப் பொறுத்தமட்டிலும், அதைத் திருப்பி இயக்குவதற்காகக் கிட்டத்தட்ட சுமார் 11 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அது தொடர்பான கோரிக்கைகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு மிக்க நன்றி. அதுபோல, தென் பகுதியிலே ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, அது அரசுத் துறையிலே இயங்குகின்ற ஒரு ஆலை. அது ஓரளவிற்கு நல்ல வருமானத்தை ஈட்டித் தருகின்ற ஆலை. அது மீண்டும் ஆறு கோடி ரூபாய் செலவிலே புனரமைக்கப்பட்டால், அந்த ஆலையிலே இருக்கின்ற தொழிலாளர்களும், அந்தப் பகுதியிலே உள்ள மக்களும் பயனடைவார்கள் என்கின்ற முறையில், அந்த ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Cements-ன், ஆலங்குளம் பகுதியிலே இயங்கி வருகின்ற ஆலங்குளம் சிமெண்ட் ஆலை 1991 முதல் 1996 வரையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு, அந்த 5 ஆண்டுகளில் மட்டும், 13



கோடியே 58 இலட்சம் ரூபாய் இலாபத்தில் இயங்கி வந்தது. அதன்பிறகு, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய ஆட்சிக் காலத்தில், அந்த ஆலை 40 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிவிட்டது. அதற்குக் காரணம், அன்றையதினம் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு, 19-2-1997 அன்று, G.O. 75 மூலம் ஒரு ஆணையைப் பிறப்பித்து, அந்த ஆணைமூலம் அரசுத் துறைகளில் அந்த சிமெண்ட்டுகளை வாங்காமல், வெளிச் சந்தையில் வாங்கலாம் என்ற உத்தரவை அன்றையதினம் Finance Department-ல் இந்த order, G.O. 75 போடப்பட்டதன் விளைவாக — அன்றைக்கிருந்த சிமெண்ட் ஆலை அதிபர்களிடம் திராவிட முன்னேற்றக் கழக அரசு கையூட்டுப் பெற்றுக்கொண்டு, அந்த G.O.-வைப் போட்டதன் விளைவாகத்தான் — 40 கோடி ரூபாய் நட்டத்திலே இயங்கிவந்தது. சிமெண்ட் ஆலையைப் பொறுத்தமட்டிலும், dry process, wet process என்கின்ற இரண்டு முறைகள் இருக்கின்றன. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை என்பது மிகவும் பழமை வாய்ந்தது. அது wet process-ன்மூலம் இயங்கக்கூடியது. என்றாலும்கூட, முழுமையாக இயக்குவதற்குக் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவிடப்படும் என்றாலும், இப்போது 6 கோடி ரூபாய் என்ற அளவிற்கு ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இருந்தாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஆலையை மூடாமல், அதனுடைய இயந்திரங்களைப் பழுதுபார்த்து, தொடர்ந்து நடைபெறுவதற்கு உண்டான கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்து அமைகிறேன். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்கின்றபோது, G.O. போட்டதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால், கையூட்டு என்று அவராகப் பொத்தாம்பொதுவாகச் சொல்லும்போது, அதற்கான ஆதாரங்கள், ஆவணங்கள், மற்றவை ஏதேனும் இருக்கின்றதா? கையூட்டு என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியிருப்பது தவறானதாகும். ஆதாரமில்லாமல் சொல்லக்கூடியது என்பதனால், அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் ஆதாரத்தைக் காட்டட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொன்னதும் இருக்கும், நீங்கள் சொன்ன பதிலும் இருக்கும். திரு. சந்தானம், நீங்கள் முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த ஆலையைச் சீரமைப்பதற்கு அரசு நடவடிக்கை

எடுக்கும் என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலே இருக்கின்ற மருத்துவமனை ஒரு மாவட்ட மருத்துவமனை. அது தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கிறது. அடிக்கடி விபத்துகள்கூட நேருகின்ற இடம். அதற்கு ஒரு C.T. Scan வசதி இதுவரை செய்து தரப்படவில்லை. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இந்த வசதியை செய்து கொண்டிருக்கின்ற இந்த அரசு, எங்களுடைய உசிலம்பட்டி மருத்துவமனைக்கும் அந்த C.T. Scan வசதியைச் செய்து தரவேண்டும். அதோடு, ஆம்புலன்ஸ் வண்டி என்பது பல நாட்களாக இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை எழுதிக் கொடுத்துவிடுங்கள். இன்னும் 6, 7 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு)

முற்பகல் *11-05*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்ட மருத்துவமனைகள் அத்தனைக்கும் இதுபோன்ற வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, கண்டிப்பாக உங்களுடைய மாவட்ட மருத்துவமனைக்கும் இதுபோன்ற Ambulance வசதிகளும், அதேபோன்று C.T. Scan வசதிகளும் கண்டிப்பாக செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இன்னும் ஒன்றே ஒன்று, என்னுடைய தலைவனுக்கு நான் செய்யவேண்டிய கடமை, கைம்மாறு என்கின்ற முறையில், நேற்றைக்குக்கூட இங்கு பேசிய முனைவர் தமிழரசன் அவர்கள் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு ஒரு நினைவிடம் வேண்டுமென்று சொன்னார்கள். அந்த மக்களினுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இங்கு முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதுபோல, என்னுடைய தலைவர் பசும்பொன் தேவர் அவர்கள், இந்த நாட்டுக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு பெரிய தேசியத் தலைவர். அவர் பெயரிலேயிருந்த மாவட்டங்கள்கூட எடுக்கப்பட்டுவிட்டது. அவர் கடைசிக் காலத்திலே வாழ்ந்து, மறைந்த திருநகரிலே இருக்கின்ற அந்த இல்லத்தை அவருடைய பெயரிலே ஒரு நினைவிடமாக ஆக்கித் தரவேண்டுமென்று சொல்லி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அனைவரும் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள்தான் நிறைவேற்றித் தரமுடியும்



என்கின்ற காரணத்தினால், உங்களுக்குத்தான் அந்த நல்ல உள்ளம் இருக்கிறது என்கின்ற காரணத்தினால், அந்தத் தேசியத் தலைவருக்கு — தலைவர் எம்.ஜி.ஆர் இருந்தபோது, இங்கு சட்டமன்றத்திலே ஒரு படத்தை வைத்துப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதுபோல — உங்களுடைய காலத்தில் அந்தத் திருநகரிலே அவர் வாழ்ந்த இல்லத்தை அவருக்கு நினைவிடமாக ஆக்கித் தரவேண்டுமென்று அன்போடு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களின் கோரிக்கையை ஏற்று திருநகரில் பசும்பொன் தேவர் அவர்கள் கடைசிக் காலத்தில் வாழ்ந்த இல்லத்தை நினைவிடமாக இந்த அரசு ஆக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** எங்களுடைய, தென்பகுதியிலே வாழ்கின்ற கோடானுகோடி மக்களுடைய இதயங்களைத் தொடுகின்ற அளவிற்கு இந்த அறிவிப்பைச் செய்த முதலமைச்சர் அவர்களுக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்குகூட, எனது அருமை நண்பர்கள், 'ஜால்ரா' என்று சொன்னார்கள். இந்தக் கோரிக்கை எத்தனை நாட்களாக வைக்கப்பட்டது, அதை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்களா? இன்றைக்கு அது நிறைவுபெற்று இருக்கிறது என்று சொன்னால், நான் இந்த நல்ல ஆட்சிக்கு ஆதரவாக இருப்பது 'ஜால்ரா' என்று நினைத்தால் அதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடு) திரு. முரளிதரனா? (குறுக்கீடு) திரு. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** (உறுப்பினர் தெலுங்கில் பேசினார்). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், சில பாராட்டக்கூடிய கருத்துகளையும், குறைகள் உள்ள சில கருத்துகளையும் எடுத்துக்கூற வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், ஒரு மாநிலம் முன்னேற வேண்டுமென்றால், ஒரு கிராமம் முன்னேற வேண்டுமென்றால், மிகவும் முக்கியமானவை கல்வி, சாலைகள், குடிநீர், மின்சாரம், சுகாதாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உத்தமத் தலைவன் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள், காமராஜர் கனவு நனவாகும் வகையில் 'Sarva Shiksha Abhiyan' என்ற நல்லதொரு scheme-ஐக் கொண்டுவந்தார். ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு school building இருக்கவேண்டும்; 2014-க்குள் எல்லார்க்கும் கல்வி - கல்வி எல்லார்க்கும் தெரியவேண்டும் என்று நல்ல ஒரு scheme கொண்டுவந்தார். இந்தியாவிலேயே தமிழ்நாடு 'Sarva Shiksha Abhiyan', education நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு இருந்த அடல் பிகாரி வாஜ்பாய் இடத்தில் Education Minister பாராட்டு தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு நான் தமிழக அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், 'Sarva Shiksha Abhiyan' என்ற ஒரு scheme-ல் minority languages-க்கு priority கொடுக்க வேண்டுமென்று guidelines இருக்கிறது. கடந்த 2002 ஆம் ஆண்டில் 3,060 posts Sarva Shiksha Abhiyan மூலமாக தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி வாத்தியார்கள் போட்டார்கள். ஆனால், சிறுபான்மை மொழியாகவுள்ள தெலுங்கு மொழியாகட்டும், கன்னட மொழியாகட்டும், உருது மொழியாகட்டும் ஒரு teacher post கூடப் போடவில்லை. தமிழ் தெரிந்த வாத்தியார் வந்து தெலுங்கு, கன்னடம் மற்றும் உருது டீச்சர்கள் இல்லாமல் எப்படி training கொடுப்பது. ஏற்கெனவே முன்னாள் கல்வி அமைச்சர்களாக திரு. தம்பிதுரை இருக்கும்போதும், திரு. செம்மலை இருக்கும்போதும், அவர்களிடமும், இப்போது இருக்கிற கல்வி அமைச்சர் அவர்களிடமும், சில அதிகாரிகளிடமும்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் — ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் பேசும்போதுகூட அவர்களும் —கூறியிருக்கிறோம். இந்த ஆண்டு கண்டிப்பாகப் போடுகிறோம் என்று சொல்லி வாக்குறுதி கொடுத்தும்கூட இதுவரைக்கும் Sarva Shiksha Abhiyan மூலமாக ஒரு post கூட போடவில்லை. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது Education Minister அவர்களோ இந்த ஆண்டு போடுவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

அதேபோல இன்றைக்கு 23,000 posts, Secondary Grade Teachers என்ற அடிப்படையில் போட்டிருக்கிறீர்கள் — Consolidated pay basic-ல்



போட்டிருக்கிறீர்கள். ஒரு டீச்சர் போட வேண்டுமென்றால் அந்த post-ல் இருப்பவர் retired ஆனவுடன் அல்லது expired ஆன அந்த இடத்தில் teacher post போடுகிறீர்கள். அந்த qualification இருக்கிறவர்களுக்கு, இப்போது நீங்கள் மீண்டும் போட்டிருக்கிறீர்கள். ஆனால், அந்த basic-ல் போடாமல் ரூபாய் 3,000, 4,000 என்று consolidated pay basic-ல் போட்டிருப்பது எதற்கு? ஏற்கெனவே இருந்த வாத்தியார்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தார்களோ அதே அளவுக்குக் கொடுக்கலாம் இல்லையா? இது குறித்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு Teachers Recruitment Board-ல் வந்து ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் ஆகிய மாநிலங்களில் நம் தமிழ்நாட்டிலிருந்து தெலுங்கு படித்தவர்களோ, தமிழ் படித்தவர்களோ, கன்னடம் படித்தவர்களோ அங்கே போய் Teachers Recruitment Board-க்கு போனால் அங்கு S.S.L.C. compulsory-யாகப் படித்து இருந்தால்தான் அந்த exam-ல் எழுத வைக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் ஆந்திராக்காரர்கள், கர்நாடகக்காரர்கள் Teachers Recruitment Board-ல் வந்து exam எழுதி நிறைய teacher posts வாங்கியிருக்கிறார்கள். இதை நான் ஏற்கெனவே அமைச்சரிடம் பேசியிருக்கிறேன். இந்த முறையை கண்டிப்பாக தமிழ்நாட்டில் எடுத்துக்கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இது வரை அந்த G.O. கொண்டு வரப்படவில்லை. அந்த மாதிரி கொண்டுவந்தால் நம் தமிழ்நாட்டில் இருக்கிற teachers-க்கு முக்கியமாக தெலுங்கு அதிகமாகப் பேசும் எங்கள் ஓசூர் தொகுதியில், தளி தொகுதியில் அதிகமாக teacher-களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கர்நாடக மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும் இருக்கிற G.O.-வைப் போல கண்டிப்பாக தமிழ்நாட்டில் கொண்டுவந்தால் நிறைய teacher posts Recruitment Board-ல் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு இந்த G.O.-வை தமிழ்நாட்டில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல retired teachers-ல் High School-லிலோ Higher Secondary School-லிலோ retired ஆன teacher-க்கு G.P.F. — General Provident Fund — கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், Secondary Grade Teachers, Elementary School Teachers-க்கு 1990 முதல் T.P.F.— Temporary Provident Fund — கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் retire ஆகும் stage-ல் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். Diabetic patient-களாக எவ்வளவோ கஷ்டத்திலே அவர்கள் retire ஆகும்போது அவர்களுக்கு வந்து T.P.F. கொடுக்காமல்

நிறுத்தி வைத்திருக்கிறார்கள். 1996-ல் D.M.K. period-ல்கூட அதை நிறுத்தி வைத்தார்கள். நீங்களும் அதே முறையில் போய்க்கொண்டிருக்கிறீர்கள் அதைக் கண்டிப்பாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, surplus posts. இங்கே minority posts அதிகமாக சென்னையிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி ஆகிய இடங்களில் பிளஸ் 1, பிளஸ் 2-ல், ஒரே ஒரு பையன் இருந்தாலும்கூட அதற்கு வந்து surplus post-ல் ஒரு teacher வைத்துக்கொள்ள வேண்டும். அதை வந்து அப்படியே தமிழுக்கு transfer பண்ணுகிறார்கள், இல்லையென்றால் abolish பண்ணுகிறார்கள். எங்கள் ஏரியாவில் 500 pupils இருக்கிறார்கள் ஒரு school-லில். Teacher post கிடையாது. அதை create பண்ணி இங்கு இருக்கிற surplus posts - அந்த உபரி பணியாளர்களை எங்கள் ஏரியாவிற்கு ஏன் மாற்றக் கூடாது? இது குறித்து கல்வி அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சாலை வசதிகள். 2007-க்குள் முடிக்க எங்கள் உத்தமத் தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் இருக்கும்போது 500 population இருக்கிற எல்லா ஊர்களுக்கும் இந்தியா முழுவதும் Pradan Mantri Gram Sadak Yojana என்ற நல்ல scheme கொண்டு வந்தார்கள். 1,500 population, பிறகு 1,000 population, பிறகு 500 population என்று திட்டத்தை எடுத்து வந்திருக்கிறார்கள். 1,500 மற்றும் 1,000 population இருக்கும்போது Pradan Manthri Gram Sadak Yojana திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலே நல்ல முறையில் ரோடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரொம்ப quality-யாக வந்து இருக்கிறது என்று சொல்லிவிட்டு Central Government ஒரு பாராட்டைத் தெரிவித்திருக்கிறது. அதற்கு நான் Tamil Nadu Government-க்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு Pradan Mantri Gram Sadak Yojana - Rural Development-ல் செய்வதை நீங்கள் Highways-க்கு divert பண்ணியிருக்கிறீர்கள். அதை Highways-க்கு எதற்கு divert பண்ணுகிறீர்கள்? Divert பண்ணிவிட்டு, கடந்த ஆண்டு 2004-2005-ல் Pradan Mantri Gram Sadak Yojana திட்டத்தில் ஒரு ரோடுகூடப் போடமுடியவில்லையே?

முற்பகல் 11-15

• **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, P.M.G.S.Y. ரோடானது, இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து Highways-க்குக்



கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணம், ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற பொறியாளர்களும், அங்கே தேவைப்படுகின்ற Overseer-களும் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வருகிற பணிகளைப் பார்வையிடுவதற்கு நேரம் சரியாக இருக்கிறது. அவற்றைப் பார்வையிடும்போது, P.M.G.S.Y. ரோடைப் பார்வையிடுவதற்குக் காலதாமதம் ஆகிறது. ஆகவே, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகச் செய்யப்படுகின்றபோது, அங்கே அதிகமான பொறியாளர்களும், தொழில்நுட்ப அலுவலர்களும் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகள் அங்கே மாற்றம் செய்யப்பட்டு, இப்போது, கூடியவிரைவில், ஒரு வாரத்திற்குள்ளாக, இந்த phase-ல் வந்திருக்கிற P.M.G.S.Y.-ல் ரூ.117 கோடிக்கு டெண்டர் வைப்பதற்காக call for பண்ணப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திலிருக்கும் Engineers-ம், Overseers-ம் அதைப் பார்க்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், 2003-2004 ஆம் ஆண்டில் நீங்கள் மிகச் சரியாக ரோடு போட்டிருக்கிறீர்கள். உங்களுக்குப் பாராட்டு தெரிவித்திருக்கிறார்களே.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாலையை எடுத்துக்கொண்டு, அந்தச் சாலைப் பணிகளைச் செய்வதற்கு காலதாமதம் ஆகிறது. ஆகவேதான், மிக வேகமாக சாலைப் பணிகளையெல்லாம் முடிப்பதற்காகத்தான் இன்றையதினம் அது நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Pradan Mantri Gram Sadak Yojana இப்போது Rural Development Department-லிருந்து, Highways-க்கு transfer பண்ணியிருக்கிறீர்கள், shift பண்ணியிருக்கிறீர்கள். ஆனால், ஏற்கெனவே 2004-2005-ல் Rural Development Department Engineers அதற்கு estimate போட்டு அனுப்பியிருக்கிறார்கள். இப்போது அந்த guidelines-ஐப் பார்த்து, 160 கோடிக்கு, 2005-2006 ஆம் ஆண்டிற்கு Highways மூலமாக எடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், 500 population இருக்கிற இடத்திலேதான் நிறைய roads வருகிறது. அதற்கு கடந்த ஆண்டு, 2004-2005-ல் 300 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு 500 population இருக்கிற பகுதியில்தான் நிறைய roads இருக்கிறது. 400 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால், 160 கோடிதான் சொல்லியிருக்கிறீர்கள். 160 கோடி ரூபாய் — Highways Department-ல்

அவர்கள் survey பண்ணியிருக்கிறார்களா? இல்லை, ஏற்கெனவே Rural Development Department-ல் இருந்தவர்கள் கொடுத்த roads-க்கு மட்டும் வைத்து இதைப் பண்ணியிருக்கிறீர்களா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஊரக வளர்ச்சித் துறை மூலமாகக் கொடுக்கப்பட்ட ரோடுகளுக்கு, முழுமையாக அந்த ரோடுகள், அங்கே மதிப்பீடு செய்யப்பட்ட அளவுகளிலேயே எடுத்துச் செய்யப்படும். அதற்கு மேற்கொண்டு வருவதையும், அங்கே Highways Department மூலமாக எடுத்து மிக வேகமாகவும், விரைவாகவும் நடத்துவதற்காகத்தான் இந்த மாற்றத்தை கொள்கை முடிவாக எடுத்திருக்கிறோம்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Highways Department செய்தாலும், Rural Development Department செய்தாலும் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், நீங்கள் Highways Department-க்கு வந்த பிறகு *160* கோடிக்கு மட்டும்தான் சொல்லியிருக்கிறீர்கள். *400* கோடி என்று இருந்தால்தான் அதற்கு ஒரு importance இருக்கும்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மத்திய அரசினுடைய P.M.G.S.Y. திட்டம், மாநிலத்தினுடைய நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்ற கருத்தினைச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களிலும் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகத்தான், மத்திய அரசினுடைய அந்த P.M.G.S.Y. வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்கு ஒரு யூனியனுக்கு ஒரு பொறியாளர் என்றும், ஒரு Overseer என்றும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கு இருக்கின்ற, ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகின்ற வேலைகளைக் கவனிப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது. வேலை நடக்கின்றபோது, சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, தல ஆய்வுக்கு அவர்களால் செல்ல முடியவில்லை என்ற கருத்து அங்கு பரவலாக வந்த காரணத்தினால், விரைவாக அந்தப் பணிகளை முடிக்க வேண்டிய காலகட்டத்தில், அந்த ஒரே காரணத்திற்காக ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து, நெடுஞ்சாலைத் துறைக்கு அந்தப் பணிகள் மாற்றம் செய்யப்பட்டன. ஊரக வளர்ச்சித் துறையில் அந்தப் பணிகள், எந்தெந்த சாலைகள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்பதனை அந்த ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் எங்களுக்கு, அந்தச் சாலைகளினுடைய வகைப்பாட்டினை மொத்த list-ஐயும், அவர்கள்தான், ஊரக வளர்ச்சித்



துறையில் இருக்கின்றவர்கள்தான் தேர்வு செய்து அனுப்புகின்றார்கள். நாங்கள் பணிகளை மட்டும் எடுத்துக்கொண்டு, விரைவாகப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம். மற்றபடி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தமாதிரியான சந்தேகமும் இதில் படவேண்டாம். அவர் நினைப்பதற்கு மேலாக சாலைகள் உறுதியாகவும், தரமாகவும் போடுவதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *2004-2005* ஆம் ஆண்டுக் காலத்திற்குள் கிட்டத்தட்ட *117* கோடி ரூபாய்க்கு வேலையினுடைய தரத்திற்கு மதிப்பீடு வந்திருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் அந்த வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-20*

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைப் பணிகள் — Highways, மூவாயிரம் கோடி ரூபாயில் பராமரிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எங்களுடைய உத்தமத் தலைவர் Golden Quadrilateral Scheme கொண்டு வந்தார். நான்கு வழிச் சாலைகள் மற்றும் இருவழிச் சாலைகள், காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் இன்றைக்கு நல்ல முறையில் ரோடுகளைப் போட்டிருக்கிறார்கள். அதனால் *8* ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பெட்ரோல், டீசல் ஆட்டோமொபைல்ஸ்க்கு மீதியாகும். அதேபோல நம் தமிழ்நாடு அரசும் இன்றைக்கு *3,000* கோடி ரூபாய்க்குத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக, நான் தமிழ்நாடு அரசுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய தொகுதி, தளி Constituency-தான். அதைவிட்டால் பெண்ணாகரம். இந்த இரண்டும்தான் இப்போது தமிழ்நாட்டிலேயே Backward Constituencies. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தளி Constituency-யில் தேசவிரோத சக்திகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், எல்லாத் துறைகளுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லி, எல்லாத் துறைகளிலும் இப்போது வேலை நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், Highways Roads-க்கு *5* கோடி ரூபாய் கொடுக்கின்ற மாதிரி அங்கேயிருக்கின்ற D.E. ஆகட்டும், நம் Minister இடம் போகும்போதுகூட, இந்தமாதிரி தேசவிரோத சக்திகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உங்களுக்கு *5* கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லியிருப்பதாக Secretary மற்றும் எல்லோரும் சொல்லியிருந்தார்கள். Special Funds என்று

சொல்லி, D.E. 5 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று Highways Secretary மற்றும் Collector, எல்லோருக்கும் கேட்டு அனுப்பியிருந்தார். Highways Secretary, Finance Department-க்கு அனுப்பியிருக்கிறார். Finance Department-ல் அது Secretary வரை போகவில்லை. அந்த section-ல் இருக்கக்கூடிய Clerk, இது regular scheme-ல் இருக்கக்கூடியதுதான்; அதை ஏன் செய்யக்கூடாது என்று return அனுப்பியிருக்கிறார்கள். அதைப்போய் கேட்டால் அது C.E.க்குத் தெரியவில்லை. Secretary-க்கும் இதுவரையில் தெரியவில்லை. ஆனால், அந்த Highways Road-க்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லும்போது, இதனை regular scheme-ல் ஏன் செய்யக்கூடாது என்று ஒரு query போட்டு நிதித் துறையிலிருந்து திருப்பி அனுப்பினால் என்ன இது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தேச விரோத சக்திகள் அதிகமாக இருக்கக்கூடிய இடத்தில், தேசவிரோத சக்திகளை உருவாக்கக் கூடாது என்கின்ற காரணத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்கிறார்கள். நக்சலைட்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம் அதனுடைய அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாலை வசதியாக இருந்தாலும் சரி, குடிநீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தக்க ஆலோசனை வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் மற்ற கோட்டங்களுக்கு ஒதுக்கப்படுவதைக் காட்டிலும் தருமபுரி கோட்டத்திற்கு அதிகப்படியான நிதியை, அது நெடுஞ்சாலைத் துறையினுடைய பொதுச் சாலையாக இருந்தாலும் சரி, கிராமச் சாலையாக இருந்தாலும் சரி வருகிற நிதியாண்டில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அடிக்கடி தளி தொகுதியில் தேசவிரோத சக்திகள் அதிகமாக இருக்கின்றன என்று திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார். இதை அப்படியே அவைக் குறிப்பில் இருக்கவிட்டால் தளி தொகுதியைப் பற்றியே ஒரு தவறான எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடும். ஒட்டுமொத்தமாக தருமபுரி மாவட்டத்தில் ஏழ்மை அதிகமாக இருப்பதால் அங்குள்ள இளைஞர்கள்





நக்சலைட்டுகள் இயக்கத்தில் போய்ச் சேருகின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அபாயம் இருக்கிறது. கடந்த காலத்தில் தருமபுரி மாவட்டத்தில் அவ்வப்போது நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் தலை தூக்கியதற்கு இந்த ஏழ்மைதான் காரணம். தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறது. இப்போது தேசவிரோத சக்திகள் தருமபுரி மாவட்டத்தில் இல்லை. அவர்களைத் தலைதூக்க இந்த அரசு அனுமதிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தருமபுரி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், குறிப்பாக கிராமப் பகுதிகளில் ஏழ்மை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அண்டை மாநிலங்களிலிருந்து ஊடுருவி வரக்கூடிய நக்சலைட்டுகளின் தவறான போதனையினால் நம்முடைய தமிழ்நாட்டு இளைஞர்கள், அந்த மாவட்டத்தில் வசிப்பவர்கள், தவறான பாதையில் சென்றுவிடக்கூடாதே என்பதற்காக அங்கே Social Structure, சமுதாய அமைப்பை வலிமைப்படுத்துவதற்காக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை அந்த மாவட்டத்தில் மேற்கொண்டிருக்கிறோம். அந்த ஏழ்மையை அகற்ற வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். இளைஞர்களுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்கள் சொந்தக் கால்களில் நின்று சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், அந்த மாவட்டத்தில் முதன்முதலாக இளைஞர்களுக்கு, ஆண்களுக்கு சுய உதவிக் குழுக்களைத் தொடங்கியிருக்கிறோம். எப்படி இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மகளிருக்கு சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்து அது ஒரு பெரிய அமைப்பாக இன்றைக்கு பரவியிருக்கிறதோ, அதைப்போலவே ஆண்களுக்கும், இளைஞர்களுக்கும் குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே இருக்கின்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்களைத் தொடங்கி அவர்கள் சொந்த முயற்சியிலேயே பல தொழில்களை மேற்கொண்டு அந்த ஏழ்மையிலிருந்து விடுபட்டு வாழ்க்கையில் மேம்பாடு அடைய வேண்டும், மேன்மை அடைய வேண்டும் என்பதற்காக சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

முற்பகல் 11-25

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு தமிழ் அவ்வளவு நன்றாக பேசத் தெரியாது. ஆனால், நான் எழுதி வைத்திருக்கிறேன் மாண்புமிகு முதலமைச்சர்..

(மணியடிக்கப்பெற்றது)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதலமைச்சர் சொன்னதிலே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்பே ஒரு சாலை சம்பந்தமாக ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலை சம்பந்தமாக இங்கே குறிப்பிட்டார்கள். ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலையை இப்பொழுது இந்த நேரத்திலே நெடுஞ்சாலைத் துறை எடுத்து செயல்படுத்துகிறது. ஆனால், நெடுஞ்சாலைத் துறைக்கு என்ன ரேட் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த ரேட்தான், அந்தத் தொகைதான் இன்றைக்கும் வழங்கப்பட்டு அந்தச் சாலைகள் மேம்பாடு செய்யப்படுகின்றன. ஆனால், நெடுஞ்சாலைத் துறையில் இருக்கிற சாலை மேம்பாடு அல்லது தரமான சாலை வேண்டுமென்று சொன்னால் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு ஒதுக்க வேண்டுமோ, அதை ஒதுக்கினால்தான் அது மேம்படும். சாலையை மட்டும், ஊராட்சி ஒன்றியத்தின் சாலையை மட்டும் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றியதனாலேயே அந்தச் சாலை மேம்படும், தரமும் உயரும் என்று சொல்வது பொருத்தம் அல்ல. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்கள் செய்கிற பணிகளைத்தான், அந்தப் பணிகளைத் தான் நாங்கள் செய்கிறோம். அதைக்கூட இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொண்டால் நாங்கள் எந்தப் பணியைச் செய்வது என்கிற ஒரு வினா இன்றைய தினத்திலே எழுகிறது. ஆகையால், அந்த ஊராட்சி ஒன்றியப் பணிகளை அவர்களே — அவர்களிடத்திலேயே செய்வதுதான் சரியாக இருக்கும் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது ஊராட்சிச் சாலையாக இருந்தால் குறைந்த மதிப்பீடு அளவிலும், நெடுஞ்சாலைத் துறை சாலையாக இருந்தால் அது அதிகமான மதிப்பீடு என்ற தோற்றத்திலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாலையினுடைய தன்மையைப் பொறுத்துதான் நாம் நிதியை ஒதுக்குகின்றோம். அந்தச் சாலை மிகவும் மோசமான சாலையாக இருந்தாலும் அல்லது புதிதாக போடப்படுகிற சாலையாக இருந்தாலும் அதற்குத் தகுந்தாற்போலத்தான் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அது ஊராட்சிச் சாலையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற சாலையாக இருந்தாலும் சரி, தரமுள்ள சாலைகளாக உருவாக்குவதில்தான் மாண்புமிகு அம்மாவின் அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், 2 மணித் துளிகளில் பேச்சை முடியுங்கள். கோரிக்கையை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** One hour பேசினார் சந்தானம், சார். நான் ஒரு 10 நிமிடம்கூட பேசவில்லை. (சிரிப்பு) தெலுங்கு மொழி பேசுகிறவர்கள், தமிழ் மொழி பேசுவது கொஞ்சம் கஷ்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நன்றாகப் பேசுகிறீர்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து சுகாதாரம். தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஒவ்வொரு யூனியனுக்கும் 30 bed hospitals கொண்டுவந்திருக்கிறீர்கள். அது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். எங்கள் தளி யூனியன் தமிழ்நாட்டிலேயே பெரிய யூனியன் என்று சொல்லி, யூனியனுக்கு ஒரு hospital இருந்தால்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் தளி Constituency-க்கு election நேரத்தில் வரும்போது எல்லா M.L.A.-க்கள் மூலமும், எல்லாத் தொகுதி மக்களும் 30 bed hospital தளிக்கு வேண்டுமென்று சொன்னதற்கு, அந்த G.O.-வையே மாற்றி எங்கள் தளி Constituency-க்கு 2, 30 bed hospital கொடுத்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல தேன்கனிக்கோட்டை, தாலுக்கா hospital-லில் டாக்டரே கிடையாது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் போன Assembly-யிலே பேசும்போதுகூட நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தேன்கனிக்கோட்டை hospital-லில் ஒரு டாக்டர்கூட இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 டாக்டர்களை தேன்கனிக்கோட்டை hospital-க்குப் போட்டால் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு hospital-லில் ஏதாவது சம்பவம் accident நடந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, அமைச்சர்களோ காலை நேரத்தில் போய்ப் பார்த்து வருவார்கள். ஆனால், evening time 8 மணிக்கு மேல் போனால் அங்கே கொசு அதிகமாக இருக்கிறது. தாங்க முடியாது. அதைப் பற்றி ஏற்கெனவே நான் பேசியிருக்கிறேன். அங்கே பாவம் அவர்களே ஏதோ ஒரு disease-னால் வந்து படுத்திருப்பார்கள். அதற்குமேல் இன்னும் கொசுத் தொல்லைகூட. அதற்கு ஏதேனும் அமைச்சர் அவர்கள் All-out போன்றவை எல்லாம் வந்திருக்கிறது. அதை ஒவ்வொரு hospital-க்கும் நிறைய கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி sanitation. ரொம்ப important. Sanitation-க்கு நீங்கள் first preference கொடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு village-ல் Sanitary Complex 2-1/4 இலட்சத்தில் எல்லா Village Panchayat-லும் போட்டிருக்கிறார்கள். Village-ல் சில இடங்களில் அதை use பண்ணுவதில்லை. ஆனால், hospital-களில் அதைப் போட்டால் ரொம்ப நன்றாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்கள் தளி Constituency, மிகப் பெரிய Constituency. ஏற்கெனவே 2 கொடுத்திருக்கிறீர்கள். கெலமங்கலம் யூனியனில் 10 பஞ்சாயத்துகள். பெட்டமுகலாளம், அனுமந்தாபுரம், இருதுகோட்டா இந்த மாதிரி பஞ்சாயத்துகளில் forest gate இருக்கிறது. அங்கிருந்து hospital-க்குக் கொண்டுவர வேண்டுமென்றால், ஒரு டெம்போவிலே, ஒரு காரிலே கொண்டுவர வேண்டுமென்றால் 125 ரூபாய் அந்த கேட்டுக்கு கட்டிவிட்டுதான் அவர்களால் வெளியே வரமுடியும். அதுவும், தேன்கனிக்கோட்டை மருத்துவமனைக்குப் போனால், அங்கே டாக்டரே கிடையாது. அஞ்செட்டியிலே, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கொடுத்தால் அங்கே Scheduled Tribes, எஸ்.சி. மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, அங்கே 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை வேண்டும். 2005-2006 ஆம் ஆண்டிலேகூட 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கட்டுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அந்த forest area-வில் இருக்கிறவர்களுக்கு, அஞ்செட்டியிலே 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோல ஸ்வஜல்தாரா, திட்டத்தில் Central Government-ல் announce பண்ணியிருக்கிறார்கள், 10 சதவிகிதம் public contribution கொடுத்தால் water கொடுக்கப்படும் என்று. ஆனால், தளி தொகுதியில் வந்து...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு உட்பட்ட மருத்துவமனையைப் பற்றிக் கூறினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாக, இருக்கக்கூடிய மருத்துவமனைகளினுடைய தரத்தை



உயர்த்த வேண்டும் என்றவொரு நல்ல எண்ணத்திலே, இன்றையதினம் உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, கிட்டத்தட்ட அத்தனை அரசு மருத்துவமனைகளினுடைய தரம் உயர்த்தப்படுகிறது. ஆகவே, நீங்கள் கூறிய அந்த மருத்துவமனையினுடைய தரம் கூடிய விரைவிலே உயர்த்தப்படும். அதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு, கருவிகளும் வாங்கப்படும். அதேபோல தேன்கனிக்கோட்டை மருத்துவமனையிலே மருத்துவர்கள் இல்லை என்ற ஒரு குறையைக் கூறினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம், ஆளுநருடைய உரைக்கு பதில் அளிக்கும்போது, தமிழ்நாட்டிலே நிரப்பப்படாமல் இருக்கக்கூடிய, ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 2,322 மருத்துவர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு செய்ய வேண்டுமென்றும், அதற்கு உடனடியாக சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு நாளானால்கூட, விரைவிலே அதற்கான மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று, கூடிய விரைவிலே குறைந்தது இந்த மாதம் 17, 18 ஆம் தேதியிலே, அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலே அங்கே இருக்கக்கூடிய, அதாவது, அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய மருத்துவர்களை, அங்கே இருக்கக்கூடிய Employment Exchange மூலமாகத் தேர்வு செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல, நீங்கள் கூறியதுபோல, கொசுக்கள் ஒழித்தல், sanitary ஆகியவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த உலக வங்கி மூலம் நிதி வருகிறபோது முதல் மாவட்டமாக—5 மாவட்டங்களை உலக வங்கி தேர்ந்தெடுக்கிறது — அதிலே கிருஷ்ணகிரியும், தருமபுரியும் அடங்கும். ஆகவே, அதற்கும் கூடிய விரைவிலே, மாண்புமிகு முதலமைச்சருடைய அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** ஐந்து மணித்துளிகள் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட, கிருஷ்ணகிரியில் முதல் ஆண்டு முடிந்து, இரண்டாவது ஆண்டில், அரசு மீட்டிங்கில்

[திரு. கே.வி. முரளிதரன்] [2005 மார்ச் 10

சொல்லியிருக்கிறார்கள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டுவரப்படும் என்று. ஆனால், பட்ஜெட்டில் நீங்கள் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அதைக்கூட கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் floriculture-க்காக ஓசூர் தொகுதி, தளி தொகுதி மக்களை முன்னேற்ற வேண்டும், விவசாயிகளை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக 25 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், ஓசூர் தாலுகாவில், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் இருக்கிற மக்களுக்கு அது எந்தவிதத்திலேயும் பயன் இல்லை. ஏனென்றால், ஆந்திர மாநிலத்தில் 2 ஏக்கர், 3 ஏக்கருக்கு 2 கோடி ரூபாய், வங்கியில் லோன் வாங்குகிறார்கள். ஆனால், ஓசூர் தொகுதியில், தளி தொகுதியில் இருக்கிறவர்களுக்கு, பேங்கில் லோன் கேட்டால் கொடுப்பது இல்லை. அதற்கு வந்து...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் வறுமையை ஒழிப்பதற்காக, ஏழ்மையைத் தவிர்ப்பதற்காக, தமிழகத்திலே இருக்கிற மற்ற மாவட்டங்களைக் காட்டிலும், சிறப்புத் திட்டமாக தருமபுரி மாவட்டத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் துல்லிய பண்ணையியல் திட்டத்திற்காக மட்டும், மாண்புமிகு அம்மா அவர்கள் 7 கோடியே, 20 இலட்சத்து, 60 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தினுடைய குறிக்கோள் 100 சதவிகிதம், மொத்தமாக 400 ஹெக்டேர், அந்தத் துல்லிய பண்ணையியல் திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதிலே முதல்கட்டமாக இந்த நிதியாண்டு மட்டும் 100 ஹெக்டேர் நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதிலே காய்கறிகள், மலர் வகைகள், மற்ற பயிர் வகைகளை பயிர் செய்வதற்காக 100 சதவிகிதம் மானியம் கொடுப்பதற்காக மட்டும் இந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும், 2005-2006 ஆம் நிதியாண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே இருக்கிற அந்த ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 மார்ச் 10]

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது ஒன்று, அமைச்சர் பதில் சொன்னது ஒன்று. (குறுக்கீடு) நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு உங்கள் பதிலைச் சொல்லுங்கள். எனக்கு time இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நீங்கள் பேசி, எல்லா இளைஞர்களுக்கும், கால் ஏக்கர், அரை ஏக்கர் வைத்திருக்கக்கூடியவர்களுக்கும் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 10 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் அவர்கள் Floriculture செய்வதற்கு வசதியாக இருக்கும். (குறுக்கீடு) வேண்டாம், வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் உதவி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ 100 சதவிகிதம் மானியமாகவே, அரை ஏக்கர், ஒரு ஏக்கரில் பயிரிடுகின்ற வேளாண் பெருமக்களுக்கு, குறு மற்றும் சிறு விவசாயப் பெருமக்களுக்கு 100 சதவிகித மானியத்திலேயே அந்த வாய்ப்பை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களுக்கு காய்கறிகளை எடுத்துக்கொண்டுவந்தால் விவசாயிகளிடமிருந்து 10 சதவிகிதம் கமிஷன் வாங்குகிறார்கள். Purchaser-களிடம் 5 சதவிகிதம், யார் Sales பண்ணுகிறார்களோ அவர்களிடம் 5 சதவிகிதம் என்றுதான் பிடிக்க வேண்டும். ஆனால், எல்லா மார்க்கெட்டிலும் இன்றைக்கு 10 சதவிகிதம் என்று பிடித்துவிடுகிறார்கள். ஓசூரில்கூட ஒரு மார்க்கெட் இருக்கிறது. இந்தத் தகவல் அரசுக்கு வந்திருக்காது. ஏனென்றால், Private-ல் செய்கிறார்கள். இது வேளாண்மை சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயம் என்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, 5 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் Israel Project. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும், தருமபுரி மாவட்டத்திற்கும்— மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர மாநிலத்தில், குப்பம் தொகுதியில் இருக்கிற மாதிரி —Israel Project-ஐக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். Israel Project-னுடைய aim என்பது Drip Irrigation, Sprinkler System இவற்றிற்குத்தான் செய்ய வேண்டும். ஆனால், இன்றைக்கு ஓசூர் தொகுதியில் இதைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு

நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஆனால், Israel Project கௌவரப்பள்ளி அணைப் பகுதியில் கொண்டு வந்திருக்கிறார்கள். தண்ணீர் எங்கு பாய்கிறதோ அங்கு போட்டிருக்கிறார்கள். இங்கே Drip Irrigation எதற்கு? இங்குதான் தண்ணீர் அதிகமாக இருக்கிறதே! அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சரவர்களே, நான் சொல்லி முடித்துவிடுகிறேன் இருங்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், ஒரு மணித்துளிக்குள் உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** அதேபோல் AGROFED நிறுவனம். இந்த AGROFED நிறுவனம் நட்டத்தில் இயங்குவதால், தவிர்க்க முடியாத காரணத்தினால் மூடப்பட்டுள்ளது. சுமார் 380 பணியாளர்கள் பணியில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு அரசின் பிற துறைகளில் மறு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு வேளாண்மைத் துறையில் இலவச மின் இணைப்புக் கேட்டால் 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். இன்றைக்கு கர்நாடக மாநிலம், இன்னும் சில மாநிலங்களில் எல்லாம் மின் இணைப்பு வேண்டுமென்றால் இலவசமாகக் கொடுக்கிறார்கள். 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் வாங்குவதில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னால் application போட்டாலே மின் இணைப்புக் கொடுத்துவிடுகிறார்கள். அதேபோல் தமிழ்நாட்டிலும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. கே.வி. முரளிதரன்:** உரையை முடித்துவிடுகிறேன் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தளி தொகுதியில் தேசவிரோத சக்திகள் அதிகமாக இருக்கிறது என்று பதிவாகிவிடும் என்று சொன்னார்கள். ஆந்திர மாநிலத்திலும், பீகார் மாநிலத்திலும் நக்சலைட்டுகள் அதிகமாக இருக்கின்றார்கள். அங்கே அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் நக்சலைட்டுகள் உருவாகக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Social Economic Funds-ஐ கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும்,



தருமபுரி மாவட்டத்திற்கும் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

எங்களுக்கு E.B. ரொம்ப important. மின்சாரத்தைப் பொறுத்தவரை, Low Voltage அதிகமாக இருந்தது. அதற்காக தளி தொகுதிக்கு மட்டுமே 5 கோடி ரூபாய் கொடுத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் Highways Roads. இன்றைக்கு Central Road Funds மூலமாகவும், நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும், Other District Roads, Major District Roads இவற்றிற்கு 15 கோடி ரூபாய் கொடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் ஒகேனக்கலுக்கு தருமபுரி வழியாக சுற்றிப் போய்க் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு தளி வழியாகவும், நாட்ராம்பாளையம் வழியாகவும் பெங்களூர், மைசூருக்குப் போகிறபோது 50 கிலோமீட்டர் தூரம் குறைவாகிறது. இதற்கு Formation Road போட்டிருக்கிறார்கள். அதற்கு 2 கோடி ரூபாய் கொடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல தளி தொகுதியில், நாட்ராம்பாளையத்திலிருந்து பெண்ணாகரத்திற்கும், தருமபுரிக்கும் போவதற்கு 8.5 கோடியில் புதிய தார்ச் சாலை போட்டிருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தளி தொகுதியில் I.L.O.Road -International Labour Organisation -- 1985-ல் போடப்பட்டது. இதுவரைக்கும் பராமரிப்பு செய்யப்படாமல் தற்போது செய்யப்பட்டு வருகிறது. இன்றைக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் தளி யூனியனுக்கு கொடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் Plus Two மாணவர்கள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு Horticulture Research Institute என்று ரூ.2 கோடியில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் Residential School for Scheduled Tribes. அதற்கு ரூ.50 இலட்சம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் Part Time Societies. அதிலே 200 கார்டுகள் இருக்க வேண்டும்; 2 கிலோமீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது அரசினுடைய விதி. ஆனால், தருமபுரி மாவட்டத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் இந்த மாதிரி எல்லாம் இருக்கக்கூடாது என்று சொல்லி, அதற்கு relaxation கொடுத்திருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் நக்சலைட்டுகள் இரண்டு வருடங்களாக நோட்டீஸ் போடுகிறார்கள். அந்த நோட்டீஸில் முக்கியமான விஷயம் என்னவென்றால்-நீங்கள் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. தமிழ்நாட்டில், தளி யூனியன் மிகவும் பெரிதாக இருக்கிறது—அஞ்செட்டியை தனி யூனியனாக ஆக்கி Scheduled Tribes-க்கு Tribal Union-ஆக அமைக்க வேண்டுமென்று அவர்கள் ஒரு நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

முற்பகல் 11-40

அதேபோல இன்றைக்கு நாங்கள் காய்கறி வண்டியை ஓசூரிலிருந்து, Thali Constituency-யிலிருந்து கோயம்புத்தூருக்கு தருமபுரி வழியாக கொண்டுசெல்ல வேண்டுமென்று சொன்னால், 320 கி.மீ. தூரம் ஆகிறது. எங்களுக்கு அஞ்செட்டி, உரிகம் வழியாக 9 கி.மீ. தூரத்தில் ஒரு bridge கட்டினால் 100 கி.மீ. தூரம் குறைவாகும். தற்போது 100 கி.மீ. extra ஆகிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கண்டிப்பாக செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல இன்றைக்கு Thali Constituency-யில் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அதில் Jatropha . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் பேசவேண்டும். நேரமாகிவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** அதிலே Jatropha — நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதிலே interest ஆக இருக்கின்றார்கள். (சிரிப்பு) Sericulture அதில் ஆயிரம் ஏக்கர் அப்படியே இருக்கிறது. இங்கே சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 5 ஏக்கர், 5 ஏக்கராகக் கொடுத்து



Jatropha seeds-ஐ free ஆகக் கொடுத்தால் நமக்கு bio-diesel உற்பத்தி செய்து கொடுக்க வாய்ப்பாக இருக்கும். இதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. கே.வி. முரளிதரன்:** ஒரேயொரு நிமிஷம். எங்களுக்கு - எம்.எல்.ஏ.க்களுக்கு salary அதிகமாகக் கொடுக்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லியிருந்தீர்கள். Car loan—interest இல்லாமல் கொடுக்கிறோம் என்றும் சொல்லியிருந்தீர்கள். இதுவரைக்கும் கொடுக்கவில்லை. எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கை இது. கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு salary-யை அதிகமாகக் கொடுக்க வேண்டும், மற்றும் car வாங்குவதற்கு interest இல்லாமல் loan வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல் என்னுடைய Thali Constituency, Hosur Constituency-யில் தெலுங்கு பேசுகிறவர்கள் இருக்கிறார்கள், கன்னடம் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள், தமிழ் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். திரிவேணி சங்கமம் என்று இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எல்லா languages-ம் தெரியும். சகலகலாவல்லி என்றுகூட நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். எங்கள் Thali Constituency, Hosur Constituency-களினுடைய நீண்டநாளைய கோரிக்கை — ஆந்திரப் பிரதேசத்தில் 14 மாவட்டங்களில் உருதுவை second official language-ஆகக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுடைய நீண்டநாளைய கோரிக்கை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாக்களில் second official language தெலுங்கு. அதைக் கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, S.S.A. (Sarva Shiksha Abhiyan) திட்டம் பற்றி மாண்புமிகு Education Minister மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. இது நீண்டநாள் கோரிக்கை, இதைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லி, இந்த பட்ஜெட் விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கட்சியினுடைய தலைவர் பாரதப் பிரதமராக இருந்தபோது, அவர்கள் தமிழகத்திலே அனைவருக்கும் கல்வித் திட்டம்

மிகச் சிறப்பாகச் செயல்பட்டது என்று கூறினார்கள். அன்றைக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் மத்தியில் ஆளுகின்ற பாரதப் பிரதமர் அவர்கள், அனைவருக்கும் கல்வித் திட்டம் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக செயல்படுகின்ற மாநிலம் தமிழகம், அதிலும் தமிழகத்தைப் பார்த்து மற்ற மாநிலங்களும் செயல்பட வேண்டும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கடந்த 10 நாட்களுக்கு முன்பு டெல்லியில் நடைபெற்ற கூட்டத்திலே பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

அதுபோல இங்கு மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லையென்று கூறினார்கள். 2001-லிருந்து 2004 வரை 12,922 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதிலே மொழி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல மற்ற மாநில ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்திருக்கின்றவர்கள், இங்கே தமிழகத்திலே பதிவு செய்கின்றபோது, தமிழகத்திலேயும் அவர்கள் மறு தேர்வு எழுதி, இந்தத் தேர்வில் வெற்றி பெற்றால்தான் அவர்கள் இங்கே அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, urgency-ல் முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். எங்கள் தொகுதியிலே யானை சுனாமி அதிகமாக இருக்கிறது, crops எல்லாம் damage பண்ணுகிறது, மிதித்து விடுகின்றது என்று 2003-2004-ல் நான் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், Central Government Fund வருவதற்கு நீண்டகாலமாகிறது, இரண்டு வருடம், மூன்று வருடம் ஆவதால், மாண்புமிகு C.M. Special Fund-லிருந்து damage-க்கு நிவாரணம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் அமலுக்கு வரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது அமலுக்கு வரவேண்டும். இதில் நான் கேட்பது 40 கி.மீ.க்கு solar fencing or trench போட்டுவிட்டால் எங்களுக்கு யானை சுனாமியே இருக்காது. கண்டிப்பாக இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுதிக்கொடுங்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை,



மாண்புமிகு அம்மா அவர்கள் பரிவுடன் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றார்கள். தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அறிக்கை தொடங்குகின்றபோது, "திண்ணிய மன உறுதியுடனும், திடமான நம்பிக்கையுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெள்ளத் தெளிவான சிந்தனையுடனும், தான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வாயிலாக, முந்தைய ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் நிலவிய நம்பிக்கையற்ற, இருள் கவ்விய படுகுழியிலிருந்து தமிழகத்தை மீட்டு, மாநில மக்கள் அனைவருக்கும் வளமான வாழ்க்கையினையும், அளப்பரிய வாய்ப்புகளையும் அளித்து, இந்தியாவிலேயே முதல் நிலை மாநிலம் என்ற இலக்கை எய்திடும் நோக்கத்தோடு, வலுவான வளர்ச்சி நிறை மாநிலமாக தமிழகத்தை மாற்றியுள்ள" என்ற வாசகங்களோடு தொடங்கி, '2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் வருவாய் செலவுக் கணக்கு, செலவு அதிகரித்திருந்த போதிலும், கூடுதலான வருவாய் வரவு செலவினால் வரவு செலவுத் திட்டப் பணியான வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை நிதித் திருத்த மதிப்பீட்டில் குறைந்துள்ளது' என்று சொல்லி, 'நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் இந்த ஆண்டிற்கான இலக்குகள் எட்டப்படும்' என்கின்ற வாக்கியத்தோடு இந்த பட்ஜெட் முடிவடைந்திருக்கிறது. இடையில் ஏறத்தாழ 54 தலைப்புகளில் அடங்கிய 186 பாராக்களும், இணைப்பு 10 தலைப்புகள் அடங்கிய 27 பாராக்களும் கொண்ட விரிவாக்கங்களும், அவற்றிற்கான நிதியின் வரவு, அவற்றிற்கான நிதியின் செலவு போன்றவைகள் எல்லாம் விவரிக்கப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்படியிருந்தாலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களின் வாழ்க்கை மேம்படவும், வாழ்க்கையை உத்தரவாதப்படுத்தவும் எதுவும் பெரிய அளவில் சொல்லப்படவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் வாழ்க்கையில் எந்த நம்பிக்கையும் அற்ற நாடோடிகளாக வாழ்ந்து, வாழ்க்கை தேடி அண்டை மாநிலங்களுக்கு, பெங்களூருக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கோலப்பன் குழு பரிந்துரையை அமல்படுத்தியபோது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அண்ணா

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற உடனேயே இத்திட்டத்தில் குறைகளும் குறைபாடுகளும் உள்ளன, இவற்றைப் போக்கி பிசிறில்லாமல் சிறந்த முறையில் அமல்படுத்தப் போகிறோம் என்று அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால், சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்கிற பாங்கு அறிக்கையிலே காணப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. எனவே, கோலப்பன் குழு பரிந்துரை, ஒரு கோடி மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை என்ற முறையில் அதனை அமல்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, ஊராட்சிகளில் இன்று தலைவர்களாக தேர்வு செய்யப்பட்டவர்கள், தெரு விளக்கு, குடிநீர், கிராமச் சாலைகள் பராமரிப்புகளோடு, தாழ்த்தப்பட்டவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கான உதவித் தொகைகளைக்கூட வழங்க முடியாமல் மிகப் பெரிய அளவிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே இந்தப் பராமரிப்புக்கான நிதி மாதந்தோறும் ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு நடைமுறை என்பது இல்லாமல் போய் எப்போதாவது ஒதுக்கப்படும் நிதியும் மின்சாரப் பற்றாக்குறை, மின்சார பாக்கிக்காக பிடித்தம் செய்துகொண்டது போக, மிச்சம் மீதி ஏதும் இருந்தால் ஊராட்சிகள் பக்கம் தலை காட்டுவதாகத் தெரிகிறது. இந்த முறைகள் போக்கப்பட்டு ஊராட்சிகளுக்குத் தடையின்றி நிதி உதவி கிடைக்கவும், ஊராட்சித் தலைவர்கள் தங்கள் மின்சாரப் பற்றாக்குறையைத் தாங்களே கட்டுகின்ற அந்தச் சந்தர்ப்பத்தை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** 2004-2005 ஆம் ஆண்டிற்கு ஊராட்சிகளுக்கு ரூ.365.53 கோடியானது நேரடியாக நிதி அனுப்பப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. அதேபோன்று கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை, விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு அறுவடைக் காலங்களில் ஏற்பட்டுள்ள பெரும் விலைச் சரிவினால் வர்த்தகச் சூதாடிகளின் சூதாட்டத்தின் காரணமாகவும், பெரும் பகுதி முதலீடுகள் சுருட்டப்படுகின்றன. விவசாயிகளோ மரம் ஏறி கைவிட்டவன்



போல் ஆகிவிடுகிறான். இதன் காரணமாகவும், தொடர் வறட்சியின் காரணமாகவும், விழி பிதுங்கி நிற்கிறான் விவசாயி. விவசாயியைப் பொறுத்தவரை ஒரு சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டால் அது அவன் பிறவி முழுவதும் தொடர்கிறதே தவிர, அதை வேறு ஒரு சாகுபடியில் சரி செய்துவிட முடியாது என்கின்ற நிலை இன்றைக்கு நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியில் சிக்கியுள்ள விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை இந்த அரசு ஐந்து ஆண்டுக் கடன்களாக மாற்றியுள்ளது. அவர்கள் வாழ்க்கையில் இது மிகப் பெரிய சுமையாக மாறியுள்ளதே தவிர, மேலும் கடன் சுமை அதிகரித்துள்ளதே தவிர, இதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. எனவே, ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு கருணை காட்டியதைப் போன்று, விவசாயிகளினுடைய கஷ்டங்களுக்கும், கடன்களுக்கும் ஒரு கருணை காட்டி, இந்த அரசு இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு...

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர், நான் தலைவர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூட தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய பயிர்க் கடன், நீண்டகாலக் கடன் போன்றவற்றை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியவர்கள் மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள். மத்தியிலே நிதி இலாகாவை நிர்வகிப்பவர்கள். தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் நபார்டு வங்கியினுடைய ஒட்டுமொத்த நிர்வாகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நபார்டு வங்கியானது போதுமான அளவிற்கு நிதியை ஒதுக்கிக் கொடுத்தால், தமிழகத்தினுடைய கூட்டுறவுக் கடன்களை தமிழக அரசு எப்போதும் தள்ளுபடி செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதையும் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு ஆண்டு

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 10

காலம் கடனை வசூல் செய்வதில்லை என்றும், மூன்று ஆண்டு காலம் தள்ளி வைத்து சம தவணைகளில் வசூல் செய்வதாகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிற திட்டம் ஏதோ ஒரு சாதாரணத் திட்டம் என்பதைப் போலவும் குறிப்பிட்டார்கள். வறட்சியால் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் இருக்கிற விவசாயிகள் கடனைச் செலுத்துவதற்கு வேறு வழியின்றித் தவிக்கும்போது ஒரு மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இந்த அளவிற்கு இந்தியாவிலேயே செய்திருக்கிற ஒரே மாநிலம் தமிழகம் என்பதை நீங்கள் குறிப்பிலே வைத்துக்கொள்ள வேண்டும். வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு பெரிய தொகையை 2,598 கோடி ரூபாய் கடனை, விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனை, ஒட்டுமொத்தமாக இரண்டு ஆண்டு காலங்களுக்கு வசூல் செய்வதில்லை என்றும், அதற்குப் பிறகு 3 ஆண்டு காலங்கள் சம தவணைகளாக வசூல் செய்துகொள்வதென்றும், அதேநேரத்தில் 14 சதவிகிதம், 15 சதவிகிதம், 16 சதவிகிதம் என்ற தொகையில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களை எல்லாம் 9 சதவிகித வட்டி என்று கால நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிற பயிர்க் கடனுக்கு மாற்றிக் கொடுத்திருக்கிற ஒரே மாநிலம் தமிழகம் என்பதையும், மற்ற எந்த மாநில அரசும் (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்த இதுவரை முன்வரவில்லை. இப்போதுதான் தமிழக அரசு இந்தத் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தி இருக்கிறது என்பதனை மற்ற மாநில அரசுகள் தமிழக அரசினிடத்திலே, கூட்டுறவுத் துறையிடத்திலே கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, குறிப்பாக மேற்கு வங்காள மாநிலத்திலேகூட இன்னும் விவசாயிகளினுடைய பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்வது சம்பந்தமாக எந்தவகையான முடிவும் எடுக்கப்படவில்லை, இன்னும் பயிர்க் கடனைத் தள்ளி வைப்பதற்கும் எந்த வகையான திட்டமும் அறிவிக்கப்படவில்லை என்பதையும் இங்கே சொல்லி அமர்கிறேன்.

*முற்பகல் 11-50*

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு நபார்டு வங்கியின் மூலம் ஐந்தரை சதவிகித வட்டிக்குக் கடன் கொடுக்க 68 கோடி ரூபாய் வழங்கியதாகவும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பழைய கடனுக்குப் பிடித்தம் செய்துகொண்டதாகவும் அறிகிறேன். அவ்வாறு இருப்பின் அதைத் தவிர்த்து விவசாயிகளுக்குக் கடன் வழங்க வேண்டும் என இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று வேளாண் தொழிலுக்கான விதைகளையும், இடுபொருட்களையும்.....



2005 மார்ச் 10]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கு என்று பயிர்க் கடன் வழங்குவதற்குத் தனியாக எவ்வகையான தொகையும் இதுவரை நபார்டு வங்கியால் அனுமதிக்கப்படவில்லை. நபார்டு வங்கி தருமபுரி மாவட்டத்திலே மட்டும் விவசாயிகள் இதுவரை பெற்றுத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிற பயிர்க் கடன் சுமார் 400 கோடி ரூபாய் அளவிற்கு அப்படியே நிலுவையில் உள்ளது. இருந்தபோதும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் காட்டிய தனி அக்கறையின் காரணமாக 5 கோடி ரூபாய் அளவிற்கு மட்டும் பயிர்க் கடனானது இந்த ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கி எவ்வகையான நிதியும் அதற்குத் தனியாக இதுவரை ஒதுக்கவில்லை. அதற்கான கோரிக்கைகளை மாநில கூட்டுறவு வங்கி நபார்டு வங்கிக்குக் கடிதம் மூலமாகத் தெரிவித்திருக்கிறது. இதுவரை அதற்கான எவ்வகையான பரிசீலனைக்கான பதிலும் மாநில கூட்டுறவு வங்கிக்கு நபார்டு வங்கியிடமிருந்து வரவில்லை என்பதை இங்கே சொல்லி அமர்கின்றேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. வேளாண்மைத் தொழிலுக்கான விதைகளும், இடுபொருட்களும் - அநேகமாக நான் கருதுகிறேன் - ஏறத்தாழ 3, 4 ஆண்டுகளாக தொடர் வறட்சியின் காரணமாக விவசாயிகள் . . . .

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். விளக்கத்திற்கு நன்றி. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் கிட்டத்தட்ட 3 ஆயிரம் சங்கங்கள் இன்றைக்கு மூடுகின்ற மிகப் பெரிய ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதை மூடாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இல்லை, நலிவுற்றிருக்கிற இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? ஆக, 3 ஆண்டு கால கடனை, 2 ஆண்டு கால கடனை, 5 ஆண்டு காலத்திற்கு ஒத்திவைத்து மீண்டும், மீண்டும் விவசாயிகளுடைய - குருவித் தலையிலே பாரத்தைத் தூக்கி வைப்பது போன்றுதான் அது அமைந்திருக்கிறதே தவிர, அதிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை. இயற்கைச் சீற்றங்கள் என்பது தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அதற்கான வாய்ப்பே இல்லையே. இப்போது கூட்டுறவுச் சங்கங்களை மூடுகின்ற அபாயம் இருக்கிறதே, அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அதுபோல டெபாசிட் தொகைகள் சுமார் 22 கோடி ரூபாய், தமிழகத்திலே கூட்டுறவுச்

சங்கங்களிலே கட்டி அதைத் திரும்பப் பெறமுடியாமல், அதைக் கட்டியவர்கள் பணம் வேண்டுமென்று கேட்டு பல்வேறு கிளர்ச்சிகள் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு ஏதாவது ஒரு நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்பதையும் தாங்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று வகையான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, மூன்று வகையான விளக்கங்களை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். முதலாவதாக 3,000 கூட்டுறவு வங்கிகள் நட்டத்திலே இயங்குகின்றன, அவை எல்லாம் மூடுகின்ற அபாயத்திலே இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இத்தகைய சூழ்நிலை எப்போது ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக நன்றாக உணர்வார்கள். இன்றைக்கு, நேற்றைக்கு ஏற்பட்டது அல்ல, 4 ஆண்டு காலத்திற்கு முன்பு ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் செயல்பட்டபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போதும் இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருந்தார்கள். கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் மற்றும் அவ்வங்கிகளின் பணியாளர்களுடைய சம்பளத்தை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று உயர்த்தி, அதுவும் பின்தேதியிட்டு 2 ஆண்டு காலம், 3 ஆண்டு காலங்கள் என்று பின்தேதியிட்டு கூட்டுறவுச் சங்கங்களுடைய ஓராண்டு வரவுக்கு மேலாக அவர்களுடைய மூலதனமே மூழ்கிப் போகின்ற அளவுக்கு, ஒரே ஆண்டிலே ஒரே நேரத்திலே சம்பளத்தைப் பின்தேதியிட்டு எடுத்துக் கொண்டதன் விளைவாக —— அதை எடுத்து அவ்வாறு நிர்வகித்து வந்த நிர்வாகிகளும் அந்தச் சங்கத்தினுடைய பணியாளர்களும் பகிர்ந்து கொண்டதால் —— கூட்டுறவு வங்கிகள் அனைத்தும், கூட்டுறவு வங்கிகள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்தன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிந்துகொள்ள அவர் முயற்சித்ததன் மூலமாக தற்போதைய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அத்தகைய சம்பள உயர்வுகள் எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டன.

கூடுதலாகச் சம்பளம் பெற்றவர்கள், அந்தச் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு உத்தரவிட்டதற்கிணங்க இப்பொழுது





சம்பளங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுடைய நிலைகளை சரிப்படுத்துவதற்கு 2 ஆண்டு காலம் கடன் வசூல் செய்வதில்லை. அதற்குப் பிறகு 3 ஆண்டு காலம் சம தவணைகளாக கடனை வசூல் செய்துகொள்ளலாம் என்கின்ற புதிய சட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்ததன் மூலமாக ஏறத்தாழ 2,000 நலிவுற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு உள்ளது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே நிலுவையிலே உள்ள டெபாசிட் 25 கோடி ரூபாய் என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்டது தவறு. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே கடந்த காலத்திலே, 1996-லேயிருந்து 2001 வரை பெற்ற டெபாசிட் தொகையினுடைய அளவு 2,650 கோடி ரூபாய் அளவுக்கு உள்ளது என்பதையும், அந்த வங்கிகளிலே உள்ள டெபாசிட் 25 கோடி என்று நீங்கள் தவறாகக் குறிப்பிட்டீர்கள். அந்தப் பணத்திலே பெரும் பகுதி விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக அப்பொழுது வழங்கப்பட்டு, அப்பொழுதே நிலுவையில் வசூலாகாமல் உள்ளது. அவ்வாறு டெபாசிட் பெறப்பட்ட பணங்களிலே பெரும்பான்மையாக பினாமிக் கடன்களாக, gas loan என்றும், consumer loan என்றும், non-farm sector loan என்றும், பல்வகையாக சுமார் 2,650 கோடி ரூபாயை அப்பொழுது deposit drive என்ற முறையிலே வேகப்படுத்தி டெபாசிட்டைக் கூடுதலாக வட்டி கொடுத்து 18 சதமானம், 15 சதமானம், 16 சதமானம் என்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய கொள்கைக் கோட்பாடுகளுக்கு விரோதமாக கூடுதலாக வட்டி அறிவிக்கப்பட்டு, பொது மக்களிடமிருந்து கவர்ச்சிகரமான வட்டியைக் காட்டி, கூடுதலாக டெபாசிட்டைப் பெற்று, பெற்ற டெபாசிட் தொகையை தவறுதலான முறையில் கடன் இனங்களாகக் கொடுத்து ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வசூலாகாமல் தமிழகம் முழுவதும் நிலுவையிலே இருக்கிறது. அவ்வாறு கடனைப் பெற்றவர்கள் யார் என்றும்கூட அடையாளம் காட்ட முடியாத அளவிற்கு கடனை வழங்கியிருக்கிறார்கள். அத்தகைய ஒரு மோசமான நிலைமை நடந்திருக்கிற சூழ்நிலையிலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய சிறந்த, சீரிய சிந்தனையாழமிக்க வழிகாட்டுதலின்

பேரில்தான் அவையெல்லாம் சீர்படுத்தப்பட்டு வருகின்றன. மிக விரைவில் யாருடைய காலத்தில், என்னென்ன தவறுகள் நடந்தனவோ, அந்தத் தவறுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கான உத்தரவுகளை அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். நிச்சயமாக உப்பைத் தின்றவன், தண்ணீர் குடித்தே ஆக வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டேயாகும் என்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் தந்தார்கள். அதாவது 2,500 கோடி ரூபாய் டெபாசிட், பொது மக்களுடைய, கிராமப்புற சிறு விவசாயிகளினுடைய, ஏழை எளிய மக்களுடைய வைப்புத் தொகை 2,500 கோடி ரூபாய். கூட்டுறவுத் துறையை நம்பி, திரும்ப அந்தப் பணம் முதிர்வடைந்ததற்குப் பிறகு கிடைக்குமென்று சேமிப்புக்குப் போடப்பட்ட பணம். கையாடல் செய்யப்பட்டிருக்கலாம், முறைகேடு நடந்திருக்கலாம், வகைமாறியிருக்கலாம், வெளியிலே வசூலிக்க வேண்டியிருக்கலாம். நீங்கள் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பீர்கள். எடுக்க வேண்டும். அதில் மாறுபட்ட கருத்தில்லை. சம்பந்தப்பட்ட வைப்புத் தொகை, ஜனங்களுக்கு, உரியவர்களுக்குத் திரும்பக் கிடைப்பதற்கு இந்த அரசு என்ன உத்தரவாதம் அளிக்கிறது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடையத் தக்க வகையில் மக்களுடைய அரசாக அம்மாவுடைய அரசு செயல்படுகின்ற காரணத்தினால், நிச்சயமாக கூட்டுறவு நிறுவனங்களை நம்பி டெபாசிட் செய்த மக்கள் ஏமாற்றம் அடையாத வகையில், ஏமாற்றியவர்கள் பழிவாங்கப்பட்டு, அவர்களிடத்திலே வசூல் செய்யப்பட வேண்டிய தொகைகள் வசூல் செய்யப்பட்டு, உரிய முறையில் மக்களுக்குத் திருப்பி அளிக்கப்படும் என்கின்ற வாக்குறுதியை இங்கே சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில கூட்டுறவுச் சங்கங்களில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அடுத்து நீங்கள்தான் பேசுகிறீர்கள். பேசும்போது பேசுங்கள். கிருஷ்ணமூர்த்தியை முடிக்க விடுங்கள். (குறுக்கீடு) ஹேமச்சந்திரன்.



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுடைய பணியாளர்கள் இன்றைக்குப் பெறுகின்ற சம்பளம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெறுகின்ற சம்பளத்தைவிட கூடுதலாகயிருக்கிற காரணத்தினால், அந்தக் கூட்டுறவுச் சங்கம் ஆண்டு முழுவதும் வட்டி லேவாதேவி செய்து அதன் மூலம் வருகின்ற வருமானத்தின் அளவைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அவர்களுடைய சம்பளத் தேவையே கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும், அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களினுடைய நிர்வாகிகளாக இருந்தவர்கள் இருந்த காலத்தில் அவர்களோடு இப்பொழுது இருக்கின்ற செயலாளர்கள் கூட்டணி சேர்ந்து செய்திருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகள், நடவடிக்கையிலே உள்ளன. அவையெல்லாம் முடிந்ததற்குப் பிறகு, அவர்களுக்கு உரிய முறையில், உரியவை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி பேசி முடியுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் தொழிலுக்கான விதைகளும், இடுபொருட்களும் உரிய காலத்தில் இப்பொழுது கிடைப்பதில்லை. மூன்று, நான்கு ஆண்டு காலம் வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு மழை பெய்திருக்கிறது. ஆனால், உரிய விதைகள், உரிய காலத்தில் கிடைப்பதில்லை. எந்தெந்தப் பகுதிக்கு.....

நண்பகல் 12-00

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 384 விரிவாக்க மையங்கள் இருக்கின்றன. அந்த 384 விரிவாக்க மையங்களிலும் விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான விதைப் பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்கின்றன என்பதை நான் பணிவோடு குறிப்பிட்டு, ஏதாவது பொத்தாம் பொதுவாகச் சொல்லாமல் குறிப்பிட்ட வேளாண் விரிவாக்க மையத்திலே விதைகள் கிடைக்கவில்லையென்று குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால் உடனடியாக அந்த வேளாண் விரிவாக்க மையத்திற்குத் தேவையான விதைகள் தங்குதடையின்றி அனுப்பி வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நன்றி. அதேபோன்று, வேளாண் துறை பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், இன்றைக்கு நாட்டில்

எந்த மூலையிலும் கடன் இல்லாத விவசாயியைப் பார்க்க முடியாது. விவசாயம் என்று சொன்னாலே அது நஷ்டத்தில் இயங்கக்கூடிய ஒன்று என்ற முறையில் இன்றைக்கு விவசாயிகள் மிகப் பெரிய அளவிலே கஷ்டத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உழக்கு மிஞ்சுகிறதோ இல்லையோ, கடன் இல்லாத விவசாயிகளை உருவாக்குகின்ற ஒரு வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தை ஒரு தொழில் என்ற முறையிலும், அதனை அணுகுகின்ற முறையை அரசு நல்லமுறையில் ஆய்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊரகச் சாலைகள் மேம்பாடு என்னும் திட்டத்தில் 100 கோடி ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் என்று இந்த அரசால் சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுமானால் கிராமச் சாலைகள் சிறப்பாக இருக்கும். தற்போது கிராமத்தில் எந்தச் சாலையும் சரியாக இல்லையென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் எனது தொகுதியில் கிராமச் சாலைகள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சரிப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக மின் வசதிக்காக தமிழ்நாடு மின்சார வாரியம் 2005-2006 ஆம் ஆண்டு 247.52 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பல்லடம் போன்ற பகுதிகளில் தனியார், விறகின் மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற ஒரு தொழிலைத் தொடங்கியிருக்கிறார்கள். தனி நபர்களே காற்றாலையின் மூலமும் மின்சாரம் தயாரிக்கின்றதை இன்றைக்கு இந்த அரசு ஊக்குவிக்க வேண்டும். அதேபோன்று, நிதி ஒதுக்கினால் மின் உற்பத்தியும் பெருகும், பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும், மின் பற்றாக்குறை வருவதைத் தவிர்க்கவும் உதவும். அதோடு குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற ஒரு திட்டம், ஈராக் போரினால் தடைபட்டுப் போய்விட்டது. இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே அறிவித்தார்கள். இன்று வரை எந்த முகாந்திரமும் அதற்கு இல்லையென்று தெரிகிறது. இப்போது அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் கிராமம், நகரம் ஆகியவற்றின் மின் தேவைகளை ஆங்காங்கே பூர்த்தி செய்கின்ற ஒரு நல்ல சந்தர்ப்பதை உருவாக்க முடியும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, இன்றைக்கு எனது அரூர், ஊத்தங்கரை ஆகிய தொகுதிகளில் 110 கிலோவாட் மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் சேர்த்து வைக்கிறேன்.



ஒட்டுமொத்த கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 1,050 கோடி ரூபாய் செலவில் 2005-2006 ஆம் ஆண்டு 2,064 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகளும், 2,014 கிலோ மீட்டர் தூரம் நெடுஞ்சாலைகளும், 5,018 கிலோ மீட்டர் தூரம் ஏனைய சாலைகளும், 16 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சிச் சாலைகளும் அமைக்கப்படும் என்று இந்தத் திட்டத்திலே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆனாலும், இந்தத் திட்டங்களையெல்லாம் அமல்படுத்துகிறபோது இவற்றைப் பராமரிக்கிற அந்தச் சாலைப் பணியாளர்களைப் பணியிலே அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டம் என்று சொன்னாலே, சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்று சொல்லப்படுகிறது. நீதிபதிகள் அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தலாம் என்று சொல்லியும்கூட இந்த அரசு இன்னும் அவர்களை பணியில் அமர்த்தவில்லை. எனவே, கருணையோடு பரிசீலித்து அவர்களைப் பணியில் அமர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாள் ஏற்பட்ட சுனாமிக்கு இந்த அரசும், மத்திய அரசும், அரசியல் கட்சிகளும், தொண்டு நிறுவனங்களும் பாராட்டும் அளவிலே பல்வேறு நிதிகளைக் கொடுத்து உதவியுள்ளது வரவேற்கத்தக்கது என்ற முறையில், மத்திய அரசின் திட்டங்கள் இன்னின்ன திட்டங்கள் இப்படி இப்படி அமலாகின்றன என்கிற ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அரசு வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு மத்திய அரசு என்ன செய்கிறது, மாநில அரசு என்ன பணிகளை மேற்கொள்கிறது என்று யாருக்கும், மக்களுக்கும் தெளிவாகப் புரிவதில்லை. எனவே, இந்த அரசு மத்திய அரசினுடைய நிதி ஒதுக்கீடுகளையும், அதனுடைய செயல்பாடுகளையும் தனியாக ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிட முடியுமா என்று நான் இந்த நேரத்திலே ஒரு கேள்வியினைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச வீட்டுமனைப் பட்டா என்பது தற்போது வழங்கப்படவில்லை. எனவே, தகுதி வாய்ந்தவர்களுக்கு புதிய வீடு கட்டுவதற்கு இடம் எடுத்து கொடுக்கிற அந்த முறையை இந்த அரசு தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த இலவச வீட்டுமனைப் பட்டா

கொடுத்து கோர்ட்டுகளில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. விரைவில் அவை முடிக்கப்பட்டு பயனாளிகள் பயன்பெறுகின்ற வகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அரசு உதவித்தொகை, படிக்கின்ற பல்வேறு மாணவர்களுக்கு கிடைக்காமல் இருக்கின்றது. அவற்றையும் இந்த அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோல தாழ்த்தப்பட்ட மாணவர் இல்லங்கள் கட்டிக்கொடுப்பதாக - அநேகமாக பூர்த்தி செய்துவிடுவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வெளிநாடு சென்று கல்வி கற்கும் வாய்ப்பை இந்த அரசு வந்தபிறகு நிறுத்தியிருக்கிறது. அதனை மீண்டும் தொடர்ந்து - தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வெளிநாடு சென்று படிக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இந்த அரசு உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியின மக்களுக்கு, கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களில், அவர்கள் ஜாதிச் சான்று கேட்டு அலைகிறார்கள். அவர்களுக்கு அந்தச் சான்றுகள் கிடைக்கும் பணி தொடருகிறது. இருந்தாலும் அனைவருக்கும் ஜாதிச் சான்றிதழ் கிடைக்கிற வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு உறுதி வளையம் என்று மாண்புமிகு தமிழக முதல்வரால் 1992 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு இதனால் ஏழை, எளிய மக்களின் பொருளாதாரம் சீரமைக்கப்பட்டு வருகிறது என்றும், பாதுகாக்கப்படுகிறது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தருமபுரி-கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சென்ற ஆண்டு இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் பிழைப்பு தேடி கர்நாடகம் சென்றனர். இன்றுவரை அது தொடர்கதையாக இருந்துகொண்டிருக்கின்றது. இதைத் தவிர்க்க ஒரு பிரத்தியேகமான நிதி ஒதுக்கீடு செய்து இந்த இடப்பெயர்ச்சி நிகழ்வினை தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று மாநிலம் முழுவதும் இருக்கிற விவசாயத் தொழிலாளர்கள் வேலை தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான சிறப்புத் திட்டங்களை இந்த அரசு தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அரூர் தொகுதி தீர்த்தமலையைச் சுற்றுலாத்தலமாக்க இந்த அரசு அறிவித்திருக்கிறது. அதேபோன்று அனுமன் தீர்த்தம் பாலம் கட்டும் பணியையும் அறிவித்திருக்கிறது. இதற்காக இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் பணியை முடிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எட்டிப்பட்டி தூவலும், அனுமன் தீர்த்தமும், சுற்றுலாத்தலமாக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கின்ற காரணத்தால், பாண்டி, ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு தொழில் முனைவோர்கள் செல்வதாக அறிகிறேன். அதேபோன்று மின்சாரம், தண்ணீர், இடவசதி ஆகியவற்றைச் செய்து கொடுத்து, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைத் தொடங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுக்கொள்ளையன் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டது வரவேற்கின்ற அம்சமாக இருந்தாலும் அவனைத் தேடுகின்ற முகாம்களிலே ஈடுபட்டிருந்தோராலும், வீரப்பனாலும் அந்த மலையைச் சுற்றி ஏராளமான மக்கள் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு பரிசீலித்து அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் அவையில் அறிவிக்கப்பட்டு இன்று வரை அமல்படுத்தப்படவில்லை. அதுமட்டுமல்ல, தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும்; கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு இது நிலுவையில் நிறுத்தி வைக்கப்படும் என்கிற ஒரு கருத்து அங்கே நிலவிக்கொண்டு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிப்பதோடு, இந்தத் திட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும், இரு மாவட்டங்களுக்கும் அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்திக்கடவு, அவிநாசி திட்டங்களும் இதேபோன்று கிடப்பில் உள்ளன. அவற்றையும் அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம் புதிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டு ஊத்தங்கரை, வட்டார தலைமையிடமாக செயல்படும் சூழ்நிலையில், இருப்பதால் இங்கு ஒரு R.D.O. அலுவலகமும், D.S.P. அலுவலகமும்,

[திரு. வே. கிருஷ்ணமூர்த்தி] [2005 மார்ச் 10

அனைத்து மகளிர் காவல் நிலையமும், படித்த இளைஞர்கள் பதிவு செய்ய வசதியாக 15 தினங்களுக்கு ஒரு முறை பதிவு செய்யும் Employment அலுவலகமும் தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** எனது தொகுதியில் ஊத்தங்கரை வட்டத்தில் அங்குத்தி சுனைத் தண்ணீரை 60 இலட்சம் ரூபாய் செலவில் தடுத்து நிறுத்தி, ஒரு நீர்த் தேக்க அணை கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை அது அமலுக்கு வரவில்லை. இதை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை அமல்படுத்துவதன் மூலம் ஏறத்தாழ 500 ஏக்கர் நிலம் பாசனம் பெறவும், பல ஊராட்சிகள் குடிநீர் பயன்பெறும் என்ற வகையிலும் இது அமையும் என்பதை நான் விளக்கி, அதை உடனடியாக அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் 1995 ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உள்ள காலிப் பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, தற்போது 1,250 பேர் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு 4,000 ரூபாய் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களை அரசு நிரந்தரம் செய்வதோடு, ஊதிய உயர்வும் அளிக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஒரு இலட்சம் பட்டதாரிகள் - கல்விக்கான காலிப் பணியிடங்களில் நிரப்ப, இந்தப் பட்டதாரிகளை பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பழங்காலத்தில் தொடங்கப்பட்ட காவல் நிலையம் ஊத்தங்கரையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதேபோன்று சப்-ஜெயிலும் இருக்கிறது. இவையெல்லாம் சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டன. அவை இன்றைக்கு இற்று விழுந்துகொண்டிருக்கின்றன. பழமையடைந்து, சுண்ணாம்புக் கலவை கொட்டிக் கொண்டிருக்கிறது இதேபோன்று தீயணைப்பு நிலையமும், தனியார் கட்டடத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இவை மூன்றுக்கும் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் அரசுக் கட்டடம் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்



2005 மார்ச் 10]

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்துவிடுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், லக்கம்பட்டியில் ரங்கநாதன் என்ற ஆசிரியர் மரணம் குறித்து விசாரிக்க மாண்புமிகு முதல்வருக்கு மனு கொடுத்தேன். இன்று வரை நடவடிக்கை இல்லை. அதன்மீது உரிய விசாரணையைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை, அரூர் இரண்டு வட்டத் தலைமையிடங்களிலுள்ள மருத்துவமனைகளில் நாள் ஒன்றுக்கு 500-க்கும் மேற்பட்ட நோயாளிகள் வருகின்றனர். இவ்விரண்டு மருத்துவமனைகளிலும் பணியாளர்கள் பதவிகள் காலியாக உள்ளன. அதேபோல, மருத்துவர்களும், மருந்தாளுநர்களும், நர்ஸ்களும், துப்புரவுப் பணியாளர்களும், எக்ஸ்ரே ஆப்பரேட்டர்களும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2004-2005 ஆம் ஆண்டில் 1,325 பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு, புதிதாக இரண்டாயிரம் பேருந்துகளும் வாங்கப்படும் என்ற அறிவிப்பு இருக்கிறது. அவற்றில் ஊத்தங்கரையிலிருந்தும், அரூரிலிருந்தும் சென்னை தலைநகரத்திற்கு வருவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்கின்ற வகையில், பஸ் விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மாவட்டத்திற்கு ஒரு தனித் தொகுதி என்று வரும்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எந்தத் தொகுதி தனித் தொகுதியாக தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) மணிமண்டபம் கட்ட அரசு அறிவிப்பு வெளியிட்டதை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இறுதியாக வைத்த கோரிக்கைகூட இங்கே நிறைவு செய்யப்பட்டிருப்பதையும் வரவேற்று, இந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், என்ன?

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேவர் திருமகனாருக்கு மணிமண்டபம் அமைக்கிறேன் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் வருடத்திற்கான நிதிநிலை அறிக்கை தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. 2004-2005-ல் அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் 79 பக்கங்கள் இருக்கின்றன. இந்த அறிக்கையிலே 115 பக்கங்கள் இருக்கின்றன. இந்த ஒரு மாறுதலைத் தவிர, சென்ற காலத்திலே அவர்கள் கையாண்ட கொள்கையிலேயிருந்து, அவர்கள் நடந்துவந்த பாதையிலேயிருந்து எந்தவிதமான மாறுதலையும் இந்த நிதிநிலை அறிக்கை பிரதிபலிக்கவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநிலத்தில் ஆளும் அ.தி.மு.க. அரசு இப்போது மக்களை ஏமாற்றும் சாகசத்தில் இறங்கியிருக்கிறது என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆழமான கருத்து என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநில பொதுத் துறைகள் சீரழிக்கப்படுவதும், தனியார் மய முயற்சியும் தொடர்கிறது என்பதை நான் வலியுறுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்வி, சுகாதாரம், குடிநீர், கழிவுநீர் அகற்றல் போன்ற அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளும் ஏழைகளுக்கு எட்டாத கட்டண முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாங்கள் வலியுறுத்திச் சொல்கிறோம். விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சி, தொடர் வறட்சியிலும் இடுபொருட்களுக்கான மானியங்கள் வெட்டு, கூட்டுறவு மற்றும் அரசு வங்கிகளில் கடன் மறுப்பது, விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை முடக்கியது போன்ற இந்த அரசின் கொள்கைகளால் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வாழ்விழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சம் பிழைக்க ஆண்கள் மட்டும் வெளியூர் சென்று வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை இன்றைக்குத் தொடர்ந்துகொண்டிருக்கிறது. குடும்பத்தோடு இடம் பெயர்கின்ற அளவுக்கு இன்றைக்கு வெளியே போகவேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் தள்ளிவிடப்பட்டிருக்கிறார்கள். சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போய் இருக்கிறது என்பதற்கு தினசரி பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்ற செய்திகள் ஒரு தெள்ளத்தெளிவான எடுத்துக்காட்டு. கொள்ளைகளும், கொலைகளும் இன்றைக்கு



அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. பெண்களுக்கு எதிரான கொடுமைகள் பெருகி வருகின்றன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பொத்தாம் பொதுவில் மொத்தமாக கொள்ளை, கொலை அதிகமாகிவிட்டன, (குறுக்கீடு) சட்டம்—ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது என்று சொல்லாமல், ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை. சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக இப்படி குற்றச்சாட்டு மாதிரி சொல்லக்கூடாது. (குறுக்கீடு) அப்படி குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால் நீங்கள் அனுமதி வாங்க வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை. நான் ஒன்றைச் சொல்கிறேன். வீரப்பன் பிடிக்கப்பட்டது, அல்லது பிடிக்கப்படவில்லை, அவரை சுட்டெடுத்தார்கள். அதை வைத்துக்கொண்டு இந்த மாநிலத்தினுடைய சட்டம்-ஒழுங்கு நிலைமை முழுமையாக சீர் செய்யப்பட்டுவிட்டது என்ற முறையில் ஆளுங்கட்சி பிரச்சாரம் செய்துகொண்டிருப்பது எப்படி நியாயமாக இருக்கும், சரியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றும், நேற்றும் வந்திருக்கிற பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தாலே பல இடங்களிலே பெண்களைப் பொறுத்தவரையில் கொடுமை பெருகிக்கொண்டு இருக்கிறது என்பதைக் காண முடிகிறது. கொலை, கொள்ளை பெருகிக் கொண்டிருக்கிறது என்பதைக் காண முடிகிறது.

பிற்பகல் 12-15

அதேபோன்று, அரசால் இன்றைக்கு மக்களுக்காக போடப்படுகிற சட்டத்தை அரசே மதிப்பதில்லை. அதேபோன்று, நீதிமன்றத் தீர்ப்பினை அவர்களே மதிப்பதில்லை. அதாவது, சாலைப் பணியாளர்கள் ஏறத்தாழ 10,000 பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் சொன்னதற்குப் பிறகும், உச்ச நீதிமன்றம் இவர்களுடைய அப்பீலை ஏற்றுக்கொள்வதற்கு மறுக்கப்பட்டதற்குப் பிறகும், அந்தச் சாலைப் பணியாளர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, தமிழகத்தினுடைய பல பகுதிகளில் இன்று சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. அதிகாரிகளிடம் கேட்டாலும் அவர்கள் என்ன சொல்கிறார்கள், Divisional Engineer-ம் Assistant Engineer-மா போய் மண்ணு போட முடியும்? . . .

[2005 மார்ச் 10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பராமரிப்பிற்கு என்று வருடந்தோறும் 60 அல்லது 70 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை கடந்த காலங்களில் இருந்தது. அந்த நிதியைக் கொண்டு சாலைகளில் இருக்கின்ற சிறு சிறு மேடு பள்ளங்களை, அதை வைத்து சரி செய்து, போக்குவரத்திற்கு லாயக்கான சாலைகளாக அவற்றை நாம் மாற்றிக் கொண்டிருந்தோம்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் சாலைப் பணியாளர்களை வரைமுறை இல்லாமல் நியமனம் செய்ததன் விளைவாக, சாலைப் பராமரிப்பிற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியில் அவர்களுக்கு, அவர்களுடைய காலத்தில் சம்பளமாகக் கொடுக்கப்பட்டு, சாலைப் பராமரிப்பு எங்கும் நடைபெறாமல் இருந்தது என்பதுதான் உண்மை. சாலைப் பணியாளர்களை நியமித்துவிட்டோம், அவர்கள் சாலைப் பணிகளைச் செய்வார்கள் என்று ஏட்டளவில் சொல்லிவிட்டு, சாலைப் பராமரிப்பிற்கு என்று நிதியை ஒதுக்கி, அந்த நிதியை அவர்களுக்குச் சம்பளமாகத்தான் கொடுத்தார்களேயொழிய, அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் அரசின் சார்பாகக் கொடுக்கப்படவில்லை. அவர்களெல்லாம் அங்கேயிருக்கின்ற அலுவலகங்களில் வேலை செய்து கொண்டிருந்தார்களேயொழிய, சாலை வேலைகளை அவர்கள் சீராகச் செய்யாத அந்த ஒரே காரணத்தினால்தான், கடந்த ஆட்சியின்போது சாலைகளிலெல்லாம் மிகவும் மோசமான ஒரு சூழ்நிலை உருவாவதற்கு, கடந்த அரசினுடைய தவறான கொள்கைதான் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், 1991-1996 காலகட்டத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது, சாலையினுடைய பராமரிப்பில் 50,000 கிலோ மீட்டர் சாலைகளை அந்த 5 ஆண்டுகாலத்தில் போட்டுத் தந்தார்கள். ஆனால், அதற்குப் பின்னாலே 1996-2001-ல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்த சாலைகள், அவர்கள் போட்ட மொத்த சாலைகளின் நீளமே 21,000 கிலோ மீட்டர்தான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது 2001-ல் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து, 32,000 கிலோ மீட்டர் சாலைகளை முடித்திருக்கின்றோம்; 12,000 கிலோ மீட்டர் சாலைகளுக்கான பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மீதமுள்ள சாலைகளையும் இவ்வாண்டுக்குள் போடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.



2005 மார்ச் 10] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நம்முடைய சாலை வசதியைப் பற்றி, சாலையினுடைய மேம்பாட்டைப் பற்றி, தரத்தினைப் பற்றி வெளி மாநிலங்களிலிருந்து வருகின்றவர்கள் இங்கே வாயாரப் புகழ்கின்றார்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை, என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) one minute. ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களை நியமிப்பதற்கான காரணம் patch up work என்று சொல்லிக்கொண்டு இப்போதுகூட கான்டிராக்ட் விட்டு விடுகிறார்கள். மழை பெய்யும்போது, மற்ற நேரங்களில் regular ஆக இருக்காது. இது இப்போது மட்டும் புதிதாகக் கொண்டு வந்ததில்லை. முதலிலேயே Road Inspectors என்று இருந்து, அப்போதே தினசரி சாலையைப் பராமரிக்க வேண்டுமென்று திட்டம் இருந்தது. அந்த அடிப்படையிலேதான் ஏழை எளியவர்களுக்கு வேலைவாய்ப்பையும் கொடுக்க வேண்டும், சாலைகளும் தினசரி பராமரிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்களே தவிர, இப்போதும் அதற்கான நிதி patch up work என்ற அடிப்படையிலே கான்டிராக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டு அதிகம் செலவாகிக் கொண்டிருக்கிறது. அது தவிர்க்கப்பட்டு வேலைவாய்ப்பும் கொடுக்கப்பட்டது; சாலைப் பணியாளர்களுக்குப் பணியும் கொடுக்கப்பட்டது என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மலையாளத்திலே சொல்வார்கள் என்றெ அப்பூப்பனு ஒரு ஆன உண்டாயிருந்நு' என்று சொல்வதனாலே இப்போது பிரயோஜனம் இல்லை. 'என்னுடைய Grand-father-க்கு ஒரு யானை இருந்தது' என்று சொல்லி நான் இன்றைக்கு வாழ முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறேன். இன்று அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 50,000 கிலோ மீட்டர் போட்டதாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், எங்கள் தாத்தாவுக்கு யானை இருந்தது என்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

இப்போதே நாங்கள் யானை வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள் அமைச்சர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை. நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் சொல்வதை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். *50,000* கிலோ மீட்டர் போடப்பட்டது, இப்போது *32,000* கிலோ மீட்டர் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். நான் பிப்ரவரி மாதம் *1* ஆம் தேதி இங்கே அவை நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரிடம் எங்களுடைய தொகுதி, என்னுடையதும், நண்பர் திரு. இராஜேந்திர பிரசாத் அவர்களுடைய தொகுதி வருகிற தக்கலையிலிருந்து குலசேகரம் வரை போகின்ற சாலை மிகவும் பழுதடைந்திருக்கிறது. இதில் காரை ஓட்டக்கூடியவர்கள், two wheeler, bi-cycle ஓட்டக்கூடியவர்கள் கூட இன்று அந்தச் சாலையிலே போக முடியாத அளவிற்கு கெட்டுப் போயிருக்கிறது. அதை சரிபண்ணித்தர வேண்டுமென்று மனு கொடுத்தேன். அதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிகாரிகளிடம் போய்க் கேட்டால் அதிகாரிகள் சொல்கிறார்கள் மண்ணை வாரிப் போடக் கூட ஊழியர்கள் இல்லை; நாங்களா போய் போடுவோம் என்று அவர்கள் திருப்பி என்னைப் பார்த்துக் கேட்கிறார்கள். நான் சொன்னேன், நான் வேண்டுமானால் மண்ணை வாரிப் போடுகிறேன் என்று. ஆகவே . . . .

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *12* ஆம் தேதி அவர்கள் கோரிக்கையைச் சொன்னார்கள். இன்றைக்குத் தேதி என்ன? உறுதியாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நன்றி. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உண்ணாவிரதம், ஊர்வலம் உள்ளிட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளும் சென்ற காலத்திலே மறுக்கப்பட்டிருந்ததைப் போல இன்றைக்கும் மறுக்கப்படுகிறது. இங்கு *4* நாட்களுக்கு முன்னாலே திங்கட்கிழமை என்று நினைக்கிறேன், காஞ்சிபுரத்திலே விவசாயத் தொழிலாளிகள் இறால் பண்ணையில் நடக்கிற ஊழல், அக்கிரமத்தைக் கண்டிப்பதற்காக வேண்டி அவர்கள் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.



காவல் துறை அந்த விவசாயத் தொழிலாளர்கள்மீது தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறது. எங்களுடைய மாநில விவசாயச் சங்கத்தினுடைய செயலாளர் பாலகிருஷ்ணன் உட்பட பல பேர்கள், கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி ஜனநாயக உரிமைகள் இன்றும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, நம்முடைய கோயம்புத்தூர் மாவட்டத்திலே ஒரு பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவர் கொலை செய்யப்பட்டதுபற்றி இந்த அவையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய நினைவு நாளைக் கொண்டாடுவதற்கு அனுமதி கேட்டு, கூட்டம் போடுவதற்கு அனுமதி கேட்டால், கோயம்புத்தூர் S.P. அதை மறுக்கிறார். இந்த முறையிலே சட்டம்-ஒழுங்கைப் பொறுத்த அளவிலே சென்ற காலத்திலே எப்படி ஜனநாயக உரிமைகளை மறுத்தார்களோ, அந்தப் போக்குதான் இப்போதும் இருக்கிறது. அதேபோன்று விலையேற்றமும், முடங்கிக் கிடக்கும் சிறு தொழில்களும் பாதிக்கப்பட்டு, பாரம்பரியத் தொழில்களும் உழைப்பாளி மக்களின் வாழ்வை உருக்குலைத்துவிட்டன என்பதை நாங்கள் ஏற்கெனவே சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைச் சரிக்கட்டுவதற்கு எந்த நடவடிக்கையும் இந்த பட்ஜெட்டிலே இல்லை.

அதேபோன்று வேலை நிறுத்தத் தடைச் சட்டம். டெஸ்மா புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அரசு இன்றைக்கு சில அபிவிருத்திகளை ஏற்படுத்தியிருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். எப்படி? அதாவது, ஓய்வு பெற்றவர்களின் vacancies fill up பண்ணுவதில்லை. அதனால் ஊழியர்களுடைய work load இன்றைக்கு ஏறிக்கொண்டே போகிறது. ஒரு அரசு அலுவலகத்திலே ஒரு மனு கொடுத்தால் ஒரு மாதத்திற்குப் பிறகுகூட அதற்குப் பதில் வருவதில்லை. போய்க் கேட்டால் என்ன சொல்கிறார்கள் என்றால், 'சார் நான் ஒரு ஆள், 4 பேரின் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறேன். எப்படி உடனே பதில் தரமுடியும்? இதைவிட அத்தியாவசியமான, அங்கேயிருந்து கோட்டையிலேயிருந்து 24 மணி நேரத்திற்குள்ளே நீ இந்த விவரத்தைக் கொடு என்று சொல்லி எங்களுக்கு டெலிபோனிலே message வருகிறது. அதை நாங்கள் செய்து கொண்டிருக்க முடியுமா, இல்லை இந்த மனுக்களைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்க முடியுமா' என்று அவர்கள் என்னிடம் பதில் சொல்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் 25,000-த்திற்கும் அதிகமான பணியிடங்கள் மின்சார வாரியத்திலேயே இன்றைக்கு fill up பண்ணப்படாமல் இருக்கின்றன. இன்று இந்த பட்ஜெட்டிலே

உள்ள முதலமைச்சர் அவர்களுடைய நோக்கத்தை நாங்கள் வரவேற்கிறோம். தமிழகம் ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்கப்பட வேண்டும். ஆனால், மின்சார வளர்ச்சி என்பதைச் செய்வதற்கு மின்சார வாரியத்திலே இன்ஜினியர்கள் மட்டும் நினைத்தால் முடியுமா? அதைச் செய்வதற்கான ஊழியர்கள் வேண்டாமா? 25,000-த்திற்கும் அதிகமான ஊழியர்களின் காலிப் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதேபோன்று, அந்தத் தொழிலாளிகளைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு ஊதியம் மறுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அவர்களைப் பொறுத்த அளவிலே அவர்களுக்குக் கிடைக்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு, ஊதியம் அல்ல, ஊதிய உயர்வு, போனஸ் இவையெல்லாம் மறுக்கப்பட்டிருக்கின்றன. வேலைச்சுமை அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. இதேபோல போக்குவரத்து. இன்று தமிழகத்தைப் பொறுத்த அளவிலே ஏழையெளிய மக்கள் depend பண்ணியிருக்கிறது அரசினுடைய போக்குவரத்துப் பேருந்துகளைத்தான். அந்தப் பேருந்துகளில் சாயத்தை அடித்து அதிலே paint அடித்து புது பஸ்களாக ஓட்டினால் . . .

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். அவர் சொன்னதில் ஒரு உண்மை இருக்கிறது. எப்பொழுதென்றால் அந்த நிலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருந்தது என்பது உண்மைதான். ஆனால், அதற்குப் பின்பு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இன்றைக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடாகக்கூட 50 கோடி ரூபாய் அரசு வழங்கி 4,884 பேருந்துகள் பழுதுபார்க்கப்பட்டு, புதிய பேருந்துகள் வாங்குவதற்கும் இன்றைக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, போக்குவரத்துத் துறையை இன்றைக்குச் சீரமைத்து வருகிறோம். ஆனால், நீங்கள் சொன்னது பழைய காலம்! திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நீங்கள் சொன்னதுபோல paint அடித்து அந்த அளவிற்கு இயக்க முடியாத அளவிற்கு இருந்த பேருந்துகளின் எண்ணிக்கையை இப்பொழுது நாங்கள் வெகுவாகக் குறைத்திருக்கிறோம் என்பதை மட்டும் உங்களுக்கு அன்போடு



தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மற்றொரு தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்கு என்னுடைய வேண்டுகோளாகக்கூட அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு இன்றைக்கு அவர்களுடைய ஊதிய ஒப்பந்தம், பேச்சுவார்த்தை நடைபெறாதிருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, இடைக்கால நிவாரணமாக மாதம் 250 ரூபாயை, யாரும் கேட்காமலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அறிக்கையிலேகூட மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்குத் தடையாக நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கின்ற தொழிற்சங்கங்கள் தங்களுடைய வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டு, பேச்சுவார்த்தைக்கு வந்தால் உடனடியாக ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தொடங்கப்படும் என்பதைத் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்புகூட மாண்புமிகு அம்மா அவர்களும் பலமுறை வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். நானும்கூட சட்டமன்றத்திலே உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். அந்த வழக்குகளையெல்லாம் உங்களுடைய தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வாபஸ் வாங்கிவிட்டு ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்று பலமுறை அழைப்பு விடுத்திருக்கிறோம். ஆனால், ஏனோ தெரியவில்லை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கமும், உங்களுடைய தொழிற்சங்கமும் வழக்குகளை வாபஸ் வாங்காமல் இன்றுவரை வைத்துக்கொண்டு, தொழிலாளர்கள் பயன்பெறுவதற்குத் தடையாக இருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு அன்போடு தெரிவித்து, அந்தத் தடையை நீக்கி, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உங்களுடைய வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டு நீங்கள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் 5 ஆண்டுகளிலே வாங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கழக ஆட்சியிலேதான் 20 சதவீத போனஸ் வழங்கப்பட்டது. அப்பொழுது இரண்டு பைசா தான் ஏற்றப்பட்டது. இப்பொழுது 6 பைசா ஏற்றியிருக்கிறீர்கள். இலாபம் வருவதாகவும் சொல்லியிருக்கிறீர்கள்.

தொழிலாளர்கள் மீது அக்கறையோடு 2.50 ரூபாய் (குறுக்கீடு) பேசுங்கள், அப்புறம் பேசுங்கள். இடைக்காலΩ நிவாரணமாகக் கொடுக்க முன்வந்திருக்கிற நீங்கள், அந்த 8.33 சதவீத போனஸையும் அவர்களுடைய நலன் கருதி, தொழிலாளர்களுடைய நலனில் அக்கறையுள்ள இந்த அரசு 20 சதவீதம் போனஸாகவும் கொடுக்கலாமே என்றுதான் நானும் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 5 ஆண்டு காலத்திலே 1,498 கோடி ரூபாயை ஏறத்தாழ 1,500 கோடி ரூபாயை - நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டு அந்தப் போக்குவரத்துக் கழகமே தொடர்ந்து இயங்க முடியுமா என்ற சந்தேக நிலையிலே, இக்கட்டான நிலையிலே தள்ளிவிட்டுச் சென்றவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியாளர்கள். அப்படிப்பட்ட நிலையிலே இவர்களுக்கு கேட்பதற்கு அந்த தார்மீக உரிமைகூட கிடையாது. இவர்கள் போனஸ் வழங்குவதற்கு அப்படிப்பட்ட இக்கட்டான நிலையிலே, பொருளாதார நெருக்கடியிலே தள்ளிவிட்டுச் சென்றவர்கள், அதற்குப் பின்பு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, 300 கோடி ரூபாய் அளவிலே சராசரியாக ஆண்டுதோறும் நஷ்டத்தை ஏற்படுத்தி வந்த அந்தப் போக்குவரத்துக் கழகத்தை இன்றைக்கு முதல் வருடம் அந்த நஷ்டத்தை 100 கோடியாகக் குறைத்து, இரண்டாவது வருடம் 20 கோடியாகக் குறைத்து, மூன்றாவது வருடத்திலே இன்றைக்கு இலாபம் ஈட்டுகின்ற அளவிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நிலையை, இனி வருகின்ற காலத்திலும் தொடர்ந்து அந்த நிலை நீடிப்பதற்கு வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்கியிருக்கிறார்கள். இவ்வளவுக்கிடையிலும் இந்த நஷ்டத்தையும் தவிர்த்துக்கொண்டு இன்னொன்றையும் சொன்னார்கள், அவர்கள் காலத்திலே இரண்டு பைசா ஏற்றியதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஆறு பைசா ஏற்றியதாகச் சொன்னார்கள். ஆனால், இன்று திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியோடு மத்திய அரசில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இவர்கள் ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு இந்த நான்கு ஆண்டு காலத்திலே 27 முறை டீசல் விலையை ஏற்றியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 27 முறையிலும் 10 ரூபாய் 37 பைசா இன்றைக்கு டீசல் விலை உயர்ந்திருக்கிறது. ஒரு ரூபாய் டீசல் விலை உயர்ந்தால் போக்குவரத்துக் கழகத்திற்கு 50 கோடி ரூபாய் நஷ்டம் வரும், கூடுதல் செலவு வரும். அப்படியென்றால்,



ஒரு லிட்டருக்கு 10 ரூபாய் ஏறியிருக்கின்ற சூழ்நிலையில் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டிருக்கிறது. ஆக, அந்தக் கூடுதல் செலவினம் 500 ரூபாய் ஏற்பட்டதற்குப் பின்பும்கூட, sorry, 500 கோடி ரூபாய் ஏற்பட்டதற்குப் பின்பும்கூட — அதையும் தாங்கி இந்த விலை உயர்வையும் தாங்கி, இந்தியாவிலேயே குறைந்த பேருந்துக் கட்டணத்தோடு பேருந்துகளை இன்றைக்கும் இயக்குவது தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-30*

ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பக்கத்து மாநிலத்திலே, கர்நாடகாவிலே 34 பைசா, ஒரு கிலோ மீட்டருக்கு 34 பைசா வாங்குகிறார்கள். ஆந்திரப்பிரதேசத்திலே 38 பைசா வாங்குகிறார்கள், கேரளாவிலே 42 பைசா வாங்குகிறார்கள். பக்கத்து மாநிலத்திலும்கூட ஒரு கிலோ மீட்டருக்கு 34 காசுக்குக் குறைவாக எந்த மாநிலத்திலும் வாங்குவதில்லை. மாறாக, மேற்கு வங்காளத்தில் 48 பைசா வாங்குகிறார்கள். மற்ற வட இந்திய மாநிலங்களிலே 52 பைசா, 56 பைசா வாங்குகிறார்கள். ஆனால், இந்தியாவிலேயே ஒரு கிலோ மீட்டருக்கு குறைவான கட்டணம் 28 பைசா என்ற அளவிலே இன்றைக்கும் வசூலித்து நடத்துகின்ற ஒரே நிறுவனம் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம்தான், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான் என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்பும்கூட— இன்னொன்றையும் அவரே சொல்வார். என்ன சொல்ல வருவார் என்பதைச் சொல்கிறேன். ஒரு பைசா ஏற்றினால் 100 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொல்வார். 6 பைசா ஏற்றினால் 600 கோடி ரூபாய் வந்திருக்கும் என்று சொல்வார். ஆனால், நான் ஒன்றைச் சொல்கிறேன். அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஆண்டிற்கு 300 கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தி வந்ததை சரிக்கட்டியிருக்கிறோம். டீசல் விலை உயர்வினால் ஏற்பட்ட 500 கோடி ரூபாய் நட்டத்தைத் தாங்கியிருக்கிறோம். ஆக, 800 கோடி ரூபாய் கூடுதல் சுமையைத் தாங்கி, அதற்குப் பின்பு இந்த இலாபத்தை ஈட்டியிருக்கிறோம், புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே இந்த இலாபத்தை ஈட்டியிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால்—இதற்கிடையிலே தொழிலாளர்களுடைய பிரச்சினைக்காக — இன்றைக்கும் தாயுள்ளத்தோடு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலேதான் 8.33 சதவீதமாக இருந்த போனஸைக்கூட இப்போது 10 சதவீதமாக கருணைத் தொகையை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். பொருளாதார நிலை மேம்பட, மேம்பட,

போக்குவரத்துக் கழகத்தினுடைய பொருளாதார நிலை உயர, உயர, சீரடையச் சீரடைய, தொழிலாளர்களுக்கு அத்தனை வசதிகளையும் படிப்படியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் அந்தத் தொழிலாளர்கள் நலன் பெறுகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து அந்தப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்ப மீண்டும் நிச்சயமாகச் செய்வார்கள் என்பதையும் இந்த நேரத்திலே அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிருவாகச் சீர்கேட்டிற்குக் காரணமாக இருந்த நீங்கள்—மீண்டும் சொல்கிறேன் — தார்மீக ரீதியாகக்கூட இந்தக் கேள்வியை எழுப்புவதற்கு தகுதியில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமசந்திரன், ஐந்து மணித்துளிகளில் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் பேசுகிறேனா அல்லது Mr. Viswanathan பேசுகிறாரா என்ற சந்தேகம்கூட எனக்கு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்குத்தான் பதில் சொல்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Sir, இந்த விவாதத்திலே பேசுகிற எனக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்குத்தான் பதில் சொல்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அது சரி. அப்படியென்றால் ஒன்றுமே பேசாமல் இவர்களை praise பண்ணிவிட்டுப் போய்விடுவதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் சாயம் பூசி வைத்து புதுப் பேருந்து என்று சொல்கிறீர்கள் என்று சொன்னீர்கள். அதற்குப் பதில் சொல்கிறார் அவர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, we have got the right to bring before this House the problems of the people of this State.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் பேசச் சொல்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் பேசச் சொல்கிறேன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதைத்தான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு அமைச்சர் நீண்ட விளக்கத்தைக் கொடுத்தால் நான் பேசக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொன்னதற்கு பதில் சொல்ல வேண்டாமா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பதில் சொல்லட்டும், எனக்குப் பதில் சொல்வதற்கு நேரம் கொடுங்கள். அதாவது அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தைக் கொடுத்தார். நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால் தொழிலாளி என்பவனுக்கு இதிலே பாத்திரம் இல்லையா, பங்கு இல்லையா? அந்த உற்பத்தியிலே அவனுக்குப் பங்குண்டா, இல்லையா? நீங்கள் அதிகாரிகளுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கிறீர்கள். அவர்களுடைய மற்ற வசதிகளையெல்லாம் உயர்த்திக் கொடுக்கிறீர்கள். ஆனால், அந்த ஏழைத் தொழிலாளிக்கு 4 ஆண்டு காலத்திலே உயர்த்திக் கொடுக்க வேண்டிய ஊதியம், .....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உறுப்பினர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோல போனஸ் போன்றவற்றைக் கொடுக்காமல், ஏதோ பிச்சை போட்டது மாதிரி 2.50 ரூபாய் கொடுத்தால் அந்தத் தொழிலாளியினுடைய பிரச்சினை தீர்ந்து முடிந்து போய்விடுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் அமைச்சரும் சொன்னார். (குறுக்கீடு) அமைச்சர் அதைத்தான் சொன்னார். உங்கள் தொழிற்சங்கம் வரவில்லை என்று, அதைத்தான் சொன்னார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கிறேன். இந்தப் போக்குவரத்துத் துறை இவ்வளவு சீரடைந்ததற்குக் காரணம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நிருவாகத் திறமை என்று சொன்னாலும், அதோடு நமது அன்பிற்குரிய தொழிலாளர்களுடைய மேலான ஒத்துழைப்பும், உழைப்பும் ஒரு காரணம்; இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. மறுக்கவில்லை. அவர்களுடைய ஒத்துழைப்பு, அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களே தொழிலாளர்களுக்கு எல்லாம் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால்,

நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் அப்படிப்பட்ட உழைக்கும் வர்க்கத்திற்காக குரல் கொடுக்கிற நீங்கள், அந்தத் தொழிலாளர்கள் நலனுக்கு இடையூறாக அந்தத் தொழிலாளர்களுடைய மாத ஒப்பந்த ஊதியத்தை கூடுதலாகப் பெறுவதற்கு, ஊதிய பேச்சுவார்த்தை — wage **settlement**- ஒப்பந்தத்தைப் பேசுவதற்கு நீங்கள் ஏன் தடையாக இருக்கிறீர்கள் என்பதைத்தான் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏன் அந்தத் தடையை-வழக்கை நீங்கள் வாபஸ் வாங்க மறுக்கிறீர்கள் என்பதை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குமன்றத்திலே இருக்கும் வழக்கிற்கும், பேச்சுவார்த்தைக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. வழக்கு மன்றத்தில் (குறுக்கீடு) இல்லை, வழக்கு மன்றத்தில் தடை விதிக்க, பேச்சுவார்த்தைக்கு வழக்குமன்றம் தடைவிதித்து.. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தெரிவிக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும்கூட தெரிந்துகொண்டே திசை திருப்ப முயற்சிக்கிறாரோ என்று நான் சந்தேகப்படுகிறேன். உண்மையிலேயே அந்த வழக்கே ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்குத் தொடர்புடைய வழக்குதான். ஆக wage settlement, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்குத் தொடர்புடைய ஒரு வழக்கு நிலுவையில் இருக்கின்றபோது, அந்தப் பேச்சுவார்த்தை நடத்தினால் அது sub judice, court அவமதிப்பு வழக்கு வருமென்று நமது சட்ட வல்லுநர்கள் கருத்தும் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே அதற்குத் தடை இருக்கிற வழக்கை வாபஸ் செய்து விட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அழைத்திருக்கிறார்களே, அந்த அழைப்பை ஏற்று வர வேண்டியதுதானே, அதிலே ஏன் ego என்கிற பிரச்சினை. இதிலே இருக்கிற பிரச்சினை, அதிலே ஏன் தேவையில்லாமல் கௌரவப் பிரச்சினை என்பதைத்தான் உங்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை. அவருக்கு திரு. ஹேமச்சந்திரன் பதில் சொல்லட்டும். திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. கருணாகரன் உட்காருங்கள்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது நான் ஒன்றைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்படிச் செய்தார்கள், இப்படிச் செய்தார்கள் என்றெல்லாம் சொல்லி, மக்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் மறுக்கிற அந்த ஏமாற்று வித்தையை தமிழகத்திலே இருக்கிற மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நான் தெள்ளத்தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, இது கடுமையான சொற்றொடர். மக்களை ஏமாற்றுகிற அரசு என்று சொல்வது, அது, திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு வேண்டுமானால் பொருந்துமே தவிர, அது புரட்சித் தலைவி அம்மா அரசுக்கு அந்த வார்த்தை பொருந்தவே பொருந்தாது. ஆகவே, அந்த வார்த்தைப் பிரயோகம் தவறு. நான் சொல்ல விரும்புவது எல்லாம் மக்களை ஏமாற்றுகின்ற அரசு முந்தைய அரசே தவிர, இன்றைக்கு இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இல்லை என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். தொழிலாளர்கள் கூடுதல் ஊதியம் பெறுவதற்கான ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசு திறந்த மனத்தோடு தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்குப் பின்பும் கிளிப் பிள்ளை போல எத்தனை முறைதான் திரும்பத் திரும்பச் சொல்வது? அதற்குத் தடையாக இருக்கின்ற நீங்கள், அதை வாபஸ் வாங்கினால் என்ன? கௌரவப் பிரச்சினை பார்க்க வேண்டாம். வாபஸ் வாங்கி விட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்றுதான் அம்மா அவர்கள் அழைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** கடந்த காலத்திலே தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. இந்த வழக்கிற்கு Stay இருக்கிறதா? Stay இல்லாதபோது இவர்களே கூப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்தலாம். Evading the responsibility-நீங்கள் கோர்ட்டுக்குப் போய்விட்டீர்கள், பேச மாட்டேன் என்று சொல்வது, it is evading the responsibility. You have the power.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களே, அரசுத் துறை வழக்கறிஞர்களே அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, the matter is sub judice because, (குறுக்கீடு) சொல்கிறேன் கேளுங்கள். ஊதிய உயர்வு என்பதுதான் நீதிமன்றத்திலே இருக்கின்ற subject matter-ம். அந்த subject matter நீதிமன்றத்தினுடைய பார்வையில் இருக்கின்றபோது அதையே, மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருவது முறையல்ல. அதுதான் சட்ட வல்லுநர்களுடைய கருத்தும் ஆகும். நீங்கள் withdraw பண்ண வேண்டும். வழக்கை வாபஸ் வாங்கினால் பேச்சுவார்த்தை நடக்கும் என்பதுதான் சட்ட நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், பேசி முடியுங்கள் (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அதாவது நாங்கள் தெளிவாகச் சொல்கிறோம். இன்று 250 ரூபாய் ஒரு தற்காலிக உயர்வு கொடுத்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து வைத்து, எவ்வளவு கொடுக்கலாம் என்பதைக்கூட பேசி, 250 கொடுத்ததை ரூ.500 அல்லது, ரூ.1,000 கொடுப்பதற்கு வழியில்லையா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்படிப் பேசக்கூடாது என்று ஏதாவது கோர்ட் தடை செய்து இருக்கிறதா? தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்கு அவர்களை அழைத்துப் பேசக்கூடாது, Informal talks இது கூட வேண்டாம். Informal discussion-ஆவது நடத்தக்கூடாது என்று ஏதாவது தடை இருக்கிறதா?

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்குத் தடையாக நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால், அதைச் செய்ய முடியவில்லை, ஊதியத்தைக் கூடுதலாக வழங்க இயலவில்லை என்ற காரணத்தினால்தான், யாரும் கேட்காமலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தானாகவே முன்வந்து கொடுத்தார்கள். பேச்சுவார்த்தை



குறித்து அந்தப் பிரச்சினையைப் பற்றி யாரும் கேட்கவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களே தானாகவே முன்வந்து, தொழிலாளர்கள் நலனிலே அக்கறை கொண்ட தலைவி என்பதால், அவர்களே முன்வந்து கொடுத்தார்கள். அதற்கு ஏன் பேச்சுவார்த்தைக்கு, எதற்கு அழைக்க வேண்டும்? (குறுக்கீடு) ஆனால் ஊதிய ஒப்பந்தத்தை-(குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் (குறுக்கீடு) இருங்கள். பேச்சை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேச்சை முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இன்னொன்றையும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே இருக்கின்ற பிரச்சினை, திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கம் L.P.F..-கும், C.I.T.U. தொழிற்சங்கத்திற்கும் இருக்கின்ற ego பிரச்சினைதான் இதற்குக் காரணம் என்பதை நான் பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) இல்லை, நான் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை. நான் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை. நான் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நான் சொல்ல விரும்புவது எல்லாம், ஒரு விஷயத்தை நான் இன்னும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதிலே எப்படி sub-judice என்றால், Court அவமதிப்பு வழக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும், அதில் எப்படி நடைமுறைச் சிக்கல் இருக்கிறது என்பதையும் நீங்கள் உணர வேண்டும் என்பதற்காக, அதிலே இருக்கின்ற தடங்கலை, இடையூறை நான் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சங்கம் வழக்கத்திலே, C.I.T.U., உங்களுடைய தொழிற்சங்கம், இந்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடத்துவதை ஏற்கெனவே, தேர்வுபெற்ற 4 பிரதிநிதிகளை மட்டும் அழைத்து (குறுக்கீடு)

இல்லை. (குறுக்கீடு) தேர்வு பெற்ற அவர்களை மட்டும் அழைத்து பேசக்கூடாது, புதிய தேர்தல் வைத்து (குறுக்கீடுகள்) நான் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முழுமையாகச் சொல்லிவிடுகிறேன். அது எப்படி..

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அமைச்சர் சொல்லி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை முழுமையாகச் சொல்லவிட்டு, அப்புறம் பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நான் முழுமையாகச் சொல்கின்ற விளக்கத்தைக் கேட்டுவிட்டு, அதற்குப் பின்பு உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான்..(குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, We can have a half an hour discussion on that issue, your Honour.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை. சுருக்கமாகச் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கம், தேர்வுபெற்ற 4



பிரதிநிதிகளை மட்டும் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு அவர்களை மட்டும்தான் அழைக்க வேண்டும் என்று அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்; நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள்; வழக்கு தொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய தொழிற்சங்கம் புதிய தேர்தல் நடத்தி, அதிலே வருகின்ற பிரதிநிதிகளை வைத்து, இந்த ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று நீங்கள் கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள், நீதிமன்றத்திலே வைத்திருக்கிறீர்கள். அதற்கு அடுத்தபடியாக மற்ற பணியாளர்கள், மற்ற தொழிற்சங்கங்கள் எல்லாம், பதிவுபெற்ற தொழிற்சங்கங்கள், ஆனால், தேர்ந்தெடுக்கப்படாத தொழிற்சங்கங்கள்; தேர்தலிலே நான்கே நான்கு தொழிற்சங்கங்கள்தான் வெற்றி பெற்றன, 4 பிரதிநிதிகள். அந்த 4 பிரதிநிதிகளை மட்டும் வைத்துப் பேசவேண்டும் என்பது திமுக-வினுடைய நிலை. உங்களுடைய நிலை, புதிய தேர்தலை நடத்த வேண்டும் என்பது மற்ற தொழிற்சங்கங்கள், வெற்றி பெறாத தொழிற்சங்கங்கள், ஆனால் பதிவுபெற்ற தொழிற்சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள், அவை என்ன சொல்கின்றன என்று சொன்னால், அனைத்து பிரதிநிதிகளையும் அழைத்து, இந்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆக, இந்தத் தொழிற்சங்கங்களுக்குள் கருத்து ஒற்றுமை ஏற்படாமல், அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கின்ற கருத்து வேறுபாடுதான் இன்றைக்குத் தொழிலாளர்களுடைய நலனுக்கு எதிராக இருக்கிறதே தவிர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசோ அல்லது நமது அண்ணா தொழிற்சங்கமோ இல்லை.

எங்களைப் பொறுத்த அளவிலே, மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்த அளவிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்களை மட்டும் அழைத்துப் பேச வேண்டும் என்று சொன்னால் அதற்கும் தயார். இல்லை, பதிவுபெற்ற தொழிற்சங்கங்கள் அனைத்தையும் அழைத்துப் பேச வேண்டும் என்று சொன்னால் அதற்கும் தயார். எந்த நிலையிலும் இந்தப் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்ற தெளிவான நிலையை அறிவித்திருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஆனால், குழப்ப நிலையை உருவாக்கியிருப்பது எதிர்க்கட்சித் தொழிற்சங்கங்கள்தான். ஆகவே, ஊதிய ஒப்பந்தத்திற்குத் தடையாக இருப்பது எதிர்க்கட்சிகளுடைய தொழிற்சங்கங்கள் என்பதை நான் மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளுடைய சார்பில் நான் ஒரு வேண்டுகோளைத் தங்களுக்கு வைக்கிறேன். ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் பேச எழுந்தவுடன், அமைச்சர்கள் விளக்கம் என்ற பெயரால் அவர்களே மணிக்கணக்கில் பேசி, பேசுகிறவருடைய நேரத்தையும் எடுத்துவிட்டு, கடைசியிலே அவர்கள் பேச முடியாமல் போகிற நிலை; இது ஒரு விதமான இராஜதந்திர முறை. இந்த முறையை அணுகுவதனால் எங்களுடைய பேச்சுரிமைகள் மொத்தமும் எங்களுக்கு மறுக்கப்படுகின்றன. மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் பேசியதிலிருந்து ஒரு விளக்கம் என்ன என்று கேட்டால், paint அடிக்கிறார்கள். பஸ்ஸுக்கு அடித்து புதிதாக்குகிறார்கள். நாங்கள் அப்படி அடிக்கவில்லை. புதியதாக வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால் போதும். ஆனால், அதை விட்டுவிட்டு bonus-க்குப் போய், பழைய காலத்துக்குப் போய், பிறகு வழக்குக்குப் போய், கடைசியிலே அவர் பேசுவதற்கு நேரம் இல்லை. இப்போதே மணி *12-45*. இனி பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே பேச வேண்டும். (குறுக்கீடு) இவர் பேச வேண்டும். அதாவது, பேச வேண்டுமென்று சொன்னால், — நீங்களும் பார்த்திருக்கிறீர்கள், முக்கியமாக இது general discussion, பெரும்பகுதி அவர்தான் பேசுவார். எனவே, எங்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகவாவது தாங்கள் எங்களுக்கு ஒரு உத்தரவாதம் தரவேண்டும். இல்லாவிட்டால் இங்கு பேசி ஒன்றும் பிரயோஜனம் கிடையாது. வேண்டாமென்றால் விட்டுவிடுகிறோம்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். அதாவது, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கென்று எவ்வளவு நேரம் (குறுக்கீடு) கொஞ்சம் நீங்கள் ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கென்று எவ்வளவு நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நேரத்திலே நான் குறைப்பதில்லை. அமைச்சர்கள் குறுக்கீடு செய்தாலும்கூட, 20 மணித்துளிகள் திரு. ஹேமச்சந்திரனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால், திரு. ஹேமச்சந்திரன் பேசுவதற்கு அந்த 20 மணித்துளிகள் நிச்சயமாகக் கொடுக்கப்படும். அந்தக் குறுக்கீடுகளையெல்லாம் கழித்துக் கொண்டுதான் நேரத்தைக் கொடுக்கிறேன். ஆகவே, உங்களுடைய உரிமைக்கு நிச்சயமாக நான் பாதுகாப்பாக இருப்பேன், அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir-க்கு என்னுடைய நன்றி. அதாவது, அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் சொன்ன விஷயத்திற்கு, பதிலுக்கு நான் வரவில்லை. ஏனென்றால், இந்த விஷயத்திலே இந்த நாடு தெளிவுபட வேண்டும். ஆகவே, சபாநாயகர் அவர்கள் ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு, இந்தப் பிரச்சினைக்காக அனுமதி தரவேண்டும். அந்த நேரத்திலே எங்களுக்குச் சொல்லவேண்டியதை விளக்கமாகச் சொல்லலாம். ஆகவே, இப்போது நான் விளக்கப் போனால், மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேச எனக்கு நேரம் இருக்காது. நான் ஒன்றைச் சொல்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன், நீங்கள் தேர்தலில், — அதாவது, சென்ற வருடத்திலே கடைப்பிடித்த globalisation, liberalisation, privatisation கொள்கை என்பதைத்தான் இன்றும் நீங்கள் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனுடைய சொச்ச system-தான் இந்த பட்ஜெட் என்பது தெளிவு. அதாவது, இந்த நாட்டிலே இருக்கிற மக்களுக்கு, ஏழை மக்களுக்கு ஏதோ நன்மை செய்ய வேண்டுமென்று இந்த அரசு முயற்சித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு தோற்றத்தை இந்த அரசு இந்த பட்ஜெட் வழியாக உருவாக்குவதற்கு முயற்சிக்கிறது.

உதாரணமாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் என்று 106-வது para-விலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன். இந்தக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியம் வைக்கப்பட்ட நேரத்திற்கு முன்னாலேயே, அவர்களுடைய கோரிக்கை பென்ஷன். இந்த பென்ஷன் என்பது அவர்களுக்கு 2001-லே நண்பர் திரு. அன்வர் ராஜா அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலே, 60 வயதிற்கு மேலே வந்தவர்களுக்கெல்லாம் உடனே பென்ஷன் கொடுக்கப்படும் என்று 2001 செப்டம்பர் மாதத்திலே அறிவித்தார். ஆனால், இன்றுவரை அது கொடுக்கப்படவில்லை. 80 கோடி ரூபாய் அந்தக் கட்டுமானத் தொழிலாளிகளுடைய பணம் இன்றைக்கு அரசினுடைய கையிலேயிருக்கிறது. அந்த 80 கோடி ரூபாயை நிர்வகிப்பதற்கு இன்று ஒரு குழுகூட கிடையாது, ஒரு Board கூட கிடையாது. அப்படி 2000-லேயிருந்து 5 ஆண்டு காலத்திற்குப் பிறகும், இந்த அரசுக்கு பென்ஷனைப் பொறுத்த அளவிலே, அறிவிப்பதற்குச் சந்தர்ப்பச் சூழ்நிலை இல்லையா? அப்படியென்றால் என்ன? அவர்களிடம் ஒரு demand, ஒரு கோரிக்கை, நீண்டநாள் கோரிக்கை, இந்த unorganised workers—க்கு எல்லாம் இப்படி நல வாரியங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று, 10 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் பல இயக்கங்கள் நடத்தி, நல வாரியங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எல்லா நல வாரிய ஊழியர்களுக்கும் பென்ஷன்; அதாவது, வாழ்க்கைப் பாதுகாப்புக்கு, அவர்களுக்குப் பென்ஷன் வேண்டுமென்பதுதான் எல்லோருடைய கோரிக்கை. ஆனால்,

இந்தக் கட்டுமானத் தொழிலாளிகளுக்கு 4 ஆண்டுகளுக்கு முன்னாலே பென்ஷன் கொடுக்கப்படும், கொடுக்கப்படும் என்று சொல்லி, இதுவரை அது கொடுக்கப்படவில்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் முடித்துவிடுகிறேன். அதாவது என்ன சொல்லப்பட்டிருக்கிறது? எல்லாம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கணக்கெல்லாம் சரி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதை அறிவிப்பதில் என்ன தாமதம்? 5 ஆண்டு காலம் அல்லது 4 ஆண்டு காலம் எடுத்ததற்குப் பிறகும் இதற்கொரு முடிவை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லையா? இந்த அரசு இன்றைக்குப் பணம் சம்பாதித்திருக்கிறது என்று சொல்வது, இன்றைக்கு அவர்கள் நிதிநிலை அபிவிருத்திபடுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்வது, இன்றைக்குத் தொழிலாளர்களுக்கும், ஏழை மக்களுக்கும் கொடுக்கவேண்டிய பல சலுகைகளையும் மறுத்து, அந்த வழியில்தான் இந்தப் பணம் சொரூபித்திருக்கிறதே தவிர, மற்ற வழியில் அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர்களிடமிருந்து பெறுகின்ற அந்தப் பங்குப் பணத்தை அரசு பயன்படுத்தவில்லை. அது தவறான தகவல். தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. கட்டுமானத் தொழிலாளர்களின் பயனுக்காக இந்தத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என்று முன்பு குறிப்பிடப்பட்டது. தற்போது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட்டது. அதற்கான வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. இந்த ஆண்டு அது நடைமுறைப்படுத்தப்படும் என்று பத்தி 106-ல் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கட்டாயம் அது நடைமுறைப்படுத்தப்படும்.

*பிற்பகல் 12-50*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று, விவசாயத் தொழிலாளிகளைப் பொறுத்த அளவிலே pension, அதேமாதிரி சலுகைகள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த வாரியம் இன்றைக்குச் செயல்பட்வில்லை. அதேபோன்று, மின்சாரத் தொழிலாளிகளுக்கு ஏற்கெனவே pension இருந்தது. இன்றைக்கு, இந்த அரசு அந்த pension-ஐ வழங்கக்கூடாது என்று சொல்லி நீதிமன்றத்திலே case-க்குப் போய் இருக்கிறார்கள். அதேபோன்று, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு



pension இருந்தது. என்ன ஆயிற்று? ஆகவே, இந்த அரசைப் பொறுத்த அளவிலே ஒரு globalisation, liberalisation, privatisation என்று அந்த principles follow பண்ணப்பட்டது. அது இன்னும் follow பண்ணப்படுகிறது என்பது எங்களுடைய கருத்து. நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 14-வது நாடாளுமன்றத் தேர்தலிலே முடிவு என்ன? இந்த Policy-ஐக் கடைப்பிடித்த கேரள மாநிலத்தினுடைய அரசு, கர்நாடக மாநிலத்தினுடைய அரசு, ஆந்திரப்பிரதேச மாநிலத்தினுடைய அரசு, அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டனர். தமிழ்நாடு அரசும் மக்களால் நிராகரிக்கப்பட்டது, இல்லையா? அதே நேரத்திலே, எங்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் ஒரு தடவை சொன்னார்கள். எங்களுக்கு அதிலே ஒன்றும் வருத்தம் இல்லை. அதாவது, கம்யூனிஸ்டுகள் சும்மா பேசிக்கொண்டே இருப்பார்கள்; இல்லாவிட்டால் அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டே இருப்பார்கள் என்று. நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். What happened to the West Bengal Government and to the Tripura Government? 14-வது நாடாளுமன்றத் தேர்தலிலே அந்த இரண்டு மாநிலங்களிலே இருக்கிற கட்சிகள் .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இப்போது பாருங்கள், இவர் தேவையில்லாமல் பழையதைக் கொண்டு வந்து வம்புக்கு இழுக்கிறார். அப்போது பதில் சொல்லவேண்டிய அவசியம் வருமா? இல்லையா? *(சிரிப்பு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, அந்த மேற்கு வங்காள அரசு நடத்தப்பட்ட கட்சியும், திரிபுரா அரசு நடத்தப்பட்ட கட்சியும் - மக்களால் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது- இந்தக் கட்சிகள் அதிலே வரவில்லை. இந்த நான்கு மாநிலங்களிலே, தென் பகுதியிலே இருக்கிற, நான்கு மாநிலங்களிலே இருக்கிற அரசுகள் மக்களால் நிராகரிக்கப்பட்டது ஏன்? இந்த globalisation policy .....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, subject பற்றி நீங்கள் பேச வேண்டும். ஏன் நிராகரிக்கப்பட்டது என்பதற்கு பல முறை நாங்கள் விளக்கியிருக்கிறோம். நாற்பது, நாற்பத்து இரண்டு இலட்சம், எங்களுக்கு வர வேண்டிய ஓட்டுகள் நீக்கப்பட்டன; கள்ள ஓட்டுகள் 18 இலட்சம் போடப்பட்டன; உங்கள் கூட்டணி வென்றது என்று பலமுறை சொல்லியிருக்கிறோம், மீண்டும் எங்களைச் சொல்ல வைக்கிறீர்கள். You come to the subject and talk only the subject points.

**THIRU J. HEMACHANDRAN:** That may be with regard to Tamil Nadu. What about Karnataka? What about Andra Pradesh? What about Kerala?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் ....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புரிந்துகொண்டது சரியாக உள்ளது என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் globalisation, liberalisation தவறு என்கிறார். அந்தக் கொள்கை கூடாது என்கிறார். அது அவர்களுடைய கொள்கை. அப்படியானால், இந்த globalisation, liberalisation கொள்கையைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தியதே மத்தியில் இருந்த காங்கிரஸ் ஆட்சிதான் 1991-ல். அந்த காங்கிரஸ் கட்சித் தலைமையில் இன்று நடைபெறுகிற மத்திய அரசுக்கு இவர்கள் ஏன் ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு பதிலைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்கு, ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்ததற்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். அதாவது, இன்று நாட்டினுடைய நலன் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முக்கியத்துவம் கொடுக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முதலமைச்சர் கேட்டது, கொள்கைக்கு எப்படி ஆதரவு கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் சொல்கிறேன். அதாவது ....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்களிடம் நான் அறிய விரும்புவது, இன்றைக்கு மத்தியிலே, மத்திய அரசுக்குத் தலைமையேற்றிருக்கும் காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ் ஆட்சி, இன்றைய மத்திய அரசு globalisation, liberalisation என்ற கொள்கைகளை விட்டுவிட்டதா, கைவிட்டுவிட்டதா? இல்லையென்றால், நீங்கள் ஏன் ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் தெளிவாக விளக்கியிருக்கிறோம். Globalisation liberalisation, privatisation என்ற policy-யிலே மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற காங்கிரஸ் கட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை நாங்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த எதிர்ப்பினுடைய பின்னணியில்தான் common minimum programme .....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர்



அவர்களே, நான் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஆனால், நான் சொன்னதைத்தான் அவரும் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதைத்தான் ஏற்கெனவே சொன்னேன். கம்யூனிஸ்ட் கட்சிகள் வெத்துவேட்டுப் போராட்டங்களை நடத்துவார்கள், மேடையிலே முழங்குவார்கள், ஆங்காங்கே கொடி பிடித்துக் கொண்டு நிற்பார்கள், இத்தகைய சபைகளிலே முழங்குவார்கள், ஆனால், அவற்றையெல்லாம் செய்துவிட்டுப் பேசாமல் மத்திய அரசுக்கு அவர்கள் ஆதரவு கொடுத்துக்கொண்டே இருப்பார்கள்.

*பிற்பகல் 12-55*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது உலகமயம், தனியார்மயம், தாராளமயம் ஆகிய கொள்கைகளைத் தொடர்ந்து நாங்கள் எதிர்த்துப் போராடி வருகிறோம். காங்கிரஸ் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வெளியிலே இருந்து நாங்கள் ஆதரிக்கிறோம். ஒரு அபாயத்தைத் தடுப்பதற்காக ஆதரிக்கிறோம். நாளைய தினம்கூட (குறுக்கீடு) நாளைய தினம்கூட (குறுக்கீடு) வீணாகக் கூச்சலிடக் கூடாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டுகள் அளவுக்கு நாங்கள் பெரிய அறிவாளிகள் அல்ல. ஆனால், எங்கள் சிற்றறிவுக்கு எட்டியவரை ஒரு கொள்கையை நாம் எதிர்த்தால், அந்தக் கட்சியை அந்த ஆட்சியை எதிர்க்க வேண்டும். ஒரு கொள்கையை ஆதரித்தால் நாம் அந்தக் கட்சிக்கோ, ஆட்சிக்கோ ஆதரவு கொடுக்க வேண்டும். இதுதான் நாங்கள் புரிந்துகொண்டது. ஆனால், கம்யூனிஸ்டு கட்சிகளைப் பொறுத்தவரை அவர்கள் திரும்பத் திரும்ப globalisation, liberalisation, privatisation இவற்றை எதிர்க்கிறோம் என்று சொல்லிக்கொண்டே இந்தக் கொள்கைகளை எல்லாம் செயல்படுத்திக்கொண்டிருக்கிற மத்திய அரசுக்கு ஆதரவு கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கொள்கைகளை எதிர்க்கிறோம், ஆனால் ஆட்சி அதிகாரத்தில் இல்லாவிட்டாலும் அதற்குரிய சலுகைகளை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையில், பேராசையில் நீங்கள் ஆதரவு கொடுத்துக்கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்கள் என்ன சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுங்கள். நாங்கள் எந்தச் சலுகையும் அனுபவிக்கவில்லை. அதை விரும்பவும் இல்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதரித்த ஒரு கட்சி, ஒரு மதவாத கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்து

நாட்டுக்கு துரோகம் செய்யக் கூடாது என்பதற்காக இந்த மதச் சார்பற்ற கட்சிகளோடு இணைந்து தேர்தலில் போட்டியிட்டு அதிலே பிரதான கட்சியே இன்றைக்கு பொறுப்பிலே வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், நான்கு மணித்துளிகளுக்குள் முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் முடித்துவிடுகிறேன். அவர்களுடைய globalisation போன்ற கொள்கைகளை இன்றைக்கு எதிர்த்துக் கொண்டு மக்களுக்கு நன்மைகளை எந்த அளவுக்கு அவர்களோடு போராடிப் பெற முடியும் என்ற முறையிலேதான் இன்று common minimum programme என்ற ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையிலேதான் இந்த வருடத்திற்கான மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் சில நன்மைகள் இந்த நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆகவே, இந்த socialism என்பது எங்களுடைய கொள்கை. அதற்காக வேண்டி நாங்கள் போராடிக்கொண்டிருக்கிற நேரத்திலே அதற்காக வேண்டி எங்கெல்லாம் இந்த நாட்டில் இருக்கிற மக்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஒன்றுபட்டு இயக்கங்கள் நடத்த வேண்டுமோ, ஒன்றுபட்டுச் செயல்படுத்த வேண்டுமோ அதையும் செய்து கொண்டிருக்கிறோம். அந்த முறையிலேதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை - கட்சியைக் கூட நாங்கள் ஒரு நேரத்தில் ஆதரித்தது. அதுவல்ல பிரச்சினை. நான் என்ன சொல்கிறேன் என்றால் இன்று நம்முடைய மாநில அரசு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுகிறேன். இந்த வேலை நியமனத் தடைச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும். இன்று அவர்கள் மக்களுக்கு நன்மைகள் செய்கிறோம் என்ற பெயரில் சில நடவடிக்கைகள் எடுப்பதாக இருந்தால், உழைப்பாளி மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தினால்தான் தமிழகம் முன்னேற முடியும் என்பது பற்றி இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. இன்று ஏராளமான மக்கள் வேலையில்லாதவர்களாக அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே அலுவலகங்களிலே workload



இன்றைக்குக் கூடிக் கொண்டேயிருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தொழிலாளிகளுக்கு பென்ஷன் மட்டுமல்ல, தொழிலாளிகளுடைய குடும்பங்களுக்கு family pension ஏற்படுத்துகிற முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதைப்போல இன்றைக்கு labour department இருக்கிறது என்று எங்களால் நம்ப முடியவில்லை. Labour Minister இருக்கிறார். ஆனால், பல இடங்களில் labour officers posts vacant. அதைப்போல labour court-ல் நீதிபதிகள் posts vacant. எப்படி உழைப்பாளி மக்கள் நியாயம் தேடிக்கொள்ள முடியும்? ஆகவே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று இன்று குடிதண்ணீர் என்பது மிக முக்கியமானதொரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. பாரா 63-லேயும், 74-லேயும் குடிதண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மாநிலத்திலே குடிதண்ணீருக்காக வேண்டி ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி எவ்வளவு? நீங்கள் 63-வது பாராவிலே 5 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஐந்து கோடி ரூபாயை வைத்து சரிபண்ணிக்கொள்ள முடியுமா? அதேபோன்று வீராணம் திட்டம் சம்பந்தமாக...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். அடுத்து, திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். ஒரு மணித்துளிக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று, வீராணம் திட்டம் சம்பந்தமாக பல கருத்துகள் இன்றைக்கு வந்துகொண்டிருக்கின்றன. உண்மையாக, வீராணத்தைப் பொறுத்த அளவிலே, சிறந்த விஞ்ஞானிகளை வைத்து, ஆராய்ச்சி நடத்தி, அதனுடைய யதார்த்தமான பலன்கள் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும். இன்னும் சில விஞ்ஞானிகளுடைய கருத்துகள், கட்டுரைகள் வருகின்றன. வீராணம் திட்டத்தைப் பொறுத்த அளவிலே மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு, நன்மை செய்யக்கூடிய முறையில் சிறந்த விஞ்ஞானிகளை வைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே, 50 இலட்சம் ஏக்கர் நிலத்தைப் பொறுத்த அளவிலே, ஏழை விவசாயிகளுக்கு அல்லது நிலமற்ற விவசாயிகளுக்கு அந்த நிலம் கிடைக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை இந்த அரசு எடுப்பதன் வழியாகத்தான், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நாம் நல்ல முறையிலே அல்லது இந்த நாட்டிலே விவசாய உற்பத்தியைப் பெருக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆனால், இன்னும் வசதி படைத்தவர்களுக்குப் போகக்கூடிய பாதையில்தான் அந்தத் திட்டம் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நாங்கள் மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். ஆகவே, அந்தத் திட்டத்தை மக்களுடைய நலனுக்காக உபயோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரேயொரு தொகுதிப் பிரச்சினை பற்றி மட்டும் சொல்லிக்கொள்கிறேன். அரசு ரப்பர் தோட்டத்திலே பணியாற்றுகிற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாக எழுதிக் கொடுத்துவிடுங்கள். இல்லை, மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது நீண்ட விளக்கம் கூற விரும்பவில்லை. ஆனால், இந்த நேரத்தில் ஒன்றை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்த நாள் முதலாக, இப்போது தெரிவித்த அதே தவறான கருத்தை திரும்பத் திரும்ப ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் தவறாமல் இந்த அவையில் சொல்லிக்கொண்டிருக்கிறார். நானும் திரும்பத் திரும்ப இதற்குப் பலமுறை விளக்கம் அளித்துவிட்டேன். இப்போது சுருக்கமாக ஒரு விளக்கம் அளிக்கிறேன். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றுகின்ற திட்டத்தில் இப்போது அரசு முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது ஏதோ, ஏழையெளிய மக்களுக்கு இந்த நிலங்களை வழங்காமல், வசதிபடைத்தவர்களுக்கு வழங்குவது போன்ற தவறான ஒரு கருத்தை இங்கே கூறிக்கொண்டிருக்கிறார். அதைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கிறார். இந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தில் 80 விழுக்காடு தனியாருடைய பட்டா நிலங்கள். அதாவது, ஏற்கெனவே இருக்கின்ற சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்கள். அந்தத் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு Contract Farming என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, அதன்மூலம் அவர்கள் பெரிய



வசதிபடைத்த தொழிலதிபர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு தேவையான முதலீடுகளைப் பெற்று, அவர்களுடைய சொந்த நிலங்களை விளை நிலங்களாக மாற்றப்போகிறார்கள். ஆனால், பலமுறை ஏற்கெனவே இந்த விளக்கத்தைச் சொல்லிவிட்டேன். ஆகவே, நான் அமைச்சர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுவதே, இந்த அரசைக் குறை கூறுவதற்காகவும், தவறான குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, பொத்தாம்பொதுவான குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, அவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகவே பேசுகிறார். எத்தனை முறை விளக்கங்களைச் சொன்னாலும், கிளிப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுப்பதைப்போல் சொன்னாலும் அவர் அதை ஏற்றுக்கொள்வதில்லை, அதை ஏற்றிக்கொள்வதில்லை. ஆகவே, இனிமேல் இந்த அவையின் நேரத்தை வீணாக்க வேண்டாம். உங்களுடைய தெம்பையும் நீங்கள் வீணாக்க வேண்டாம். திரு. ஹேமச்சந்திரன் என்ன பேசினாலும் பேசிக்கொண்டு போகட்டும். தயவு செய்து அமைச்சர்கள் இனிமேல் அவருக்குப் பதில் சொல்ல வேண்டாம். நானும் பதில் சொல்லப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடிந்துவிட்டது. திரு. ஹேமச்சந்திரன், முடிந்துவிட்டது. நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வள்ளுவப் பெருந்தகை கூறியது மாதிரி,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்று அழகாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். பொருள் வரும் வழிகளை உண்டாக்குவதிலும், பொருளைச் சேர்த்தலிலும், அதைப் பாதுகாத்தலிலும், அதனை நல்ல வழியில் செலவிடுதலிலும் வல்லவனே அரசனாவான் என்று வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஒரு நல்ல அரசுக்கு இதுவே இலக்கணமாகும். அந்தவகையிலே இருக்கிற

இந்த நிதிநிலை அறிக்கையிலே, பாட்டாளி மக்கள் கட்சி ஏதோ குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்ற அந்த நோக்கத்திற்காக அல்லாமல், சட்டமன்றத்திலே ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக, சொல்ல வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லக்கூடிய அந்தக் கடமையுணர்வோடு சொல்லப்படுகின்ற நேரத்திலே, நிதிநிலை அறிக்கைமீது இருக்கிற நிலவரங்களை எடுத்துச் சொல்வதனாலே அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும், மேம்படுத்தப்பட வேண்டும் என்ற அந்த நல்ல நோக்கத்துடன் சொல்கிறேனே தவிர, குற்றச்சாட்டுக்காக அல்ல என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கின்றோம். படித்துப் பார்த்த நேரத்திலே நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாக வர வேண்டுமென்று சொன்னால், நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பு, கடந்த காலங்களிலே, கடந்த ஆண்டுகளிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து அறிக்கை கொடுக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதுபோல, இந்த மாநிலத்தினுடைய பொருளாதார சூழ்நிலை எந்தவகையிலே இருந்து கொண்டிருக்கிறது? அதற்காக, ஒரு பொருளாதார ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு, நிதிநிலை அறிக்கைக்கு வரலாம் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். கடந்த கூட்டத்தொடரிலேகூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், வழங்குகிறோம் என்று. அதை நீங்கள் கட்டாயம் தொடர்ந்து வரக்கூடிய காலங்களிலாவது வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஒரு நிதிநிலை அறிக்கை என்று சொல்லுகின்ற நேரத்திலே அரசு தயாரிப்பதற்கு முன்பாக இந்த மாநிலத்தினுடைய பொருளாதாரச் சூழ்நிலை என்ன, மக்களுடைய தேவைகள் என்ன என்பதைப்பற்றியெல்லாம் கருத்து கேட்கக்கூடிய வகையிலே, நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பு பொதுமக்களிடத்திலே, அரசியல் கட்சிகளிடத்திலே, பொருளாதார வல்லுநர்களிடத்திலே, தொழிலதிபர்களிடத்திலே மற்றும் பத்திரிகையாளர்கள் போன்றவர்களிடத்திலே கருத்துகளைக் கேட்டு, அதைப் பெற்று, அவற்றையெல்லாம் உள்ளடக்கி ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை இந்த அரசு கொடுக்கும் என்று சொன்னால், அது மாநில அரசுக்குப் பெருமையைச் சேர்க்கக்கூடிய வகையிலேயும், மக்களுக்குப் பயன்படுகின்ற



வகையிலேயும் இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்த வகையிலேதான் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலேகூட ஒவ்வொரு ஆண்டும் வரைவு நிதிநிலை அறிக்கையை நாங்கள் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறோம். அது அரசுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய வகையிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி மக்கள் விவரங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்திற்காக அதையும் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இதிலே ஒரு விவரத்தை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீங்கள் அனுப்பிய மாதிரி நிதிநிலை அறிக்கை எனக்கும் வந்தது. ஆங்கிலத்தில் மட்டும் அதைப் போட்டு இருக்கிறீர்களா, தமிழிலும் போட்டிருக்கிறீர்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தமிழிலேயும் நாங்கள் போட்டிருக்கிறோம். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு—தமிழ் முழுவதும் படிக்காத ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுக்கு—வழங்குவதற்காக ஆங்கிலத்திலே போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஐ.ஏ.எஸ். அதிகாரி இல்லையே!

**திரு. ஜி.கே. மணி:** தமிழிலும் இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே இங்கே குற்றச்சாட்டுக்காக அல்ல—நிதிநிலை அறிக்கையிலே இருக்கக்கூடிய ஒன்றை இங்கே சுட்டிக்காட்டுவதற்காக—அதிலே இருக்கிற குறைகளையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது. அது நிதிநிலை அறிக்கை புத்தகத்திலே 2005-2006, பக்கம் 41 பத்தி 74-லே—அதாவது புத்தாயிரம் ஆண்டின் ஒரு முக்கியமான வளர்ச்சி இலக்காகும்—மாநிலத்திலுள்ள 81,787 குடியிருப்புகளில் 74,546 குடியிருப்புகளுக்கு, அதாவது மொத்த மக்கள்தொகையில் 90 சதவிகிதத்திற்கு அதிகமானோர் பயன்பெற்று வருகின்றனர் என்று 2-3-2005 அன்று அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல 2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புள்ளிவிவர கைப்புத்தகம்; அது 20-8-2004 அன்றைய தேதியிட்டு இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் பக்கம் 160-ல் ஊரகக் குடியிருப்புகளில் குடிதண்ணீர் நிலைமை என்ற தலைப்பிலே ஒரு விவரம் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த விவரம் என்னவென்று சொன்னால் இந்தப் புத்தகத்திலே இருக்கிறது.

பக்கம் 160-லே இருக்கிறது. அதிலே என்னவென்று சொன்னால் முழுப் பயன்பெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை 30,117, அதாவது 36.82 சதவிகிதம், அரைகுறையாக பயன்பெற்ற குடியிருப்புகள் 40,124 - 49.06 சதவிகிதம், பயன் ஏதும் பெறாதவை 11,546 குடியிருப்புகள், 16.12 சதவிகிதம். ஆக மொத்த கிராமங்கள் 81,787 — 100 சதவிகிதம். இது சொல்லப்பட்டிருக்கிற விவர உண்மை. அதேபோல, இந்தப் புள்ளிவிவரப்படி முழுப் பயனோ, அரைகுறை பயனோ பெறும் குடியிருப்புகள் என்று பார்த்தால் —முழு பயன்பெற்ற குடியிருப்புகள் 30,117. அரைகுறை குடியிருப்புகள் 40,124, ஆக மொத்தம் 70,241 குடியிருப்புகள். இந்தப் புள்ளிவிவரம் 1-2-2003 அன்று உள்ள நிலவரப்படி தரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்கணக்கின்படி மொத்த குடியிருப்புகள் 81,884 என்றால், அரசு தற்போது தெரிவித்துள்ள கணக்குக்கு ஒத்துப்போகிறது. இதிலே மாற்றம் இல்லை. ஆனால் புள்ளிவிவரத் துறை 70,241 குடியிருப்புகள் பயன்பெற்றவை. அதாவது 86 சதவிகிதம் பயன்பெற்றதாகக் கூறப்படுகிறது. முதலிலே சொல்லப்படுவது 90 சதவிகிதம்...

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகின்ற அந்த நாளைய நிலவரப்படி துறையிடமிருந்து நிதித் துறைக்கு வருகின்ற தகவலின் அடிப்படையில் தரப்படுகிறது. அந்தப் புத்தகத்தைப் பொறுத்தவரைக்கும் அது வெளியிடப்பட்ட நாள்-பல மாதங்களுக்கு முன்னால் வெளியிடப்பட்டது என்பதை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. நாள் முன்னாலே இருக்கட்டும். அதற்குப் பின்னாலே வருகிறேன். இதிலே இருக்கக்கூடிய குற்றச்சாட்டு அது மட்டுமல்ல. அடுத்து, வரக்கூடியதிலே சொல்கிறேன். அடுத்து, அதிலே கொடுக்கப்பட்டிருப்பது 2003-2004 (குறுக்கீடு) இல்லை, அதையும் சேர்த்துச் சொல்கிறேன். ஆக, 74,546 குடியிருப்புகள், அதாவது 91 சதவிகிதம், இதிலே எது உண்மை? எதை நாங்கள் புரிந்துகொள்வது? சட்டமன்றத்திற்கு உண்மையான தகவலாக எடுத்துக்கொள்வது என்ன? இதைவிட...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் [illegible] நான் சொன்னேன். அந்த Statistics Department-னுடைய book பல மாதங்களுக்கு முன்னால் வெளியிடப்பட்டது. இந்த



இடைப்பட்ட காலத்திலே நடைபெற்ற பணிகள் எங்கெங்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரப்பட்டிருக்கிறதோ, அதையெல்லாம் உள்ளடக்கிய இறுதி நிலை தகவல்தான் நிதிநிலை அறிக்கையில் தரப்படுகிறது. அதுதான் இங்கே தரப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது குடியிருப்புகளின் எண்ணிக்கை எப்படி மாறுபடும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. குடியிருப்புகளின் எண்ணிக்கை நீங்கள் சொன்னதும் 81,787 தான், இதிலே இருப்பதும் 81,787 தான். ஒட்டுமொத்த குடியிருப்புகள் 74,546 என்றால் இதுகாறும் எங்கெங்கே தண்ணீர் தரப்படவில்லையோ அங்கும் தரப்பட்டுள்ளது என்பதுதான் அதனுடைய பொருள். அதுதான் நிலை.

**திரு. ஜி.கே. மணி:** பொருளாக எடுத்துக்கொண்டால், அடுத்து நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். இதைத்தவிர இன்னொரு புள்ளிவிவரம் எவ்வளவு குளறுபடியைக் காட்டுவதாக இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பக்கம் 26, பத்தி 47. அதிலே சொல்லப்பட்டிருக்கிற விவரம் முழு பயன்பெற்ற குடியிருப்புகள் 28,623, 35.6 சதவிகிதம். அரைகுறையாக பயன்பெற்ற குடியிருப்புகள் 51,294, 63.8 சதவிகிதம். பயன் ஏதும் பெறாதவை 504. அதாவது 0.6 சதவிகிதம். இப்பொழுது 80,421 குடியிருப்புகள், 100 சதவிகிதம். இப்பொழுது எவ்வளவு வித்தியாசம் வருகிறது? எப்படி இதிலே 81 ஆயிரமாக இருந்த குடியிருப்புகள் இங்கே 80 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது? அப்பொழுது அந்தக் குடியிருப்புகள் எல்லாம் என்ன ஆயிற்று? காணாமல் போய்விட்டதா தமிழ்நாட்டிலே? ஆக, எவ்வளவு முரண்பாடு இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் வறட்சி, நிலத்தடி நீர் மிக ஆழமாகப் போய்விட்ட நிலை பல இடங்களில். பாதுகாக்கப்பட்ட நீர் எங்கெங்கே கிடைத்துக்கொண்டிருந்ததோ, அங்கே நீர் வரத்தோ, நீர் வாய்ப்போ இல்லாத நிலையில் அவை Statistical Department-க்கு கிடைத்தத் தகவலில் அது அப்படி இருந்திருக்கலாம். தற்போது உள்ள நிலையை அவர்கள் வெளியிட்டிருக்கலாம். இறுதி நிலையை [illegible] வெளியிடுகிறது.



226635

[2005 மார்ச் 10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே 1,366 கிராமங்கள் வித்தியாசம்.-மறுபடியும் சொல்கிறேன் பாருங்கள். இன்னும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. 1-4-2002-லே 80,421. அப்பொழுது குடியிருப்புகள் ஆயிரத்து சில்லறை வித்தியாசம். அப்பொழுது 1-4-2003, அதிலே 81,724. ஆக, வித்தியாசம் என்பது 1,366 குடியிருப்புகள். இந்தக் குடியிருப்புகள் புதிதாக வந்தனவா? அல்லது காணாமல் போய்விட்டதா? எப்படி இருந்தாலும் இருக்கின்ற கிராமங்கள் இருக்க வேண்டும்தானே? காணாமல் போவதற்கு வாய்ப்பு இல்லை. குடியிருப்புகளின் எண்ணிக்கை கூடுதலாக வேண்டுமே தவிர, குறைவதற்கு —அதிலேயும் ஒரு குளறுபடி.

அடுத்தது, முழு அளவிலோ, அரைகுறையாகவோ பயன்பெற்ற கிராமங்கள்; உங்கள் புள்ளிவிவரம்தான். 1-4-2002-ல் பயன்பெற்றவை 79,917 குடியிருப்புகள். அதிலே 1-4-2003-லே 70,241 குடியிருப்புகள். ஆக, பயன்பெற்ற குடியிருப்புகள் என்பது 79,917-லிருந்து 70,241 ஆகக் குறைந்திருப்பதற்கு என்ன காரணம்? இதிலே எவ்வளவு குறைந்திருக்கிறது என்று சொன்னால், உங்கள் கணக்குப்படி 9,676. இது எப்படிக் குறையும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் வறட்சி, எங்குமே குடிக்க நீர் இல்லை என்று நீங்களே சொல்கிறீர்கள். இந்த நிலையில் எங்கெங்கே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு—பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்துக்கொண்டு இருந்த பகுதிக்கு—அந்தத் தண்ணீர் கிடைக்கவில்லையோ அவையெல்லாம் கணக்கிலிருந்து விடுபட்டிருக்கலாம். தற்போது நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற அந்த 74,546 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்பது தற்போதைய இறுதி நிலை.

*பிற்பகல் 1-15*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் சொல்கிறேன், குடியிருப்புகள் முதலில் கொடுத்தாகிவிட்டது, அப்புறம் எப்படி குறைகிறது? (குறுக்கீடு) சரி, வறட்சியின் காரணமாக குறைகிறது என்று வைத்துக்கொள்ளலாம். அப்போது நீங்கள் நடவடிக்கை எடுத்திருப்பது 90 சதவிகிதம் என்று சொல்கிறீர்கள், 96 சதவிகிதம் என்று சொல்கிறீர்கள். தொடர்ந்து வருகிறது பாருங்கள். அரசு நிதிநிலை அறிக்கை 2005-ன்படி குடியிருப்புகள், மறுபடியும் பார்த்தீர்கள் என்றால்...



2005 மார்ச் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஏன் இதிலே போய் வறட்டு இழுப்பாக இழுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்ன விவரம் என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய குடியிருப்புகள், குளறுபடிகள் நிறைய இருக்கின்றன என்பதற்காகச் சொல்ல வருகிறேன், வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) தொடர்ந்து 90 சதவிகிதம் கொடுத்தாகிவிட்டது என்று சொல்கிறீர்கள். 85 சதவிகிதம் வருகிறது. கொடுத்த குடியிருப்புகள் காணாமல் போய் இருக்கின்றன. அடுத்தது, குடியிருப்புகள் கூடுதலாகி இருக்கிறது. எவ்வளவு முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது அறிக்கையிலே. அதைத்தான் சொல்ல வருகிறேன். சரி. இன்னும் நிறைய விஷயம் இருக்கிறது, நான் அதற்குள் போகவில்லை. அடுத்தது, என்னவென்று பார்த்தால் அதிலே மிகப் பெரிய குளறுபடி. அப்புறம், 7,241 குடியிருப்புகள் வித்தியாசம். அதற்கு நான் போகவில்லை. அடுத்தது பார்த்தீர்களென்றால், இதிலே இன்னொரு வருத்தப்பட வேண்டிய, தவறான விவரம் என்னவென்று சொன்னால், தமிழ்நாடு முழுவதும் 90 சதவிகிதம் குடிநீர் வழங்கப்பட்டதாகச் சொல்கிறீர்கள். ஆனால், உங்கள் கணக்குப்படி பார்த்தீர்களென்றால், தருமபுரி மாவட்டத்திலே, உங்கள் விவரப்படி, அதாவது கையேடு 159-வது பக்கத்திலே, 1-4-2003-ல் அறிவித்துள்ளபடி (குறுக்கீடு) கையேடு வைத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. குடியிருப்பு சம்பந்தமாக இதற்கும், அதற்கும் ஒத்து வருகிறதே!

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் தற்போதைய நிலவரம் என்ன என்பதை அவையிலே பேசுவதற்கு புள்ளிவிவரம் வேண்டுமென்றால், அந்தத் துறைக்குச் சென்று துறை மூலமாக, தற்போதைய latest information என்ன என்பதை எடுத்துக்கொண்டு பேசினால் அது முறையாக இருக்கும். ஓராண்டுக்கு முன்னால், statistics தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பல வறட்சி நிலை. இதில் எந்தவொரு பொருளும் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது நிதிநிலை அறிக்கையில் என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ, அதுதான் சரியானது. அதைச் சரியானது என்று நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரக் கையேடு அரசாங்கத்தினுடையது. அதிலே இருக்கிற குடியிருப்புகள் இதிலேயும் ஒத்து வருகிறது. அப்புறம், ஆண்டுக்கு ஆண்டு மாறி வருகிறதே என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு) அப்புறம் எப்படி? (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதே புள்ளிவிவரத்தில் இருப்பது, மொத்த குடியிருப்புகள் மாறி வருவதற்கும் சரியாக இருக்கிறதே! (குறுக்கீடு) புது புத்தகம். (குறுக்கீடு) சரி, இதிலே இருப்பது எப்படிச் சரியாக இருக்கும், 2005, நிதிநிலை அறிக்கையிலே சரியாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் அதையெல்லாம் தெளிவாக எழுதித் தரட்டும். Statistics Department-இடம் கேட்டு இவர் கூறியதில் ஏதேனும் குறை இருக்கிறதா? அல்லது குறிப்பிலே குறை இருக்கிறதா என்பதை அரசு கண்டறியும்.

**திரு. ஜி.கே. மணி:** சரி. அடுத்தது, இன்னொன்று பார்த்தீர்கள் என்றால், தருமபுரி மாவட்டத்திலே—எல்லா மாவட்டங்களிலும் ஒட்டுமொத்தமாக 90 சதவிகிதம் குடிநீர் கிடைத்தாகிவிட்டது. ஆனால், உங்கள் கணக்குப்படியே, தருமபுரி மாவட்டத்திலே—மொத்தக் குடியிருப்புகள் 6,855. இதிலே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்ட கிராமங்கள் 2,847. ஆகவே, எவ்வளவு என்று சொன்னால் 42 சதவிகிதத்திற்கு இதுவரையிலே குடிநீர் வழங்கப்படவில்லை. உங்கள் கணக்கு சொல்கிறது, நான் சொல்லவில்லை. அப்படியென்றால் 58 சதவிகிதம் வழங்கப்பட்டிருக்கிறது. 42 சதவிகிதம் வழங்கப்படவில்லை. இது வறட்சியான மாவட்டம். தொடர்ந்து பின்தங்கிய மாவட்டம். கல்வி நிலையிலே, பொருளாதாரத்திலே, எல்லா வாய்ப்பிலும் பின்தங்கிய மாவட்டம் என்று சொல்கிறோம். அங்கே புளோரைடு இருக்கிறது, நச்சுத்தன்மை இருக்கிற மாவட்டம் என்று சொல்கிறோம். அதற்காக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று சொல்கிறோம், செய்யவில்லை. சரி, வேறு திட்டமாவது கொண்டுவரப்பட்டதா? அந்த மாவட்டம் என்ன பாவம் செய்தது? பாதுகாக்கப்பட்ட...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே, fluoride content அதிகம் இருக்கிற காரணத்தால், special scheme ஒன்றைப் போட்டு, பிரத்யேகமான முறையிலே அந்த fluoride content உள்ள தண்ணீரை எல்லாம் சுத்தப்படுத்துவதற்கு உள்ளாட்சித் துறை தனியாக நடவடிக்கை எடுத்து



வருகிறது. மானியக் கோரிக்கையின்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தருவார்.

**திரு. ஜி.கே. மணி:** இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், அந்த
மாவட்டத்தை கவனத்திலே எடுத்துக்கொண்டு குடிநீர் வழங்க வேண்டும்
என்பதற்காகத்தான், வேறு ஒன்றும் அல்ல. அப்படியென்றால், 42
சதவிகிதம் வழங்கப்படவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தது, வளர்ச்சி விகிதத்தைப் பற்றிச் சொல்கிறோம். வளர்ச்சி
விகிதம், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு முதல் மாநிலமாக வருவதற்கு
வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். அப்படி
வளர்ச்சி விகிதத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், நான்கூட
முதலிலேயிருந்து சொல்ல வரவில்லை. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.
ஒட்டுமொத்தமாக, அதாவது 1986-91, அதற்குப் பிறகு 1991-லிருந்து 1996
வரை அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலம். அந்த ஆட்சிக் காலத்திலே
அந்த வளர்ச்சி விகிதம் என்பது 122 சதவிகிதம். நான் வேண்டுமென்றால்
புள்ளிவிவரத்தோடு சரியாகத் தருகிறேன். உங்கள் அறிக்கையிலே
இருந்துதான் எடுத்திருக்கின்றேன். 122 சதவிகிதம். அதற்கு அடுத்து
1996-97, அது முதல் 2000-2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலம். அதிலே 79
சதவிகிதம். குறைந்திருக்கிறது. நான் ஒத்துக்கொள்கிறேன். ஆக, அதற்குப்
பிறகு இப்போது 2001-லிருந்து 2005 வரை எடுத்துக்கொண்டால், 62
சதவிகிதம்தான். ஆகவே, இப்படியெல்லாம் 122 சதவிகிதம், 79 சதவிகிதம்,
62 சதவிகிதம் என்று வந்திருக்கிறது. அப்போது, இந்த ஆட்சியிலே 62
சதவிகிதமாகக் குறைந்திருக்கிறதே தவிர, அது தி.மு.க. ஆட்சியைவிட
வளர்ச்சி பெறவில்லை. இது ஒட்டுமொத்தமாக, இந்த 15 ஆண்டு
காலத்திலே தமிழ்நாட்டிலே வளர்ச்சி விகிதம் என்பது குறைந்து
கொண்டேயிருக்கிறது. அதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

பாசனம். பாசனத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,
நிதிநிலைக் குறிப்புப் புத்தகம், பகுதி-1. இதிலேயும் அதேமாதிரிதான்.
இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், 2003-2004 திருத்திய
மதிப்பீட்டிலே 281 கோடி ரூபாய். 2003-2004-லே 186 கோடி ரூபாய்.
அப்போது இதிலே 100 கோடி ரூபாய் குறைத்தாகி விட்டது. 100 கோடி
ரூபாய் பாசனத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதிநிலைக் குறிப்பு
புத்தகம் பகுதி-1, இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி அடுத்ததைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் சிறுநீர்ப் பாசனம். அதிலே 2003-2004-லே 69 கோடி ரூபாய்; 2003-2004-லே 46 கோடி ரூபாய். இதிலேயும் குறைக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் எவ்வளவு என்று சொன்னால்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறு பாசனம் என்று திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** நீர்ப்பாசனம். பெரிய பாசனம், சிறு பாசனம் என்று சொல்லுகிறோம் அல்லவா? அது நீர்ப்பாசனம் தானே? அதை ஏன் தவறாக எடுத்துக்கொள்கிறீர்கள் நீங்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, அந்த வகையிலே இதிலேயும், பாசனத்திலேயும் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் ஒதுக்கீடு என்பது குறைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, எங்கள் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் ஏதோ கேட்கிறார்?

*** மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகிறபோது எனக்கு இருக்கும் சந்தேகம் என்னவென்றால் அவர் ஒரு பட்ஜெட் தயாரித்து வந்து, அதை வைத்துத்தான் பேசிக்கொண்டிருக்கிறாரோ என்று கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, அந்த பட்ஜெட் இல்லை. உங்கள் பட்ஜெட்டில்தான் பேசுகிறேன் நான். நீங்கள் கொடுத்த புள்ளிவிவரம்தான்.

அடுத்தது பார்த்தீர்கள் என்றால், வளர்ச்சி விகிதம். பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு செலவு. அதிலே எவ்வளவு என்று சொன்னீர்கள் என்றால், 2003-2004 கணக்குப்படி 6 கோடி ரூபாய்; 2004-2005-ல் 14 கோடி ரூபாய். இப்போது 2005-2006-லே திட்ட மதிப்பீடு



வெறும் 7 ஆயிரம் ரூபாய். என்னவாயிற்று இப்போது? நிதிநிலைக் குறிப்பு பகுதி-I, பக்கம் 38, அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்கம் 38. (குறுக்கீடு) இல்லை, அதிலேயும் குறைந்திருக்கிறது. அப்போது எவ்வளவு கோடி குறைந்திருக்கிறது என்று பாருங்கள். இது தொழில் துறையிலே.

அடுத்தது வேளாண்மைக்குப் பார்த்தீர்கள் என்றால், அதிலேயும் அதேமாதிரி. 2003-2004-லே 616 கோடி ரூபாய். அதற்கு முன்னால் இருந்ததில் 89 கோடி ரூபாய் குறைந்துவிட்டது. 2004-2005-லே ரூ.523 கோடி. 2005-2006-லே....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல எங்கும் அது குறைக்கப்படவில்லை. அதற்கு விளக்கம் தருகிறேன். விவசாயத் துறையைப் பொறுத்தவரைக்கும் 2003-2004-லே ரூ.652.71 கோடி. அதேபோல Revised Estimate-லே ரூ.825.49 கோடி. தற்போது ரூ.854.41 கோடி என்று உயர்வு நிலையில்தான் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. நீங்கள் திட்ட மதிப்பீட்டையும், திருத்திய மதிப்பீட்டையும் பாருங்கள். இரண்டையும் கூட்டிக் கழித்துப் பாருங்கள். அப்படியே, அதிலே இருப்பதையே சொல்லக்கூடாது. மாறுபட்டுத்தானே வரும். அதிலே பார்த்தீர்கள் என்றால், 2006-லே 479 கோடி ரூபாய்.

அதேமாதிரி தொழில் துறைக்குப் பார்த்தீர்கள் என்றால், 2004-2005-லே ரூ.435.69 கோடி. இப்போது 2005-2006-லே ரூ.391.69 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையிலேயும் நிதி ஒதுக்கீடு என்பது குறைக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே, எப்படி நம்முடைய மாநிலம் வளர்ச்சி பெறமுடியும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவலையே தந்துகொண்டிருக்கிறார். Industries Department-ஐப் பொறுத்தவரைக்கும் 2003-2004-ல் ரூ.829.93 கோடி. உண்மைதான். அதேநேரத்தில் Revised Estimate-லே ரூ.399.01 கோடியும் உண்மைதான். தற்போது ரூ.128.90 கோடி என்பதும் உண்மைதான். காரணம் என்னவென்றால், இதற்கு முன்னால் TIDCO Bond வாங்கப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டு அதெல்லாம் தரப்பட்டு விட்டது. TIDCO Bond எல்லாம் தரப்பட்டு one time settlement-ஆக Sugarcane arrears-ம்

கொடுக்கப்பட்ட காரணத்தால் இந்த ஆண்டு அது கணக்கிலே வரவில்லை. இவையெல்லாம் அந்தந்தத் துறையினுடைய மானியத்தின்போது விளக்கப்படும்.

*பிற்பகல் 1-25*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பாருங்கள். இதிலே கொடுத்திருக்கிறது பாருங்கள். அதைத்தான் நான் சொல்கின்றேன். எல்லாம் சேர்த்துதான் நான் படிக்கின்றேன். எல்லாம் சேர்த்துதான் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி எல்லாத் துறைகளிலும் குறைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்கின்றேன்.

இன்றைக்கு முதன்மை தணிக்கைத் துறைத் தலைவர் சொல்லியிருக்கின்றார். அதில் நான் ஆழமாகப் போக விரும்பவில்லை. இதிலே பார்த்தீர்கள் என்றால், ஒதுக்கீடு, செலவினங்கள், திரும்பச் செலுத்தியது, நிறைய குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுகூட...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, அதற்குச் சொல்லவில்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கின்றேன். Municipal Administration and Water Supply Department- 2003-2004-ல் 1982.35 கோடி, அது Revised Estimate-ல் 1661.07 கோடி. தற்போது குறைந்தது 1490.14 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் குறைந்துவிட்டது என்று பொருளல்ல. காரணம், repayment support- இதற்கு முன்பு அரசே பணத்தை, நிதியை ஒதுக்கி, அந்த அமைப்புகள் Water Board-ஆக இருக்கலாம், Metro Water-ஆக இருக்கலாம், அந்த அமைப்புகள், அவர்கள் கட்ட வேண்டிய கடனை அரசே கட்டுகின்ற காரணத்தால் அது சேர்க்கப்பட்டு இருந்தது. தற்போது அந்த வாரியங்களிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து, அவர்கள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டுவதற்குப் பதிலாக அரசே நேரடியாக கட்டுகின்ற காரணத்தால் அந்தப் பணம் இதில் குறைக்கப்பட்டிருக்கின்றது. எனவேதான் அந்தத் துறை மானியத்தின்மீது நீங்கள் கேட்டால் அப்போது ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்ல முடியும். எல்லாவற்றுக்கும் விளக்கம் சொல்ல முடியும். எங்குமே, எதுவுமே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல குறைக்கப்படவில்லை. இதை நான் தெளிவுபடுத்த முடியும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கைத் துறைத் தலைவர் கூறியதைப் போல, இனி வரக்கூடிய காலங்களிலே



அந்த நிலைமைகளெல்லாம் தொடராமல் முழுமையாக, நாம் அறிக்கையிலே குறை சொல்லாத அளவிற்கு இருக்கும் என்று சொன்னால், இந்த மாநிலம் கட்டாயம் வளர்ச்சியை நோக்கிப் போகும். அந்த அளவில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் மாவட்டங்கள் என்று எடுத்துக்கொண்டால், மிகப் பெரிய ஏற்றத்தாழ்வுகள். எல்லா மாவட்டங்களிலேயும் ஒரே மாதிரியான நிலைமை இல்லை. அது என்ன காரணம் என்று சொன்னால், மாவட்டத்தினுடைய அளவினையும் பாருங்கள். அது பகுதியாக இருந்தாலும் சரி, மக்கள்தொகை அடிப்படையில் இருந்தாலும் சரி, தொகுதி அளவில் எண்ணிக்கையிலே பார்த்தாலும்கூட, 5 தொகுதி, 6 தொகுதி, 10 தொகுதி, 12 தொகுதி. பெரிய மாவட்டம், சிறிய மாவட்டம். இந்த ஏற்றத்தாழ்வு என்பது மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு ஒத்து வராது. ஆக, ஒரே சீரான, சமச்சீர் வளர்ச்சி பெறவேண்டுமென்று சொன்னால், மாவட்டத்தினுடைய எண்ணிக்கை, மாவட்டத்தினுடைய அளவு என்பது பகுதியாக இருந்தாலும், மக்கள்தொகை அடிப்படையில் சீராகப் பிரிக்கப்பட வேண்டும். இப்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 30 மாவட்டங்களாக இருப்பது 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என்ற அளவிலே வந்தால், 39 மாவட்டங்கள் இருந்தால் சீரான வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கல்வி அறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை, கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, 10, 12 வகுப்புகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம், பெண் கல்வி பெற்றோர் எண்ணிக்கை, மாணவர்களுடைய எடை அளவுகள், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு - அரசு, தனியார் துறைகளிலே, பெண்கள் வேலைவாய்ப்பு, குடிநீர்த் திட்டங்கள், வேளாண் உற்பத்தி, குடியிருப்புகளின் தன்மை, பொருளாதார நிலை, தனிநபர் வருமானம் இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் நிறைய மாவட்டங்கள் பின்தங்கிய நிலையிலே இருக்கின்றன. ஆகவே, இந்தப் பின்தங்கிய மாவட்டங்கள் ஓரளவுக்கு வளர்ச்சி பெறுவதற்கு, மற்ற மாவட்டங்களோடு சமச்சீர் வளர்ச்சி பெறுவதற்கு, ஒரு வல்லுநர் குழுவை நியமித்து, அந்த மாவட்டத்தினுடைய மேம்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், அடுத்தது பார்த்தீர்களென்றால் இன்றைய

சூழ்நிலையில், கல்விதான் இந்த நாட்டினுடைய உயிர் மூச்சுக் கொள்கை என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த காலங்களிலே, கடந்த ஆட்சி நேரத்திலேயும் சரி, இன்றும் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இந்தக் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய குளறுபடிகள் என்பது சொல்லி மாளாது. அவ்வளவு குளறுபடிகள் இருக்கின்றன. எந்த வகையிலே என்று சொன்னால், அது ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை. நீங்கள் நியமனம் செய்துகொண்டிருக்கின்றீர்கள். அதை நான் குறை சொல்லவில்லை. இருந்தாலும்கூட, அந்த நியமனம் என்பது போதாது. 2001-லே சொன்னீர்கள். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் நியமிப்போம் என்று சொன்னீர்கள். இன்றைக்கு ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இல்லை. 5 ஆம் வகுப்பு வரையில் இரண்டு ஆசிரியர்கள். இப்படி இருக்கின்றார்கள். ஓராசிரியர் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆக, இவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு இப்பொழுது ஆசிரியர்கள் நியமனத்திற்கு ஒதுக்கீடு என்பதில் இந்த இலக்கு போதாது. இன்னும் கூடுதல் ஆசிரியர்களை நீங்கள் கட்டாயம் நியமிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. இந்தக் கல்வியில் உயர் கல்வியை எடுத்துக்கொண்டால், இன்று இருக்கக்கூடிய குழப்பங்கள் என்பது, பெரிய அளவில் இருக்கிறது. என்ன வகையில் குழப்பம் என்று சொன்னால், இன்று பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதுகிறார்கள். இதை முடித்துவிட்டு, நுழைவுத் தேர்வு. உயர் கல்விக்காக, தொழில் கல்விக்கு நுழைவுத் தேர்வு. இந்த நுழைவுத் தேர்வில் கடந்த ஆண்டு என்ன நடந்தது என்று சொன்னால், அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய தேர்வில் 22 தவறான வினாக்கள். அது ஒரு குளறுபடி. அப்புறம் மதிப்புக் கூட்டல்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. ஜி.கே. மணி:** 20 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாலையில் பேசுங்கள். பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாலையில் இந்த அவையை வைத்துக்கொள்வதானால், B.A.C-ல் decide பண்ண வேண்டும். அல்லது எங்களிடம் கேட்டிருக்க வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அன்றைக்கே பேசியிருக்கிறோம்.

பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. துரைமுருகன், தேவைப்பட்டால் மாலையிலே வைத்துக்கொள்ளலாம் என்றுதான்.. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாலையில் வேண்டாம் என்று சொன்னோமே தவிர, மாலையிலே வைப்பதில்லை. மாலையிலே வைப்பதை யாருமே ஒத்துக்கொள்ளவில்லை. மாலை என்பதே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தேவைப்பட்டால் மாலையிலே வைத்துக்கொள்ளலாம். ஒரு நாள், இரண்டு நாட்கள் என்று சொன்னோம்.

**திரு. துரைமுருகன்:** இனிமேல் இவ்வாறு நடக்குமென்றால் அந்த B.A.C.-யில் Business Advisory Committee-யில் எழுதிக் கையெழுத்து வாங்க வேண்டும். சொல்வதைத் தான் சொல்ல முடியும். நாங்கள் உங்களை நம்பித்தான் அங்கே அப்படி கையெழுத்து போட்டுவிட்டு வந்துவிடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** ஆனால், நீங்கள் அதை மாற்றி எழுதினால் எப்படி? நாங்கள் என்ன செய்வது? இப்போது கூட அது ஒன்றும் பெரிதல்ல. ஆனால், கேட்கவில்லை என்றால் எப்படி? மாலையிலே 4-30 மணிக்கு வைத்துக்கொள்கிறோம் என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தின் தன்மையைப் பொறுத்து, தேவைப்பட்டால், பிற்பகலில் பேரவைக் கூட்டத்தை நடத்தலாம்.

**திரு. துரைமுருகன்:** அந்த மாதிரிதானே எழுதியிருக்கிறீர்கள், சார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறு, தவறு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் இரண்டு நாட்கள் கேட்டோம், ஒரு சில மானியக் கோரிக்கைகளில் இரண்டு நாட்கள் கேட்டபோது, தேவைப்பட்டால் மாலையிலே வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்களே தவிர, பொது விவாதம் நடக்கும்போது அப்படியே அதை மாலையிலே வைத்துக்கொள்ளலாம் என்று பேசவும் இல்லை, ஒப்புக்கொள்ளப்படவும் இல்லை. அதுமட்டுமல்ல. நாளை பேசுவது என்பது இன்றையதினம் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இன்று தான் பேசியாக வேண்டும் என்று சொன்னார். நான் ஒப்புக்கொண்டேன். ஆனால், இன்று பேச முடியாத நிலை வந்த பிறகும் இன்று மாலையேதான் பேசியாக வேண்டும் என்று சொல்வது எதிர்க் கட்சிகளுக்கு வாய்ப் பூட்டு போடுவதைப் போல இருக்கிறது. நிச்சயமாக இதை ஏற்றுக்கொள்ள முடியாது, ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எங்களுடைய சம்மதம் இல்லாமல், எங்களைக் கேட்காமல் நீங்கள் எப்படி மாலையிலே வைக்கலாம்? மாலையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு தி.மு.க. தரப்பிலே பேச வேண்டும். கடைசி நாள் நிதித் துறை அமைச்சர் பதில் சொல்கிறபோது, தி.மு.க.வின் சார்பாக ஒரு உறுப்பினர் பேசி, தி.மு.க.வின் சார்பாக தி.மு.க. தலைவரோ, எதிர்க் கட்சித் தலைவரோ பேசி, அதற்கப்புறம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது என்பது அன்றைக்கு முடிவு செய்யப்பட்டது. மற்ற நிகழ்ச்சிகள் முழுவதும் முதல் நாள் முடித்துக்கொள்வது என்றுதான் முடிவு செய்யப்பட்டது. தேவைப்பட்டால் மாலையிலேயும் வைத்துக்கொள்ளலாம் என்றுதான் நாம் சொன்னோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்பட்டால் மாலையிலே வைத்துக்கொள்ளலாம் என்றுதான் அன்று முடிவு செய்யப்பட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தி.மு.க. மட்டும்தான் அடுத்த நாள் பேச முடியும் என்று நீங்கள் சொல்வது சரியல்ல. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் இரண்டு இருக்குமேயானால், ஒரு பிரதான எதிர்க் கட்சி, இன்னொரு கட்சி என்கிற அந்தஸ்து பெற்ற இன்னொரு கட்சி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதை அன்றைக்கே பேசிவிட்டோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், மாலையிலே பேசுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஏனென்றால் பிடிவாதமாக இன்றே பேசியாக வேண்டும் என்று அவர் சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அப்படிச் சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்றுதான் நடக்கும் என்று சொன்னால் நான் இந்த விவாதத்திலே கலந்துகொள்ளவில்லை. இதை வாய்ப் பூட்டு என்று நான் கருதுகிறேன். நான் நிச்சயமாக இன்றையதினம் மாலையிலே பேச மாட்டேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் தலைவர் இந்த விவாதத்திலே கலந்துகொள்ளவில்லை என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அவருடைய உரிமை, தன்னுடைய பேச்சுரிமை பறிக்கப்படுகிறது என்ற காரணத்தால் அவர் கூறியிருக்கிறார். எனவே, என்னுடைய அன்பான வேண்டுகோள், நாளை காலை வேண்டுமானால், காலையிலே காங்கிரஸ் கட்சித் தலைவரும், நம்முடைய பிரதான எதிர்க் கட்சியிலே ஒருவரும் பேசி முடித்தபிறகு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கலாம் என்ற என்னுடைய வேண்டுகோளைச் சொல்கிறேன். திரு. மணி அவர்களுக்குக்கூடச் சொல்கிறேன். மாலையிலே வைத்துக்கொள்வது என்பது முடியாது. வேண்டுமானால் இன்னும் 10 நிமிஷம் பேசி முடிக்கட்டும். அவர் முடித்துவிடட்டும். நாளைக்கு இரண்டு பேரும் பேசி முடித்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அன்றைக்குப் பேசியது, கடைசி நாளில் தி.மு.க.வின் சார்பாகவும் பேசலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது கடைசி நாள் அல்லவே. கடைசி நாள்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்கள் தற்போது 20 நிமிடங்கள் வேண்டுமென்று கேட்டார். தற்போதே பேசலாம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் நாளையே பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசுங்கள். பேசி
முடித்துவிடுங்கள். திரு. மணி, என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து நம்முடைய தமிழக அரசினுடைய
கல்விக் கொள்கையிலே வரலாறு காணாத அளவுக்கு குளறுபடிகளும்,
குறைகளும், கோளாறுகளும் நிறைந்திருக்கின்றன. இப்போது இதைச்
சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், 12 ஆம் வகுப்பினுடைய தேர்வை
இப்போது குழந்தைகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இது முடிந்தபிறகு,
நுழைவுத் தேர்வு எழுதப் போகிறார்கள். இதிலே அண்ணா
பல்கலைக்கழகத்தில் ஏற்கெனவே நுழைவுத் தேர்விலே மிகப் பெரிய
பிரச்சினை. அப்புறம் மதிப்புக் கூட்டல், மறு தேர்வு - அதாவது Improvement
Exam என்று சொல்கிறார்கள். அதிலே சம வாய்ப்பு இல்லையென்று
மாணவர்கள் எல்லாம் போய் வழக்குத் தொடர்ந்தார்கள். அது ஒரு
பக்கம், வழக்கு. அப்புறம் நிர்வாக இட ஒதுக்கீட்டுக்கான சுப்பிரமணியம்
கமிட்டி. அதிலே குளறுபடி. கட்டண நிர்ணயத்திற்காக நியமனம்
செய்யப்பட்ட இராமன் கமிட்டி, அதில் காற்றில் பறந்த அவல நிலை.
பிறகு சரிபாதி இடங்களை நிர்வாக ஒதுக்கீட்டிற்குப் பிரித்துக் கொடுத்து,
அதிலே இட ஒதுக்கீட்டைப் பின்பற்றாமல் அதிலே இருக்கிற குளறுபடி.
அதற்குப் பிறகு நுழைவுத் தேர்வு எழுதுவதிலே மாணவ,
மாணவிகளிடத்திலே எத்தனை நுழைவுத் தேர்வுகள்?
அரசாங்கத்தினுடைய நுழைவுத் தேர்வு, தனியார் கல்லூரிகளுடைய
நுழைவுத் தேர்வு, பிறகு நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திலே ஒரு நுழைவுத்
தேர்வு, என இப்படி இருக்கிற குளறுபடிகள். இத்தனைக்கும் மேலே
அதாவது அண்ணா பல்கலைக்கழகத்திலே 12 ஆயிரம் இடங்களுக்காக.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சட்டசபை ஒரு holiday
mood-க்கு வந்துவிட்டது. திரு. மணி பேசுவதைக் கவனியுங்கள்.
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழக அரசாங்கம் கல்வித் துறையிலே பல்வேறு
கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறது, குழப்பங்கள் இருக்கின்றன என்று
சொல்கிறார். அரசாங்கத்திலே எந்தக் குழப்பமும் இல்லை. கொள்கையில்
தெளிவாக இருக்கிறோம். மேல்நிலைக் கல்வி முடித்து பொறியியல்
கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் சேருகின்ற மாணவர்கள்



இதுவரை அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய நுழைவுத் தேர்வு மூலம்
தேர்வு செய்யப்பட்டார்கள். ஆனால், உச்ச நீதிமன்றத்திலே இங்கு
இருக்கிற தனியார் பொறியியல் கல்லூரிகளும், தனியார் மருத்துவக்
கல்லூரிகளும் தங்களுடைய சுய இலாபத்திற்காக—ஏதாவது ஒரு
வழக்கை—பல்வேறு வழக்குகளைப் போட்டதன் காரணமாக உச்ச
நீதிமன்றம் T.M.A. Pai case -லே ஒரு - Constitution Bench case-லே ஒரு
வழக்கிலே தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின்
அடிப்படையிலே மீண்டும் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. Islamic Academy
case-லே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் அடிப்படையிலேதான் அந்த
சுப்பிரமணியம் கமிட்டி, இராமன் கமிட்டி அமைக்கப்பட்டதே தவிர,
தமிழக அரசாங்கம் தனியாக சுப்பிரமணியம் கமிட்டியையோ, இராமன்
கமிட்டியையோ அமைக்கவில்லை. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்
அடிப்படையிலேயே இந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு அந்தக்
கமிட்டியின் மூலமாகத்தான்—அந்தக் கமிட்டி என்ன சொல்கிறதோ
அதன்படிதான்—மாணவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும், கல்விக்
கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தினுடைய
தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்த மாணவர்கள்
சேர்க்கப்படுகின்றார்களே தவிர, தமிழக அரசாங்கத்தினுடைய குழப்பம்
அல்ல. இந்த ஆண்டு மீண்டும் தனியார் பொறியியல் கல்லூரிகளும்,
மருத்துவக் கல்லூரிகளும் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்குத்
தொடுத்திருக்கிறார்கள். அதன்படி அந்த 11 Members கொண்ட
Constitution Bench-க்கு மீண்டும் ஒரு விளக்கத் தீர்ப்பு அளிப்பதற்கு
இப்போது அந்த நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
அந்தத் தீர்ப்பை மிக விரைவிலே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
அந்தத் தீர்ப்பு வந்தவுடனே மிகத் தெளிவாக இந்த அரசாங்கம் ஒரு
கொள்கையை அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் நீதிமன்றப் பிரச்சினையைச் சொல்கிறார்கள். இது
தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல. இந்தியாவிலே இருக்கிற எல்லா
மாநிலங்களுக்கும்தான். ஆனால், பக்கத்திலே இருக்கிற கர்நாடக
மாநிலத்திலே, மகாராஷ்டிரா மாநிலத்திலே எல்லாம் பார்த்தீர்கள் என்று
சொன்னால், கமிட்டி நியமனம் செய்தார்கள், கட்டணம் என்பது மிகக்
குறைவு. பொறியியல் படிப்பிற்கு கர்நாடகத்திலே வெறும் 10 ஆயிரம்
ரூபாய். இங்கே 30 ஆயிரம், 33 ஆயிரம் ரூபாய். இதற்கு எல்லாம் யார்
காரணம்? நாம் நீதிமன்றத்தையே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே கட்டணங்களை நிர்ணயிக்கிற உரிமை அரசாங்கத்திற்கு இல்லை என்று மிகத் தெளிவாக உச்ச நீதிமன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இராமன் கமிட்டி என்ற ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, அந்தக் கமிட்டி பரிந்துரைக்கின்ற கட்டணத்தைத்தான் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இராமன் கமிட்டி நியமிக்கப்பட்டபோதுகூட, எந்தத் தனியார் பொறியியல் கல்லூரிகளும், அந்த இராமன் கமிட்டி முன்பு சென்று எங்கள் கல்லூரிக்கு இந்தக் கட்டணத்தை நீங்கள் நிர்ணயிக்க வேண்டும் என்று யாருமே கேட்கவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் எந்தக் குழப்பமும் இல்லை என்று சொல்கிறார்கள். இன்றைய குழப்பத்திற்குக் காரணம், உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கைத் தொடுத்திருக்கிறவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களும், ஆந்திராவைச் சேர்ந்தவர்களும்தான் அந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, T.M.A. Pai வழக்குத் தொடந்தார். மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அவர்கள் சட்டமன்றத்திலே ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்து இதைப் பாதுகாத்திருக்கிறார்கள். சட்டபூர்வமான பாதுகாப்பு அங்கே வழங்கப்பட்டிருக்கிறது. ஏன் நீங்கள் பாதுகாப்பு வழங்கவில்லை? அப்போது தனியார் கல்லூரி நிறுவனங்களுக்கு நீங்கள் ஏன் ஒத்துழைக்கிறீர்கள்? அது கூடாது.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். பொத்தாம்பொதுவாக சொல்லக்கூடாது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறி ஒரு மாநில அரசு என்ன பாதுகாப்பை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றி இருக்கிறது என்று தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தயவுசெய்து மாமன்ற உறுப்பினர்கள் ..(குறுக்கீடு) உச்ச நீதிமன்றத் தீர்ப்பு — நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள் — உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. தீர்ப்பிலே தனியார் நிறுவனங்களிலே இருக்கக்கூடிய, அந்த நிறுவனங்களுடைய நிர்ணயத்திலே அரசு தலையிடக்கூடாது என்று ஒரு தீர்ப்பு இருக்கிறது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு அக்கறை செலுத்தவில்லை. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இன்னும் தீவிரமாக அக்கறை செலுத்தி மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல கட்டணத்தைக் குறைப்பது, நல்ல கமிட்டி அமைப்பது என்பதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

நம் முதலமைச்சர் அவர்கள்கூட இதற்கு முன்னாலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரி எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது, எல்லாருக்கும் தெரியும். அவர்கள் ரொம்ப நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டப்பட வேண்டியது. அதிலே எந்தக் குற்றச்சாட்டும் நான் சொல்ல விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்கள் 5-9-1991 ஆசிரியர் தின விழாவிலே பேசியிருக்கின்ற அந்தப் பேச்சை அப்படியே நான் இங்கே சொல்கிறேன். "கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இருந்த காலம் மாறி, இப்பொழுது சமுதாய மாற்றத்திற்கு உதவும் மாபெரும் சக்தியாக விளங்கி வருகிறது. கல்விதான் எத்தனையோ நாடுகளில் பெண்களின் அடிமைத் தனத்தை ஒழிக்கும் ஆயுதமாகச் செயல்பட்டிருக்கிறது. வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த பெண்களையும், அடுப்பறைக்குள்ளேயே உழன்றுகொண்டிருந்த மகளிரையும் கல்விதான் உலக அளவில் புகழ்பெற வைத்துள்ளது. மேலும், மற்ற நாட்டவர்கள் விரும்பி, அழைத்து மரியாதை தருகிற பட்டியலில் முதலிடம் வகிப்பது அறிவார்ந்த கல்வியே ஆகும். ஓர் அரசுக்கு அதனுடைய கல்விக் கொள்கையே உயிர்க் கொள்கை" என்று இந்தக் கல்வியினுடைய பெருமைகளையெல்லாம் சொல்லி அதன்பிறகு சொல்கிறார்கள், "தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளிலும், கல்வி நிலையங்களிலும் நமது தாய் மொழியான தமிழ் கற்பிக்கப்படாத ஒரு சூழ்நிலை உருவாகிவிடுமோ என்கிற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது." - இது நாங்கள் சொல்லவில்லை, முதலமைச்சர் சொன்னது. - "ஆங்கில மொழியின் ஆதிக்கத்தால் தமிழில் கல்வி கற்பதை தவிர்த்துவிடலாம் என்கிற எண்ணம் எவருக்காவது இருந்தால் அவர்கள் தயவுசெய்து தங்களது எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி நிர்வாகத்திலும் அன்னைத் தமிழ் மொழியை, அரியாசனத்தில் அமர்த்[illegible] அரசுகளைக் காட்டிலும் முனைப்பாகச் செயல்படும் என்பதை இப்பொழுது வலியுறுத்திக் கூறுகிறேன்". இப்படிப் பேசியிருப்பவர் முதலமைச்சர்தான். அதற்காக உங்களை நான் பாராட்டுகிறேன். நாங்கள்

வரவேற்கிறோம். இருந்தாலும்கூட இந்த நிலைமை இன்று நடைமுறையிலேயில்லை. நடைமுறையிலே இல்லையென்று சொல்வதற்குக் காரணம், உதாரணத்திற்கு தமிழ்நாட்டிலே ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதாவது matriculation பள்ளி. இந்தப் பள்ளிக்கூடங்களிலே, தமிழ் பாடம், ஒரு பாடம்கூட படிக்காமல், பட்டப்படிப்பு முடித்து, பட்டத்தை முடித்து வெளியேறுகிறார்கள். இது தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகிற அளவிற்கு அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் மொழியை-தாய் மொழியை கட்டாயம் படிக்க வேண்டுமென்பதை ஒரு புதிய அணுகுமுறையில்தான் அறிவியல் தமிழ் பாடத்தைக் கொண்டுவந்து அது கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறது. கட்டாயமாக ஒவ்வொரு பள்ளியிலும் அறிவியல் தமிழைப் படிக்க வேண்டும். அதன் மூலமாக தமிழ் கற்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது இந்த அரசு.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்களிலே, matriculation பள்ளிகளிலேயிருக்கிறது? பெரும்பாலான பள்ளிகளிலே இல்லவே இல்லை. இன்னும் நான் வேதனையோடு சொல்கிறேன், கணக்கு வேண்டுமானால் பட்டியல் இருக்கிறது தருகிறேன். தென் மாவட்டங்களிலே, சென்னை மாநகரத்திலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களிலே பள்ளி வளாகத்திலே குழந்தைகள் தமிழில் பேசினால் அபராதம். பெற்றோர்கள் வந்து வளாகத்தில் குழந்தைகளிடத்திலே தமிழில் பேசினால் அபராதம். இப்படிப்பட்ட நிலை இருந்துகொண்டிருக்கிறது. உங்களை நான் குற்றச்சாட்டு சொல்லவில்லை. இது தவிர்க்கப்பட வேண்டுமா, வேண்டாமா? இதற்கு யார் காரணம்? அரசாங்கம்தானே காரணம். ஆகவே, உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இதிலே நீங்கள் தீவிர அக்கறை செலுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும், ஆங்கிலப் பள்ளிகள் ஆகட்டும், matriculation பள்ளிகள் ஆகட்டும், Central-C.B.S.E. அனைத்துப் பள்ளிகளிலுமே அறிவியல் தமிழ் கண்டிப்பாக கற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, அந்த அறிவியல் தமிழ்ப் புத்தகம் இலவசமாக அத்தனை மாணவர்களுக்கும்



கொடுக்கப்படுகின்றன. கடந்த ஆண்டும் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டும் கிட்டதட்ட 1,00,46,000 இலவச புத்தகங்கள்-அறிவியல் தமிழ்ப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. மொத்த 470 கோடி ரூபாயிலே இலவசமாக அறிவியல் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கு தமிழக அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப அதையே சொல்கின்றேன். நீங்கள் ஆய்வு பண்ணுங்கள். நான் பட்டியல் வேண்டுமானால் தருகின்றேன் உங்களுக்கு. பள்ளிக்கூடங்களிலே-ஆங்கில வழிப் பள்ளிக்கூடத்திலே அந்த நிலைமையில்லை. அங்கே படிக்கவே கூடாது என்பது மட்டுமல்ல, தமிழ் பேசவே கூடாது என்று சொல்கிறார்கள். அது தொடரக்கூடாது என்பதுதான். ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே உங்க்ளை நான் வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்வது, நாம் எல்லோரும் தாய் வளர்த்து நாம் வளர்ந்தோம். தமிழ் வளர்த்து நாம் வாழ்வோம் என்ற அந்தக் கூற்றுக்கு இணங்க இப்பொழுது தமிழ், பயிற்று மொழியாக்கப்பட வேண்டும். தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்...

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு சார்பிலே நடத்தப்படுகின்ற Central School-களிலே தமிழ் மொழியே இல்லாத பள்ளிகள் இருக்கின்றன. எங்களது மதுரையில்கூட அப்படி மத்திய அரசு நடத்துகின்ற ஒரு பள்ளி இருக்கிறது. அதில் தமிழ் மொழியில்லை. மத்திய அரசிலே பங்குகொண்டிருக்கின்ற சகோதரர் மணி அவர்கள் அந்தப் பள்ளிகளுக்கும் தமிழ் மொழி வரவேண்டும், தமிழ்ப் பாடம் வரவேண்டுமென்பதை வலியுறுத்துவார்களா என்பதை....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) திரு. மணி பதில் சொல்லட்டும்.

பிற்பகல் 1-45

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அறிவியல் தமிழ் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு தாய்த் தமிழ் மொழியை முற்றிலுமாக தமிழகத்திலிருந்து எடுத்துவிட்டீர்கள். தாய் மொழி தமிழுக்கு மரியாதை இல்லாமல் போய்விட்டது தமிழ்நாட்டில். இது போல், மத்திய அரசிலே நடக்கிறதென்றால் மாநில அரசு இதைக் கட்டாயப்படுத்துங்கள். உங்களுக்கு என்ன வேலை?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியை ஆங்கில வழிப் பள்ளிகளிலும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற உத்தரவைச் சொல்கிறபோது, சில கல்வி நிறுவனங்கள் உயர் நீதிமன்றத்திலே சென்று தடையாணைகளைப் பெற்று, உத்தரவைப் பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் சொன்னது, மத்திய நிர்வாகத்திற்குட்பட்ட கேந்திரிய வித்யாலயா பள்ளிகளிலே. அந்தப் பள்ளிகளிலே தமிழ் போதிக்கப்படுவதில்லை; அதற்கு நீங்கள் மத்திய அரசிலே என்ன செய்திருக்கின்றீர்கள் என்று கேட்கிறார்களேயொழிய, தவறாக ஒன்றும் கேட்கவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு விளக்கம் நாங்கள் நிறைய சொல்லிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசிடமும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் ஐந்து வகையான பாடத் திட்டங்கள் இருக்கின்றன. அந்தப் பாடத் திட்டங்கள் எல்லாம் மாற்றப்பட வேண்டும். ஒரே பாடத் திட்டமாக இருக்க வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் ஒரே தரமான, சீரான கல்வி கிடைக்கும். மத்திய அரசாங்கத்திடம் நாங்கள் கேட்கிறோம், நீங்கள் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசாங்கத்திடம் கேட்கலாம்தானே? நாங்கள் ஒரு சாதாரண கட்சி, கூட்டணியிலே இருக்கிறோம், நாங்கள் கேட்கிறோம். பொறுப்பு யாருக்கு? எங்களைவிட உங்களுக்குத்தான் அதிகமாக இருக்கிறது. நடைமுறைப்படுத்த வேண்டியது நீங்கள்தான். நீங்கள்தானே அதைச் செய்ய வேண்டும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஏதாவது பேசினால், மத்திய அரசைக் குற்றஞ்சாட்டி, பங்கு பெற்றிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள், அது மிகவும் வருத்தமாக இருக்கிறது. இன்னும் வேதனையாகச் சொல்கிறேன். தமிழைப் பற்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று சொன்னால், நீங்கள் கொச்சைப்படுத்துகிறீர்கள். எனக்கு ஏன் என்று தெரியவில்லை. நாம் எல்லோரும் தமிழர்கள். நாங்கள்கூட சொல்கிறோம். தாய் வளர்த்துதான் நாம் வளர்ந்தோம். அப்போது அந்தத் தாய் மொழி படிக்க வேண்டாமா? ஆகவே, தமிழ் வளர்த்து நாம் வாழ்வோம் என்ற அந்த நிலைக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறோம். இன்னும் பாருங்கள்.



பயிற்று மொழி தமிழாக இருக்க வேண்டும், ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டும். இன்னும் கோயில்களிலே அர்ச்சனை மொழி தமிழாக இருக்க வேண்டும். திருமணக் கூடங்களிலேகூட தமிழ் இருக்க வேண்டும். நீதிமன்றங்களிலே தமிழ் இருக்க வேண்டும். விளம்பரப் பலகைகளிலே, விலைப் பட்டியலிலே, அந்த இடங்களிலே தமிழ் இருக்க வேண்டும். இப்படி இதற்குக்கூட, விளம்பரப் பலகைக்கு, அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அரசாணை போடப்பட்டது, நடைமுறைப்படுத்தப்படவில்லை. (குறுக்கீடு) எல்லாவற்றையும் சொல்கிறோம். நாங்கள்கூட போட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், வானொலி, தொலைக்காட்சிகளிலே சுத்த தமிழ் வர வேண்டும். திரைப்படங்களிலே தமிழ்ப் பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இப்படி தமிழ்ப் பண்பாட்டு சீரழிவுகள் போக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம். இப்படி தொடர்ந்து இந்த நிலைகளிலே தமிழை முன்நடத்திச் செல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று. இன்றைக்கு உயர் நீதிமன்றம். இது, Madras State என்று இருந்தது, 'தமிழ்நாடு' என்று மாற்றப்பட்டிருக்கிறது. 'Madras' என்பது 'Chennai'-யாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கிற, தலைநகர் சென்னையிலே இருக்கின்ற உயர் நீதிமன்றத்திற்கு இன்னும் Madras High Court என்றுதான் இருக்கிறது. அதை சென்னை உயர் நீதிமன்றம் என்று சொன்னால் எவ்வளவு பெருமையாக இருக்கும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இதற்கு ஏதாவது பதில் இருக்கிறதா சொல்வதற்கு? ஏனென்றால் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அப்படியொரு பாரம்பரியமான பெயர், இந்த Madras Medical College, Madras High Court என்பதெல்லாம் பாரம்பரியமான பெயர், அது இருக்க வேண்டுமென்று சொன்னதாக எனக்கு ஒரு நினைவு. திரு. மணி அவர்கள் அதைக் கொஞ்சம்...

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் மாற்றம் செய்வதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பார்த்தீர்களானால், கீழ் நீதிமன்றங்களிலே எல்லாம் தமிழில் இருக்கலாம் என்று உத்தரவு இருக்கிறது. ஆனால், நடைமுறையில் இல்லை. அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், சென்னை உயர்

நீதிமன்றத்திலேயும், மதுரை உயர் நீதிமன்றக் கிளையிலும் தமிழில் வாதாடுவதற்கு, தீர்ப்பு அளிப்பதற்கு, நடவடிக்கைகள் எல்லாம் தமிழிலே இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. என்ன செய்யலாம் என்று சொன்னால், இதிலே அரசியல்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திற்குட்பட்ட கீழ்மை நீதிமன்றங்கள், Subordinate Courts அனைத்திலும் தமிழில் வாதாடலாம் என்கிற ஒரு நிலை இப்போதும் இருக்கிறது. தாராளமாக நீங்கள் வாதிடலாம். ஆனால், சென்னை உயர் நீதிமன்றம், Madurai High Court கிளையில், அங்கே தமிழில் வாதாட வேண்டுமென்றால், அதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் பெறப்பட வேண்டும். உயர் நீதிமன்றத்தினுடைய purview-லேதான் அது வருகின்றது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டப்படி, உயர் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய நீதிபதிகள் எல்லாம் மற்ற மாநிலங்களிலிருந்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அவர்களை இடமாற்றம் செய்கிறார்கள். ஆகவே, அரசமைப்புச் சட்டத்திலே அத்தனை உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலத்திலே பேசலாம் என்று இருக்கிறது. ஆகவே, தமிழிலே பேசலாம் என்று நீங்கள் சொல்வது நடைமுறைக்கு ஒத்துவராத விஷயம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-50*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலைமையே இல்லை. நான் அதற்கு ஒரு விளக்கம் சொல்கிறேன். அரசமைப்பு சட்டம் 348 (1) பிரிவு அ-வின்படி உயர் நீதிமன்ற மொழி ஆங்கிலத்திலே இருக்கலாம். இது சட்டம். அடுத்து, 348 பிரிவு (2)-ன் படி ஆளுநருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. ஆளுநர் குடியரசுத் தலைவருடைய முன் அனுமதியைப் பெற்று அந்த நீதிமன்றங்களிலே, அந்த மாநிலத்தினுடைய மொழியைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற அந்தச் சட்டப் பிரிவின் அடிப்படையிலே 5-9-1969-லே உத்தரப் பிரதேச மாநிலத்தினுடைய ஆளுநர் அலகாபாத் நீதிமன்றத்திலே, அந்த மாநிலத்தினுடைய மொழியைக் கொண்டு வந்திருக்கிறார். இன்னும் மேற்கு வங்காளத்தில் அங்கே வங்காள மொழி கொண்டுவரப்பட்டிருக்கிறது. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலே அந்த மாநிலத்தினுடைய மொழி கொண்டுவரப்பட்டு



இருக்கிறது. இங்கே நாம்கூட இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி, நம்முடைய ஆளுநர் அவர்களின் ஒப்புதலோடு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தால், குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று உடனடியாக இங்கே கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இது ஒன்றும் சட்டத் திருத்தமே இல்லை. இது சட்ட விதிகளிலே சொல்லப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) இருக்கிறது. சொல்லியிருக்கிறது. சட்ட விதிகளை நீங்கள் படித்துப் பாருங்கள். . .

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, suo motu-வாக அதாவது, தன்னிச்சையாக அரசு இந்த முடிவை எடுக்க முடியாது. உயர் நீதிமன்றத்தினுடைய கருத்தைப் பெற்றுதான் அந்த முடிவை எடுக்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்தை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பலாம். உயர் நீதிமன்றம் அந்தக் கருத்தை ஒப்புகின்ற அடிப்படையிலே, மாறுபட்ட கருத்து இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, அதை நீங்கள் பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல அரசுப் பணியாளர்கள். ரொம்பவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், அகவிலைப் படியில் 50 சதவிகிதத்தை அடிப்படைச் சம்பளத்திலே சேர்க்க வேண்டுமென்பது அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை. அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது, அகவிலைப்படியை காலம் தாழ்த்தித்தான் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். வரவேற்கிறேன். இனியாவது அதைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியத்தினுடைய வரம்பு 33 ஆண்டுகள். அதை பழைய மாதிரி 30 ஆண்டுகளாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நாம் நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம். மீண்ட பிறகும் கூட தொகுப்பூதியத்தின் அடிப்படையிலே நியமித்துக்கொண்டு இருக்கிறோம், ஆசிரியர்கள், மருத்துவர்கள், மற்ற பணியாளர்களை எல்லாம். ஆகவே, இனி தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையிலே இல்லாமல் தகுதி அடிப்படையிலே அந்த முழுச் சம்பளம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். இதுவரையிலே நியமித்தவர்களுக்கு முழு ஊதியம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவில் சமையலர்கள், உதவியாளர்கள், அவர்களுக்கெல்லாம்கூட கூடுதலாக சம்பளம் வழங்கியிருக்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். உங்களைப் பாராட்டுகிறோம். நன்றி சொல்கிறோம். அதைப்போல சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் அவர்களுக்கு அந்த ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் பணியாளர்கள் பிரச்சினை, தயவுசெய்து அதில் கௌரவம் பார்க்க வேண்டாம். அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு அளிக்க வேண்டும். அதைப்போல மக்கள் நலப் பணியாளர்கள். அவர்களையும் நீங்கள் மீண்டும் பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள். நமது ஹேமச்சந்திரன் அவர்கள் தெளிவாகப் பேசினார். நான் அதில் ஆழமாகப் போக விரும்பவில்லை. இருந்தாலும் இந்த நாட்டின் தொழிலாளர்களை நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இட ஒதுக்கீடு, மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இன்றைக்கு இட ஒதுக்கீடு எல்லாத் துறைகளிலும் நீர்த்துப் போய்க்கொண்டிருக்கிற ஒரு நிலைமை வந்து கொண்டிருக்கிறது. இன்னும் பார்த்தீர்கள் என்றால், பதிவுத் துறையிலே, நெடுஞ்சாலைத் துறையிலே, தமிழ்நாடு அரசுப் பணித் துறைகளிலே - 4 துறைகளிலே பதவி உயர்விலே, இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வந்தது. அதெல்லாம் இப்போது நீர்த்துப் போய்க்கொண்டிருக்கிறது. அதை மீண்டும் பின்பற்ற வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இருக்கிற 30 சதவிகித இட ஒதுக்கீட்டு நடைமுறையிலே குழப்பம் இருக்கிறது. உதாரணத்திற்கு 92 ஜாதிகள்; அதிலே குறிப்பிட்ட ஜாதிகள், இந்த 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டில் - 30 பணி நியமனம் என்று சொன்னால் 4 ஜாதிகள், 5 ஜாதிகள்தான் பயன்பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மற்ற ஜாதிகள் பயன் பெறமுடியாமல் போய்விடுகிறது. அது எந்த ஜாதியாக இருந்தாலும்கூட. இந்த 30 சதவிகிதத்தை ஒரே இடத்தில் குத்தகையாக வைத்துக்கொள்ளாமல் அதைத் தொகுப்பு இட ஒதுக்கீடாக மாற்றிக்கொடுக்க வேண்டும். அப்போதுதான் எல்லாச் சமுதாயத்திற்கும் சரியாகப் போய்ச் சேரும். மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் அதேமாதிரி வழங்க வேண்டும். தமிழ்நாடுதான், சமூக நீதியின் பிறப்பிடம். இந்த மண்ணிலே, அப்படிப்பட்ட குளறுபடி இருக்கக்கூடாது. கர்நாடகாவிலே, கேரளாவிலே பார்த்தால் மிகத் தெளிவாக இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே இந்த தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையை விகிதாச்சார அடிப்படையிலே கொண்டுவருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.



அதுதான் எல்லாச் சமுதாயத்திற்கும் வழி வகுக்கும். அதுதான் எல்லாச் சமுதாயச் சங்கங்களுடைய கோரிக்கையும் ஆகும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு எல்லாம் உலக மயம், தனியார் மயம், தாராள மயம் என்று போய்க்கொண்டு இருக்கிறது. அரசுப் பணியே இல்லாமல் இருக்கிறது. அப்போது தனியார் துறையிலே இட ஒதுக்கீடு என்பது காலத்தின் கட்டாயம். அந்த அடிப்படையிலே மகாராஷ்டிராவில் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் குறைந்தபட்ச பொதுச் செயல்திட்டத்தில் சேர்த்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், சமூக நீதியின் பிறப்பிடமான தமிழ் மண்ணிலே, நீங்கள் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டிற்கு, தமிழக அரசாங்கத்தினுடைய நிலைப்பாடு என்ன? நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டு இருக்கிறோம். அரசாங்கம் பதிலே சொல்வதில்லை. ஆகவே, உங்களுடைய கொள்கை முடிவு என்ன என்பதை நீங்கள் தயவுசெய்து அறிவிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

பிறகு, பணி நியமனத்திற்குத் தடை. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ரொம்பப் பெருகிப் போய்விட்டது. நீங்களே புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, அந்த நியமனத் தடையை கட்டாயம் திரும்பப் பெறவேண்டும். எல்லாத் துறைகளிலும் இலட்சக்கணக்கான பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதைத் திரும்பப் பெறவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். கோவை மருத்துவக் கல்லூரியிலே 1979-லே பட்ட மேற்படிப்பு பொது அறுவை சிகிச்சை, அதாவது M.S. படிப்பு அப்போதிலிருந்து இருந்தது. கடந்த ஆண்டு அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் மாணவர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள்தான். இரண்டே இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். இதுபோன்ற பட்ட மேற்படிப்பில், பல்வேறு கல்லூரிகளில் இதுபோன்ற நிலை இருந்தது. அதை உடனடியாக

மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அத்தனை மருத்துவக் கல்லூரிகளுக்கும் நிதி ஒதுக்கி, அதற்கான பேராசிரியர்களை நியமித்து—இப்போது நீங்கள் கூறிய அந்த கோவை மருத்துவக் கல்லூரி ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கண்டிப்பாகக் கிடைக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. அதேபோல, என்னுடைய தொகுதிப் பிரச்சினை, ரொம்ப முக்கியமான பிரச்சினை. பெண்ணாகரம் தொகுதியில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம். தருமபுரி மாவட்டம், வேலூர் மாவட்டம் இப்படி தொடர்ந்து பஞ்சம் இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் வட மாவட்டங்களில் 10 மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாவட்டங்களில் இருப்பவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று தெரியவில்லை. ஆக, இந்த மாவட்டம் பாதிக்கப்பட்ட மாவட்டம், வறண்ட மாவட்டம், அதுவும் தொடர்ந்து வறட்சி; இதற்கு நீங்கள் குடிநீர் ஆதாரத்தை நிறைவேற்றித் தரவேண்டும். அதற்காக இருக்கிற ஒரே திட்டம், பொன்னான திட்டம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள். நீண்ட நாள் கோரிக்கை. பொதுமக்கள் எல்லாம் போராட்டம்கூட செய்துகொண்டிருக்கிறார்கள். பஞ்சப்பள்ளி வாய்க்காலை, பாப்பாரப்பட்டியைச் சுற்றிலும் இருக்கக்கூடிய அந்த ஏரிகளுக்கு நீட்டித்துத் தரவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, ஒகேனக்கலில் நீர் மின் திட்டம் கொண்டுவருவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதையும் நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, முக்கியமான பிரச்சினை. இன்றைக்கு அரசு ஊழியர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன என்று சொன்னால், நிர்வாகத் தீர்ப்பாயம் முடங்கிக் கிடக்கிறது. அதில் தலைவர், உறுப்பினர்கள் நியமனம் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் எல்லாம் தீர்ப்பாயத்திற்குப் போவதா, இல்லையா? முடங்கி இருக்கிறது. அது மற்ற மாநிலங்களில் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பாயம் முழுமையாக இயங்குவதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆக, இதையே ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேன்



என்று சொன்னால், நான் உங்களைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே தமிழ் மண்ணில் இஸ்லாமியர்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும், ஒட்டுமொத்தமாக சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு இல்லாமல் இருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் ஒரு குழு போடுங்கள். ஒரு குழு போட்டு, அந்தக் குழுவின் அடிப்படையில் பரிந்துரை செய்யுங்கள். (குறுக்கீடு) இதிலே பிரித்துக் கொடுத்து. . .

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கேட்பது-அவர்களுக்கு எந்த வகையில் செய்வது? மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து ஒதுக்கிக் கொடுப்பதா, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து ஒதுக்கிக் கொடுப்பதா, அல்லது எவ்வாறு ஒதுக்கிக் கொடுப்பது என்று கேட்க விரும்புகிறோம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமியர்களும், கிருஸ்தவ சமுதாய மக்களும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இன்றைக்கு அவர்களுக்கு சலுகை வழங்கப்பட்டு வருகிறது. மண்டல் கமிஷன் உத்தரவின்படி மேற்கொண்டு B.C.-யிலிருந்து M.B.C.-ஆக்க வேண்டுமென்றாலும் அல்லது எந்த மாற்றம் செய்ய வேண்டுமென்றாலும்கூட, அதற்கென்று—மாநில கமிஷன் ஒன்று, ஆணையம்—தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அந்த ஆணையம் அளிக்கின்ற பரிந்துரையின் அடிப்படையில்தான் அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவத் துறையின் சார்பாக மருத்துவக் கல்லூரி இடங்கள் ஒதுக்கும்போது 15% reservation, all India quota கொடுக்கிறோம். அதிலே எந்தவிதமான reservation-ம் கிடையாது. ஆகவே, இதையும் தாங்கள் மத்திய அரசிடம் சொல்லி, இதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் நாங்கள்கூட டெல்லியிலே ஒரு மாநாட்டை நடத்தி இட ஒதுக்கீடு இப்படித்தான் இருக்க வேண்டும், இந்த 15 சதவிகிதம், மற்ற எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இங்கே உங்களைக்

கேட்பதெல்லாம், (குறுக்கீடு) இல்லை. இங்கே என்ன செய்ய வேண்டுமென்றால் நீங்கள் compartment reservation, தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டுவாருங்கள். அதைக் கொண்டுவந்தால் எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கும். அதை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, நம்முடைய கோயில்களில் எல்லா ஜாதியினரும் அர்ச்சகர்களாகலாம். நமது மரியாதைக்குரிய திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், ஆசிரியர் வீரமணி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து நேரிலே மனு கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

* **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மணி அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்வது, தமிழ், தமிழ் என்று பேசிக் கொண்டிருக்கிறார். இந்த நாடு *1947* ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு காங்கிரஸ் பேரியக்கம் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த நேரத்தில் சுந்தரலிங்கனார் என்பவர், இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டார். ஆனால் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களால் அதைச் செய்ய முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சங்கரலிங்கம். (குறுக்கீடு)

*பிற்பகல் 02-00*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** சங்கரலிங்கம் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சங்கரலிங்கனார் என்றுதான் சொல்கிறேன். உங்களுக்கு காதில் அப்படிக் கேட்டிருக்கலாம். ஆனால், சங்கரலிங்கம், சுந்தரலிங்கனார் இல்லை, சங்கரலிங்கனார் என்பவர் இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டார். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் *1967* ஆம் ஆண்டு நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் என்பதை திரு. மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இப்போது அர்ச்சகராக வருவதைப்பற்றிச் சொன்னார்கள். ஆகமக் கல்லூரியில் படித்தவர்கள் யாராக இருந்தாலும் அர்ச்சகர்களாக வரலாம் என்ற ஒரு சட்ட விதி இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை திரு. மணி அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, இந்த மாநில பதிவுத் துறையிலே இன்னும் பதவி உயர்விலே நிறைய குளறுபடிகள் இருக்கின்றன. அந்தக் குளறுபடிகளை நீங்கள் நீக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆக, இந்த நிதிநிலை அறிக்கை என்பது ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், கல்விக்கு முக்கியத்துவமில்லை, வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவமில்லை, இங்கே வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவமில்லை, வேளாண்மைக்கு முக்கியத்துவமில்லை, தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவமில்லை. இப்படி எல்லா நிலைகளிலும் முக்கியத்துவம் இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது. ஒட்டுமொத்தமாக தமிழுக்கு முக்கியத்துவமில்லை. எனவே, முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை, புதுமை ஏதும் இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கை. கடந்த ஆண்டினுடைய மறு பிரதியாக, நகலாக இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் வறட்சி மலிந்திருக்கிறது என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

## 4. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை *(11-03-2005)* வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை, *11-03-2005* வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (11-03-2005) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-03-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதும் இல்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

51. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஆறாவது அறிக்கை (2003-2005).

52. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஏழாவது அறிக்கை (2003-2005).

53. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து எட்டாவது அறிக்கை (2003-2005).

54. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஒன்பதாவது அறிக்கை (2003-2005).

55. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை (2003-2005).

56. பொது நிறுவனங்கள் [illegible] அறுபத்து ஆறாவது அறிக்கை (2003-2005).

226635
சென்னை-600 009

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.